விலை ரூபா 20 | பக்கங்கள் 32

# உதயன்

சுடர் 31 | கதிர் 062 | வள்ளுவர் ஆண்டு 2047 | தை 13, புதன்கிழமை 27.01.2016

இவ்வாண்டின் கொவிசெத
முதல் கோடீஸ்வரர் கடந்த 14ஆம் திகதி உருவாகினார்
அடுத்த நான்கு கோடியின் உரிமையாளர் நீங்களே
நாளைய சூப்பர் பரிசு
ரூபா 43,505,197.60
NATIONAL LOTTERIES BOARD

## பெப்ரவரி 18 க்கு முன்னர் தீர்வுத்திட்ட முன்மொழிவு

### வடக்கு முதல்வர் தலைமையில் 19 பேர் கொண்ட குழு தயாரிக்கும்

யாழ்ப்பாணம், ஜன. 27
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில், புதிய அரசமைப்புக்கான முன்மொழிவுகளை மேற்கொள்வதற்காக - தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக, முதலமைச்சர் உள்ளிட்ட 19 பேரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.
பல தரப்புக்களின் ஆலோசனைகளைப் பெற்று அடுத்த மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர், வடக்கு மாகாண சபையில் இந்தக் குழு முன்மொழிவு வரைவை - தீர்வு பக். 25

## நில வெடிப்பு இடம்பெற்ற பகுதிகளில் பெரும் குழிகள்

### பயிருக்கு நீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் பெரும் திண்டாட்டம்



யாழ்ப்பாணம், ஜன. 27
அச்சுவேலி மேற்கு நவக்கிரிப் பகுதியில் நிலவெடிப்பு இடம் பெற்ற இடத்தைச் சுற்றி உள்ள தோட்டப் பயிர்களுக்கு நீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள்ள தாகத் தோட்ட உரிமையாளர்கள் கவலை பக். 28

## சமஷ்டி ஆட்சிக்கு ஆதரவு தாருங்கள்

### சிங்கள மக்களிடம் முதன்முறையாக தமிழ்க் கூட்டமைப்பு பகிரங்கக் கோரிக்கை

கொழும்பு, ஜனவரி 27
சிங்களத் தேசியத் தலைவர்களால் முன்மொழியப்பட்ட சமஷ்டி ஆட்சி முறையை நடைமுறைப்படுத்துமாறு உங்கள் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுத்து எங்களுக்கு ஆதரவளியுங்கள் என பெரும்பான்மை (சிங்கள) இன மக்களிடம் பகிரங்கமாகக் கோரிக்கை விடுக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பக். 25



## பிரகீத் கடத்தல் வழக்கிலிருந்து அரச சட்டவாளர் திடீர் நீக்கம்

### இராணுவத்தின் மீது குற்றச்சாட்டு முன்வைத்ததன் எதிரொலியா?

கொழும்பு, ஜன. 27
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில், இராணுவத்தினர் ஒத்துழைக்கவில்லை என்று தொடர்ச்சியாகக் குற்றம் சுமத்தி பக். 29

## பதவிக்காலத்தை ஒரு வருடம் நீடித்தால் காணாமற்போனோரைக் கண்டறிவோம்

### ஆணைக்குழுவின் தலைவர் பரணகம தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 27
காணாமற்போனவர்கள் உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா? என்பதை, தமது ஆணைக்குழுவின் பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடித்தால் கண்டறிந்து தெரிவிப்போம் என்று, காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைசெய்யும் ஜனாதிபதி பக். 25

## அமெ. வங்கிகளில் எனது பணமா? நிரூபித்தால் கழுத்தறுத்து சாவேன்

### சவால் விடுகிறார் மகிந்த

கொழும்பு, ஜன. 27
அமெரிக்க வங்கிகளில் தனது பெயரில் ஒரு டொலரேனும் வைப்பிலிடப்பட்டுள்ளதை நிரூபித்தால், கழுத்தை அறுத்துக் கொண்டு உயிர் துறப்பேன் என்று பக். 06

## விளக்கமறியலில் ஞானசார தேரர்



கொழும்பு, ஜன. 27
நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பக். 27

## இலங்கையுடன் உறவுக்கு இந்திய அரசு முன்னுரிமை

### குடியரசுத் தின நிகழ்வில் இந்தியத் தூதர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27
இந்தியாவின் அயல்நாடுகளுடனான உறவில் இலங்கைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.
இந்தியாவின் வளர்ச்சி அயல்நாடுகளுடனான சுமுகமான உறவில் பக். 29

## தீர்வு தயாரிக்கும் குழுவுக்கு பெப். 5 வரை ஆலோசனை

### தனியார், அமைப்புகள் வழங்கலாம் என வடக்கு மாகாண சபை நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27
வடக்கு மாகாண சபையினால் புதிய அரசமைப்புத் தயாரிப்புக்கு நியமிக்கப்பட்ட குழுவுக்கு எதிர்வரும் 5 ஆம் திகதி வரையில், தனி பக். 25

## வெளிநாட்டு நீதிபதிகளின் பிரசன்னம் அவசியமானது

### வலியுறுத்துகின்றது அமெரிக்கா



ஜெனிவா, ஜன.27
இலங்கை அரசு ஏற்படுத்தும் பொறுப்புக்கூறலுக்கான விசாரணைப் பொறிமுறை நம்பகத்தன்மை வாய்ந்ததாக விளங்குவதற்கு வெளிநாட்டு நீதிபதிகளின் பிரசன்னம் அவசியம் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை பக். 25

## கல்லுடன் கட்டப்பட்டவாறு சிறுவனின் சடலம் கிணற்றில் மீட்பு

திருகோணமலை, ஜன. 27
திருகோணமலை சம்பூரில் கல்லுடன் சேர்த்துக் கட்டப்பட்ட நிலையில் கிணற்றிலிருந்து சிறுவன் ஒருவரது சடலத்தை நேற்று மீட்டுள்ள பக். 25

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்னும் 2 நாட்களில்
JITF 2016




Sri Lanka Telecom
Mobitel
உங்களுடனே. என்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமையாளர் விழிப்படைந்ததால் முறியடிக்கப்பட்ட திருட்டு முயற்சி

### நாச்சிக்குடாவில் நேற்று அதிகாலை சம்பவம்

நாச்சிக்குடா, முழங்காவில் சந்தைக்கு முன்பாகவுள்ள புடவைக்கடையொன்றில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட திருட்டு முயற்சி உரிமையாளரின் சாமர்த்தியத்தால் முறியடிக்கப்பட்டது.

புடைவைக்கடையில் நேற்று முன்தினம் அதிகாலை 3.45 மணியளவில் திருட்டு முயற்சி இடம்பெற்றுள்ளது.

குறித்த கடை உரிமையாளரின் வீட்டுடன் இணைந்துள்ளது. இதன்போது, கடையின் கதவை




உடைத்துதிருடர்கள் உள்நுழைந்துள்ளனர். கடையின் கதவினை உடைக்கும் சத்தம் கேட்டதும் விழித்தகடையின் உரிமையாளர், சி.சி.ரி.வி. கமரா பதிவை அவதானித்துள்ளார்.

இந்த நிலையில் கடைக்குள் உரிமையாளர் உள்நுழைவதை அறிந்த திருடர்கள், அங்கிருந்து தப்பித்துள்ளனர். இதனால், குறித்த கடையில் எந்தப் பொருள்களும் திருட்டுப் போகவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அறிந்த முழங்காவில் பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-வ)

எனினும் குறித்த திருட்டு முயற்சியில் ஈடுபட்ட இருவரின் அடையாளங்கள் குறித்த வியாபார நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளன.

குறித்த காணொலியில் அடையாளம் காணப்படும் நபர், அண்மையில் பருத்தித்துறை நகைக் கடைகளில் திருட்டு சம்பவத்தில் பதிவாகிய சி.சி.ரி.வி. காணொலியில் காணப்படும்நபரின் உருவத்துடன் ஒத்துக்காணப்படுவதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நாச்சிக்குடா, முழங்காவில் சந்தைப் பகுதிக்கு முன்பாகவுள்ள

# மோட்டார் திணைக்களம் மூலம் ரூபா 47.5 மில்லியன் வருமானம்

### யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு

யாழ்ப்பாணம். ஜன.27

யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் மூலம் கடந்த ஆண்டு அரசுக்கு 47.5 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது என்று மாவட்டச் செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் மூலம் மட்டும் கடந்த ஆண்டில் சாரதி அனுமதிப் பத்திரம் பெறல், புதுப்பித்தல் நடவடிக்கைகள் மூலமே இந்த வருமானம் கிடைத்துள்ளது என்று மாவட்டச் செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதன் பிரகாரம் மாதம் ஒன்றுக்கு சராசரியாக சுமார் 35 லட்சம் ரூபாவுக்கும் குறையாத பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு செலுத்தப்பட்ட பணத் தொகை மாத அடிப்படையில் ஜனவரி மாதம் 35 லட்சத்து 8 ஆயிரத்து 550 ரூபாவும் , பெப்ரவரி மாதம் 38 லட்சத்து 41 ஆயிரம் ரூபாவும், மார்ச் மாதம் 40 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் , ஏப்ரல் மாதம் 33 லட்சத்து 44 ஆயிரம் ரூபாவும் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

அதேபோல் மே மாதம் 31 லட்சத்து 85 ஆயிரத்து 850 ரூபாவும் , ஜூன் மாதம் 34 லட்சத்து 2 ஆயிரம் ரூபாவும், ஜூலை மாதம் 40 லட்சத்து 67 ஆயிரத்து 500 ரூபாவும் , ஓகஸ்ட் மாதத்தில் 39 லட்சத்து 59 ஆயிரத்து 300 ரூபாவும் வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

அதேபோல் செப்ரெம்பர் மாதத்தில் 50 லட்சத்து 41 ஆயிரத்து 150 ரூபாவும், ஒக்ரோபர் மாதத்தில் 46 லட்சத்து 10 ஆயிரத்து 350 ரூபாவும் , நவம்பர் மாதத்தில் 34 லட்சத்து 32 ஆயிரத்து 700 ரூபாவுடன் டிசெம்பர் மாதம் கூடிய தொகையாக 50 லட்சத்து 2 ஆயிரத்து 900 ரூபாவும் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

ஆண்டு முழுவதும் மொத்தமாக 47.5 மில்லியன் ரூபா மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் மூலம் 2015 ஆண்டு யாழ். மாவட்டத்தில் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-101)

# மதுவரித் திணைக்களத்தினருக்கு இலஞ்சம் கொடுக்க சங்க ஊழியரிடம் முற்பணம்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 27

மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுப்பதற்காக கிளிநொச்சி பனை - தென்னை கூட்டுறவுச் சங்க ஊழியர்களிடம் முற்பணம் பெறும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. - இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன் நேற்றைய மாகாண சபை அமர்வில் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தினார்.

கூட்டுறவில் பல மோசடிகள் பல விதமான வழிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிளிநொச்சி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் பல லட்சம் ரூபா பெறுமதியான மோசடிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்குள்ள கூட்டுறவுப் பரிசோதகர்கள் இது தொடர்பில் மேலதிகாரிகளுக்கு அறியத் தந்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

கூட்டுறவு ஊழியர்களுக்கு சம்பளம் போதாமல் இருக்கின்றது.

ஆனால் கிளிநொச்சியில் பனை - தென்னை கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு முற்பணமாக ரூபா மூன்று லட்சம், ஐந்து லட்சம் என்று வழங்கப்படுகின்றது. இது பணமாக அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. முற்பணத்துக்குரிய காசோலையில் கையெழுத்து வாங்கப்படுகின்றது.

ஆனால் பணம் வழங்கப்படுவதில்லை. இதற்குக் காரணம் கேட்டால், அங்குள்ள முகாமையாளர், மதுவரித் திணைக்களத்தினருக்கு இலஞ்சம் கொடுக்க வேண்டும்என்று சொல்கின்றார். இது தான் நிலைமை. இவ்வாறான நிலையில் கூட்டுறவுத் துறையின் மோசடி மாத்திரம் அல்ல, மதுவரித் திணைக்களத்தினர் இலஞ்சம் வாங்குவது தொடர்பிலும் விசாரணை நடத்த வேண்டும் - என்றார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த எதிர்கட்சி உறுப்பினர் தவநாதன், சில இடங்களில் இலஞ்சம் வாங்கப்படுவதை யாராலும் கட்டுப்படுத்த முடியாது என்று குறிப்பிட்டார். (ற-ஜ-5)

# பொது இடத்தில் சிறுநீர் கழித்த ஐவர் கைது

யாழ்ப்பாணம்,ஜன.27

பொதுமக்கள் அதிகமாக பாவிக்கும் பொதுவிடங்களில் சிறுநீர் கழித்த ஐவர் கடந்த திங்கட்கிழமை யாழ். நகரப்பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்.நகரப் பகுதியை அண்டிய பொது இடங்களில் இவர்கள் அநாகரிமான முறையில் சிறுநீர் கழித்த போது சிவில் உடையில் இருந்த பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

இவர்கள் ஐவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் கூறினர். (ற-ஜ-107)

# நிலம் வெடித்த இடத்துக்கு பொதுமக்கள் செல்லத் தடை

### விரிசல் அதிகரிப்பதை அடுத்து

யாழ்ப்பாணம்,ஜன.27

அச்சுவேலி,நவக்கிரி பகுதியில் வீட்டிலும், தோட்ட நிலத்திலும் விரிசல் அதிகரித்து வருவதை அடுத்து குறித்த பகுதிக்கு பொதுமக்கள் செல்வது தடுக்கப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி கிராம சேவையாளர் தெரிவித்தார்.



இடர் இடம்பெற்ற இடத்தைச் சுற்றி மக்கள் உட்பிரவேசிக்காதவாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகளால் அபாய மஞ்சள் பட்டி கட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தப் பிரதேசத்தில் இடர் ஏற்பட்டுள்ளது என்று அடையாளப்படுத்தப்பட்ட அட்டை தொங்கவிடப்பட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி அதிகாலை அச்சுவேலி நவக்கிரி மேற்கு பகுதியில் அசாதாரணமான முறையில் வீட்டு நிலத்திலும், தோட்டநிலங்களிலும் விரிசல்கள் ஏற்பட்டன.

தற்போது, வெடிப்பு இடம்பெற்ற இடங்களில் மேலும் விரிசல்கள் அதிகரித்து வருகின்றன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது வரை 2.5 சென்ரி மீற்றர் வரை வீட்டு நிலத்தில் விரிசல் ஏற்பட்டுள்ளதுடன் நிலத்தின் ஒரு பகுதி தாழ்வாகச் செல்வதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (ற-ஜ-107)



இந்தியாவின் 67ஆவது சுதந்திரதின நிகழ்வு யாழ். இந்திய துணைத் தூதரகத்தில் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். (த-101-106)

# மோட்டார் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன.27

வீட்டின் முன் உள்ள விறாந்தையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு மானிப்பாய் கட்டப்பாலி வீதியில் இடம்பெற்றுள்ளது.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் 4 லட்சம் ரூபா பெறுமதியானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இரவு வீட்டு வெளிக்கதவை உடைத்து உள் நுழைந்து இந்தத் திருட்டு நடந்துள்ளது.

இது தொடர்பில் வழக்கு பதிவு செய்துள்ள மானிப்பாய் பொலிஸார் தொடர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஜ-107)

# விபத்தில் காயமடைந்த இளம் தாய் உயிரிழப்பு

கடந்த வருடம் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த சிறுவனின் தாயார், கடந்த வாரம் இடம்பெற்ற விபத் தில் படுகாயமடைந்து சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

கந்தையா வீதி சாவகச் சேரியைச் சேர்ந்த வசந்த குமார் திருவதனி (வயது 34) என்பவரே உயிரிழந்தார்.தனது பிள்ளைகளுடன் மோட்டார் சைக்கிளில் முழங்காவிலை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது பூநகரியில் கடந்த வெள்ளிக்கிழமை அவர் விபத்துக்குள்ளாகிக் காயமடைந்தார். மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்று அவர் உயிரிழந்தார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த வருடம் இவரது 9 வயதுடைய மகனும் பூநகரியில் வீதியோரமாக நின்றிருந்தபோது பலகைகளுடன் சென்ற வாகனம் மோதி இழுத்துச் சென்று உயிரிழந்தார் என்று கூறப்பட்டது. அவ்வாறு அவரது மகன் விபத்துக்குள்ளான இடத்திலிருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்தில் இந்தத் தாயார் விபத்துக்குள்ளாகியிருந்த நிலையில் அவரும் உயிரிழந்துள்ளார். (த-4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பியைத் தாக்கிய அண்ணன்

தாயுடன் வாக்குவாதப்பட்ட அண்ணன் வெளியில் அமர்ந்திருந்த தம்பியின் கண்ணுக்குள் மண்ணைக் கொட்டிவிட்டு வாய்க்குள் மண்ணை அடைத்துச் சித்திரவதை செய்ததுடன் இரும்புக் கம்பியால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மட்டுவில் பகுதியில் இடம்பெற்றது. தாக்குதலுக்கு இலக்கான தம்பி சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(த-9)

## கும்பாபிஷேகம்

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறும் என ஆலய பரிபால சபையினர் அறிவித்துள்ளனர்.

(ற-ஐ)

## விற்பனை முகவர் தேவை

முன்பள்ளி மற்றும் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்காக வெளியிடப்படும் தமிழ் மற்றும் ஆங்கில மாதாந்த வெளியீடுகளை விற்பனை செய்வதற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைதீவு,வவுனியா ஆகிய இடங்களிற்கு விற்பனை முகவர்கள் தேவை.

**விற்பனை அலுவலர் : கு. ராகுலன்: 077 263 9688 (யாழ்)**

ELTC Publication - Meesalai
077 074 3131 eltc.sl@gmail.com

## சமையல்காரர் தேவை

அன்னை கிருஷ்ணாபாய் மகளிர் இல்லத்திற்கு அனுபவமுள்ள பெண் சமையல்காரர் தேவை. வயதெல்லை 30 - 45 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும். உடன் தொடர்பு கொள்ளவும்.

கருணாலயம் 131, பலாலி வீதி,திருநெல்வேலி.
**தொடர்பு:**
**077 543 2831**

## சாவகச்சேரி நுணாவில் பதி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் தேவஸ்தான அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம்

| | |
|---|---|
| **கும்பாபிஷேக சுபநேரம்** | - 29.01.2016 வெள்ளிக்கிழமை காலை 6.36 மணி முதல் 08.06 மணிவரை |
| **கிரியை ஆரம்பம்** | - இன்று (27.01.2016) புதன்கிழமை. |
| **எண்ணெய்க்காப்பு** | - 28.01.2016 வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை. |

***மஹா கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதமகுரு**
வேதாகம கிரியா ஜோதி சிவஸ்ரீ தியாக கிருஷ்ண மூர்த்திக் குருக்கள் (BA, MA- கல்வயல்)

***ஸ்தானிக குரு - பிரம்ம ஸ்ரீ.தே.குருராஜசர்மா (கல்வயல்)**

கும்பாபிஷேக விழா கிரியைகள் யாவற்றிலும் கலந்து சிறப்பித்து இறையருள் பெற சிவ பக்த அடியார்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்,
ஸ்தானிக குரு,
ஆலய திருப்பணிச் சபையினர்.

(60717)(11,17,18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




சி.பத்மராஜா
BA, PGDE, MED, M.phil, Ph.D




ந.சதீஸ்கரன்
BEd, MED

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் 31ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப் பட்டம் பெற்ற முன்னாள் பிரதி அதிபர் திரு.சி. பதம்ராஜா அவர்களையும், முதுகல்விமாணிப்பட்டம் பெற்ற ஆசிரியர் திரு ந.சதீஸ்கரன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்
யா/செங்குந்த இந்துக் கல்லூரி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





யோ. தனரூபன்
(BBA)

ஜெ. பிரேம்லால்
(HNDIT)

யாழ் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாக இளமாணி (BBA) பட்டத்தைப் பெற்ற எமது சக ஊழியரான திரு.யோ.தனரூபன் மற்றும் BMICH இல் நடைபெற்ற பட்டமளிப்பில் உயர் தேசிய தகவல் தொழிநுட்ப கற்கைநெறி (HNDIT) பட்டத்தினைப் பெற்ற திரு.ஜெ. பிரேம்லால் அவர்களையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்கள்**
**ஊழியர்கள், த பினான்ஸ் கம்பனி - யாழ் பிராந்தியம்**

## தொழிலாளர்கள் தேவை

வவுனியாவிலுள்ள அரிசி ஆலைக்கு கூலித் தொழிலாளர்கள் உடன் தேவை.

தொடர்பு: 075 902 2330

## வேல் முருகன் ஜோதிடம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர்கள் முனியாண்டி சாஸ்திரி துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கைரேகை, நாம நட்சத்திரம், சாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தைப் பாக்கியம், கணவன்மனைவி ஒற்றுமையின்மை, வெளிநாட்டுப்பயணம் ஒருமுறை எம்மை சந்தித்துப் பாருங்கள்.

077 4681 573
076 8029 231

590/5, பருத்தித்துறை வீதி,
(மயிலூரான் மணியம் மகால்)
நல்லூர் கந்தசாமி கோயில் தெற்கு வீதி

## அரசாங்க அறிவித்தல்

ஒப்பந்ததாரர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட சமுக மட்ட அமைப்புக்களைக் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பதிவுசெய்தல்
யாழ் மாவட்டம்

மேற்படி விடயம் தொடர்பாக யாழ் மாவட்டச் செயலகம், மற்றும் யாழ் மாவட்டத்திலுள்ள பதினைந்து பிரதேச செயலகங்களின் ஊடாக 2016ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வேலைகளினை ஒப்பந்த அடிப்படையில் நிறைவேற்றி ஒப்படைப்பதற்கு விருப்பமுள்ள ஒப்பந்ததாரர்கள் மற்றும் சமுக மட்ட அமைப்புக்களினை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த விண்ணப்ப படிவங்களினை மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளை, மாவட்டத்திலுள்ள பதினைந்து பிரதேச செயலகங்கள் என்பவற்றில் அலுவலக நேரங்களிலும், மாவட்டச் செயலக www.jaffna.dist.gov.lk இணையத் தளத்தில் இருந்தும் தரவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் 15.02.2016 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கட்டுமானமும் பராமரிப்பும் தொடர்பான ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல் - 2016" எனக் குறிப்பிட்டு "அரசாங்க அதிபர், களஞ்சிய நலன்புரிக்கிளை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு அல்லது தங்கள் வதிவிட பிரதேசத்திற்குரிய பிரதேச செயலாளர்களுக்கு முகவரியிட்டு நேரடியாகவோ கடிதமூலமாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.

நா.வேதநாயகன்,
மாவட்ட செயலரும், அரசாங்க அதிபரும்
யாழ் மாவட்டம்.

## அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைகள் குழு

## பொதுமக்களுக்கான அறிவிப்பு

### பொதுமக்களுக்கான மாவட்ட அமர்வுகள் : யாழ்ப்பாணம்.

இருபது உறுப்பினர் கொண்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைகள் குழுவொன்று உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், நியமிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பில் மக்களிடமிருந்து வாய்மொழி மற்றும் எழுத்து மூலச் சமர்ப்பணங்களைப் பெறுவது குழுவின் பணியாகும். அதன் பின்னர், அந்தச் சமர்ப்பணங்கள் மீதான அறிக்கையொன்றையும் அதன் சிபார்சுகளையும் இக் குழு தயாரித்து அவற்றை அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான அமைச்சரவை உபகுழுவுக்குச் சமர்ப்பிக்கும்.

இந்த அமர்வுகளில் பொதுமக்கள் பங்குபற்றலாம். பொதுமக்கள் தங்கள் யோசனைகளை இந்தக் குழுவுக்குச் செய்வதற்கு அழைக்கப்படுகின்றனர். வாய்மூல யோசனைகளைச் செய்யும்போது, தமது யோசனைகளின் சாரம்சத்துடன் கூடிய எழுத்து மூலமான பிரதியையும் வழங்குவது விரும்பத்தக்க தாகும்.

மேற்படி குழுவானது கீழ்காணப்படும் இடத்திலும், நேரத்திலும், தினத்திலும் பொதுமக்களுக்கான அமர்வுகளை நடத்தவுள்ளதென்பதை அறியத் தருகின்றது.

இடம் : கேட்போர் கூடம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

**தினம் : 15 & 16 மாசி 2016**

**நேரம் : காலை 09.30 - மாலை 04.30**

**மேலதிக விவரங்களைப் பெற கீழ் வருவனவாயிலாகத் தொடர்பு கொள்ளவும்.**

**தொலைபேசி : 0112437676**

**தொலைநகல் : 0112328780**

**மின்னஞ்சல் :** constitutionalreforms@gmail.com

**வலைத்தளம் :** yourconstitution.lk

**தபால் : தவிசாளர்**
**அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான**
**பொதுமக்கள் யோசனைகள் குழு**
**செயலகம்**
**விஹாரமஹாதேவி பூங்கா, ஸ்ரேபிள்ஸ் வீதி,**
**கொழும்பு - 02.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப பாடசாலை மற்றும் ( Day Care Center) விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கோப்பாய்சந்திக்கும் கல்வியங்காட்டுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் ஆங்கில மொழி மூல ஆரம்ப பாடசாலையும் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான நிறுவனமும் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

முற்கூட்டிய பதிவுகளுக்கு அழைக்கவும்.

தொடர்பு: 071 525 5568

மலிவு விலையில்
அச்சு இயந்திரங்கள்
விற்பனைக்கு..!

**KORS** அச்சு இயந்திரம்
(Heidelberg) (29"X20")

**KORD** அச்சு இயந்திரம்
(25.25"X18")

**DAVIDSON**
அச்சு இயந்திரம் (A3 Size)

**KRAUSE**
Paper Cutter 36" (German)

**LAMINATION**
Machine

தொடர்புக்கு: 0777481696

மணமகள் தேவை 077 879 3563
யாழ்.இந்து. 28.03.1982, கி.பா- 16, 5'6" ரேவதி, அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு வலிகாமம் அல்லது தென்மராட்சியைச் சேர்ந்த அழகான மணமகள் தேவை. (68328) (11,16)

வீடு வாடகைக்குத் தேவை
தொடர்பு: 077 607 0549
யாழ் மாநகரசபை எல்லைக்குள் அரச உத்தியோகம்பார்க்கும் குடும்பத்துக்கு 3அறைகளுடன் மற்றும் சகலவசதியும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. (68352) (14,15)

தேவை
எமது மீள் சுழற்சி நிறுவனத்திற்கு பழைய பாவித்த காகிதாதிகள் தேவை. வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்
* நிறுவனங்கள், திணைக்களங்கள் என்பவற்றின் கேள்வி கோரல்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.
**Zero Wastes**
**218,K.K.S வீதி,யாழ்ப்பாணம்.**
021 300 3000,076 902 2221,071 902 2222
(68354)(13.18)

சாரதிகள் உண்டு 077 835 2394
கனரக வாகன
சாரதிகள் உண்டு. (68349) (11,15,18)

வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு
யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கையில் வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உள்ளன.
தொடர்புகொள்க: 077 344 8863

காணி விற்பனைக்கு
தொடர்பு: 077 6916 980
பருத்தித்துறை வீதியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் இருபாலை கிழக்கு றோட்டில் வீடு கட்டக் கூடிய 11 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி
**Spoken English**
Veta Fluency Diploma
O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்
யாழ்ப்பாணம் Sat, Sun 1.30 p.m. Sat, Sun 3.30 p.m. Mon, Fri 3.30 p.m.
நெல்லியடி Tue, Thu 3.30 p.m.
சாவகச்சேரி Tue, Thu 10.00 a.m.
சுன்னாகம் Mon, Wed, Fri 1.30 p.m.
கிளிநொச்சி Sat, Sun 10.00 a.m.
பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்
DMI COMPUTER EDUCATION
சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்
**IELTS**
IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்
**DMI COMPUTER EDUCATION**
No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130 K. K. S வீதி NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970
No.111,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655

## அலைபேசியில் ஆபாசக் காட்சி; ஒருவர் கைது

ஆபாசக் காட்சிகள் அடங்கிய அலைபேசி ஒன்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் யாழ். பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

யாழ்.பஸ் நிலையப் பகுதியில் வைத்தே குறித்த குடும்பஸ்தரைப் பொலிஸார் கைது செய்தனர். பொலிஸார் அவரை நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். அதன்போது அவர் தன் மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டதையடுத்து அபராதமாக மூவாயிரம் ரூபாவை செலுத்துமாறும் அலைபேசியைப் பறிமுதல் செய்யுமாறும் நீதிவான் சி.சதீஸ்கரன் உத்தரவிட்டார். (த-103)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலி**
**அருள்மிகு ஸ்ரீ விஷ்ணு துர்க்கை அம்மன் ஆலயம்**
**புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட**
**மஹா கும்பாபிஷேகம் - 2016.01.29**

அம்பிகை அடியார்களே!

மேற்படி ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக கிரியைகள் இன்று 27.01.2016 ஆரம்பமாகி, 28.01.2016 எண் ணெய்க்காப்பும், 29.01.2016 மஹா கும்பாபிஷேகமும் நடைபெறுவதோடு 29.01.2016 தொடக்கம் 09.02.2016 வரை மண்டலாபிஷேகமும் நடைபெறும். அடியார்கள் கலந்துகொண்டு அம்பிகையின் அருள் பெறுக.

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. (66850)(11.15.18) ஆலய தர்மகர்த்தா





உ
சிவமயம்
**திருக்கேதீச்சரத்தில்**
**மகா சிவராத்திரிப் பெருவிழா**

மன்மத ஆண்டு மாசித் திங்கள் 27ஆம் நாள் (07.03.2016) திங்கட்கிழமை மகாசிவராத்திரிப் பெருவிழா வழமைபோல் திருக்கேதீச்சரத்தில் இடம் பெறும். எனினும் பாலாயம் (பாலஸ்தாபனம்) செய்யப்பட்டிருப்பதால் அபிடேகங்கள் ஸ்பன அபிடேகங்களாக மட்டுமே நடக்கும். மேலும் பாலாவித் தீர்த்தக்கரைக்குத் தீர்த்தமாட சுவாமி எழுந்தருளுவது இடம் பெறாது. ஆனால் மகாலிங்கப் பெருமானுக்குப் பக்தர்கள் குடங்களில் பாலாவித் தீர்த்தம் எடுத்து வந்து அபிடேகம் செய்யும் நிகழ்வு மற்றும் திருமுறை ஓதல். சொற்பொழிவுகள் முதலிய கலைநிகழ்ச்சிகள் வழமை போல இடம் பெறும்.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை
அ.திருநாவுக்கரசு
செ.இராகவன்
இணைச் செயலாளர்கள்.

**தொடர்பு : 023 205 0800, 023 323 0034, 011 258 5975**



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 31 ஆவது பட்டமளிப்பு விழாவில்
**B.B.M**
பட்டத்தைப் பெற்ற
**வென்சஸ்லாஸ் நிவேதிகா**
அவர்களை மென்மேலும் பட்டங்கள் பெறச் சிறப்புற வாழ்த்துகின்றோம்

Best Wishes

வாழ்த்துவோர்
அ.ஜேசுதாசன் குடும்பத்தினர்.
கழாவடி, ஆனைக்கோட்டை.





எமது வித்தியாலய ஆசிரியை
**திருமதி பாக்கியலீலா சுந்தரம்**
அவர்களின் **சேவை நயப்பு**

தேவையறிந்து சேவை செய்து
தேவை பல பூர்த்தி செய்த தேவியே!
மனதார்ந்த சேவைக்கு உளமார விடை கொடுக்க
மனை நோக்கிச் செல்லும் மாதரசியே!
வாழ்க பல்லாண்டு.... வாழ்க பல்லாண்டு....

**சேவை விவரம்**
15.03.1990 முதல் நியமனம் 15.03.1990 - 17.01.1995 - மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்
18.01.1995 - 04.01.2004 - மு/விசுவமடு மகா வித்தியாலயம்
05.01.2004 - 19.01.2016 வரை - யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் - மீசாலை.

Congratulations

வாழ்த்துவோர்:
**ஆசிரியர் நலன்புரிக்கழகம்.**
யா/அல்லாரை அரசினர்
தமிழ் வித்தியாலயம்- மீசாலை
(#2891)(11.15.18)



# மனதார வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 31 ஆவது பட்டமளிப்பு விழாவில்
**முதுகல்வியியல்மாணி (M.Ed)**
பட்டம் பெற்ற சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியை
**திருமதி சுதா ரமேஷ்**
B.Sc, PGD in Edu(OUSL).M.Ed
அவர்களைப் பாராட்டி மனதார வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள், பதவி உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

**ஆசிரிய நண்பிகள்**
Best Wishes
திருமதி க. அன்புச்செல்வி
திருமதி ந. ஜெயதேவி
திருமதி தி. பாரதி



**பரந்தன் இரசாயன கூட்டுஸ்தாபன முன்னாள் ஊழியர்கள் ஒன்றுகூடல்**

எதிர்வரும் (31.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பரந்தன் கொரக்கன்கட்டு பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் ஒன்றுகூடலில் சகல ஊழியர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

1. சி.சுந்தரலிங்கம்
2. யோ.கீர்த்பொன்கலன்
3. க.நாகமுத்து
4. நா.சண்முகரெத்தினம்
5. டேவிட்







கண்டி மாநகரில் கப்பிட்டிப் பொல மண்டபத்தில் மகாத்மாகாந்தி ஜெனன தினத்தில் வைத்திய கலாநிதி
**சிறீரங்கன் தியாகராஜா** இந்தியத் துணைத்தூதுவர்
**இராதா வெங்கட் ராமனுக்கு**
பொன்னாடை போர்த்தி கௌரவித்தமையையும் அந் நிகழ்வில்
இந்தியத் துணைத்தூதுவர் கனகசபை சுந்தரலிங்கம்
சமாதான நீதிவான் **காரை மணிகண்டனுக்கு** சமூகதீபம் என்னும்
கௌரவப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தமையையும்
மனமார பாராட்டி மகிழ்ச்சியடைகின்றேன்.
**நண்பன் லயன் கலாநிதி நா.தனேந்திரன்** (சமாதான நீதிவான்)
யாழ்ப்பாணப் பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கசமாசத் தலைவரும், யாழ்.மாவட்ட தேசிய தேசோதய சபைத் தலைவரும்.
**கொட்டடி, யாழ்ப்பாணம்.**
(சி.67818)(13.15)



# ஏலவிற்பனை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் 18.01.2016 அன்று கட்டாக்காலியாக திரிந்த குறிப்பிடப்படாத குருமண் நிறம் உடைய பசுக்கன்று ஒன்று உரிமை கோரப்படாத காரணத்தால் 29.01.2016 அன்று மு.ப. 10.30 மணிக்கு மாநகரசபை முன்றிலில் வைத்து பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது. ஏலத்தில் சித்தி பெறுபவர் உடனடியாக பணம் முழு வதையும் செலுத்தி கன்றினைப் பொறுப்பெடுத்தல் வேண்டும். ஏலத்திகதியை ஒத்திவைக்கும் அல்லது பிற்போடும் உரிமை மாநகர சபைக்கு உண்டு.

பொ.வாகீசன்- ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
26.01.2016 (சி.28915)(13.15.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின்,
வேலணை கமநல சேவைகள் நிலைய பிரிவின்
உதவியாளராகக் கடமையாற்றிய

**தர்மலிங்கம் கணேசலிங்கம்**

அவர்கள் 22.01.2016 வெள்ளிக்கிழமை
சிவபதமடைந்தார். அன்னாரின் மறைவினால்
துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா
சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரி சங்கம்**

**கமநல அபிவிருத்தித் திணைக்கள சமூகம், யாழ்ப்பாணம்.**

(68344)(13.15)

## விண்ணப்பம் கோரல்

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணினி வன் பொருள் பயிற்சி நெறியைத் தொடர்வதற் கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்தால் கோரப்பட்டுள்ளன. க.பொ.த சாதாரண தரம் வரை கற்ற, விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வய துக்கு மேற்பட்ட 25 வயதுக்குட்பட்ட தகுதியுடையவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபை, இலக்கம் 44 எனும் முகவரிக்கு எதிர் வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் கேட்டுக் கொண்டுள்ளார்.

(ற-ஜ-ரி2)

## அமெ. வங்கிகளில்

சவால் விடுத்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. பாணந்துறையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சியாளர்கள் எமது குடும்பத்தை ஆசியாவிலேயே மிகப்பெரிய செல்வந்தக் குடும்பமாக வர்ணிக்கின்றனர். அமெரிக்க வங்கிகளில் எனது பெயரில் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாக அரச தரப்பினர் குற்றம் சுமத்துகின்றனர். அமெரிக்க வங்கியில் எனது பெயரில் ஒரு அமெரிக்க டொலர் வைப்பிலிடப்பட்டுள்ளதாக நிரூபித்தால் கூட எனது கழுத்தை அறுத்துக் கொண்டு உயிர் துறப்பேன். முடிந்தால் அரசு தரப்பினர் இதனை நிரூபித்துக் காட்டவேண்டும் என்றும் சவால் விடுகின்றேன்.

எமது நாட்டுக்கு எதிராகக் கலப்பு நீதிமன்ற விசாரணை நடைபெறவுள் ளது. பௌத்த குரு மார்கள் இதனை எதிர்த்து வீதியில் இறங்குவார்கள். இதனைத் தடுப்பதற்காகவே பௌத்த குருமாரைக் கட்டுப்படுத்தும் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசு துடிப்பாக முயற்சிக்கின்றது.

இவ்வாறான விசாரணை இடம்பெறாது என்று ஜனாதிபதி கூறுகிறார். இது இடம்பெறும் என்று அரசுக்குள் வேறொரு கூட்டம் தெரிவிக்கிறது. இந்த விடயத்தில் உண்மையைக் கூறுவது யார், பொய் கூறுவது யார் என்ற உண்மை தெரியாமல் உள்ளது - என்றார். (த-5)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஞானாம்பிகை சிறீபதி



மாதகல் விபுலானந்தர் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானாம்பிகை சிறீபதி கடந்த 24.01.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லக்கண்டு தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - நாகம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற மார்க்கண்டு சிறீபதியின் மனைவியும் காலஞ்சென்ற நா.தணிகாசலத்தின் சகோதரியும் தவராணியின் மைத்துனியும் ஞானகலாதரன், லதீஸ்வரி(லண்டன்), ரட்ணேஸ்வரி (கலா), சுதர்சினி, கசேந்தினி ஆகியோரின் அன்புத்தாயாரும் கார்த்திகா, மோகனறஞ்சன் (லண்டன்), அரவிந்தன், கஜந்தன் ஆகியோரின் மாமியாரும் அக்சியா, ஜனுசா, பிரஜின், பவிசன், மனோஜ் (லண்டன்), லினோஜ் (லண்டன்), லினோஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2016) கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விபுலானந்தர் வீதி, மாதகல்.** 0777 919 309, 077 6970 875

தகவல்: **மைத்துனர் - மனோகரன்.**

## திருமதி பிள்ளையம்மா குலவீரசிங்கம்



சுழிபுரம் கிழக்கு சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிள்ளையம்மா குலவீரசிங்கம் நேற்று (26.01.2016) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னமுத்து தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான சித்திரம், தங்கச்சிப்பிள்ளை மற்றும் நல்லையா, ஐயாத்துரை, அப்புத்துரை ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதிகளின் அன்புமருமகளும் காலஞ்சென்ற குலவீரசிங்கத்தின் (ஓய்வு பெற்ற அதிபர்) பாசமிகு மனைவியும் ஸ்ரீதர் (சுழிபுரம்), கவிதா (கனடா), கோகுலன் (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்), சுகர்ணன் (ஆசிரியர்), கபிலன் (பிரான்ஸ்), சுகிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மல்லிகாதேவி நீதிராசா (கனடா), விலாசித்தா (முகாமைத்துவ உதவியாளர்), றபிந்தா (கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்), கஜமுக நாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கானகி, றிஷிகேஷ், நிதேஸ், வைஷ்ணவி, தர்மிலன், பிரமிலா, தக்ஷா, சகானா, ஸ்ரீராம், கீர்த்தனா, லக்ஷனா ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2016) நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.**

தகவல்: **பிள்ளைகள்.**

## தங்கராசா ஐயர் கனகேந்திரன் ஐயர் (சின்னத்தம்பி ஐயா)



தோற்றம் 19.01.1955 — மறைவு 24.01.2016

செல்வச்சந்நிதி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா ஐயர் கனகேந்திரன் ஐயர் (சின்னத்தம்பி ஐயா) 24.01.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசாமி ஐயர் - பவளக்கொடி தம்பதியரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற தங்கராசா ஐயர் (பண்டார ஐயர்) காலஞ்சென்ற இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், குணரட்ணாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகனும் வசந்தமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்மணி, சின்னையா மற்றும் மகேஸ்வரி காலஞ்சென்ற ரவீந்திரன் ஐயர், குகனேந்திரா ஐயர், அகிலேந்திரா ஐயர், இரத்தினவதனி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ரவிந்தன், காலஞ் சென்ற கஜந்தன், சுதர்சன் ஐயர், மயூரதன், கார்த்திகா, வைகுந்தன், சேந்தன் ஐயர் ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவரத்தினலிங்கம், ஜெயசுந்தரம், நாகேஸ் வரி, சசிகலாதேவி, இரட்ணகுமாரி, கோடீஸ்வரன், செல்வகுமார், ஜெயக்குமார், தேவமலர், இராசமலர், ஜெயமலர், யோகமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகிதா, தர்சினி, ஜனாட்சுதன் ஆகியோரின் அன்பு மாம னாரும் சரணியா, தர்சிகா, விசாளிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2016) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 4135 965**

தகவல்: **குடும்பத்தினர்.**

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 04.05.1950 — விண்ணில் 11.02.2012



**அமரர் கந்தையா தபேந்திரன்**

(ஓய்வுபெற்ற நிதி உதவியாளர், பிரதேச செயலகம்-கரவெட்டி)

திதி:- தைத்திங்கள் சங்கடஹர சதுர்த்தி (27.01.2016)

" தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

என்ற பொய்யா மொழியான் கூற்றை உமதாக்கி
உங்களை உருக்கி எங்களை ஆளாக்கினீர்களே....
எங்கே போய்த் தேடுவோம் அப்பா....
உங்கள் கனிந்த முகத்தையும் மென் சிரிப்பையும் .......

" சாய் இல்லம்"
கரவெட்டி மத்தி.
கரவெட்டி

உங்கள் கொள்கைகளை மனதிருத்தி
உங்கள் வழியில் வாழும்
உங்கள் குடும்பத்தினர்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16.08.1947 — மறைவு 30.01.2013



**அமரர் சதாசிவம் தெட்சணாமூர்த்தி**

*(ஓய்வுபெற்ற முதல்வர்)*

( திதி : சங்கடஹரசதுர்த்தி )

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து எல்லோரின் உயர்விற்காய்
பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த
என்னுயிர்த் தெய்வமே !
விண்ணுலகம் சென்று இன்று மூன்றாண்டுகள் ஆனாலும்
உங்கள் பிரிவுத்துயர் என் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்காத நினைவுகளுடன் உங்கள் மனைவி
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!*

[illegible] செட்டிவேலன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

மனைவி - சிவயோகமணி

(67855) (14.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. மாவட்டத்துக்கு நிரந்தர பஸ் நிலையம்

## விரைவில் அமைக்க நடவடிக்கை என வடக்கு போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.27
முல்லைத்தீவு மாவட்டத்தில் விரைவில் நிரந்தர பஸ் நிலையம் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றும் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தின் போதே வடக்கு அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான நிரந்தரமான பஸ் நிலையம் நீண்டகாலமாக அமைக்கப்படாதுள்ளது. அதனால் வெளி மாவட்டங்களில் இருந்து வரும் மக்கள் உட்பட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மக்களும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தனர்.

இந்த நிலையில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது போக்குவரத்துத் தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்பட்டதுடன், அவற்றை சீர் செய்வதற்கான திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

அதன் போது வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் தெரிவித்ததாவது-

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பஸ் நிலையம் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் காணி இல்லாத காரணத்தால் அது தாமதப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பஸ் நிலையத்துக்கான காணியை அடையாளம் காட்டினால் விரைவில் பஸ் நிலையத்தை கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

அத்தோடு கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கும் பஸ் நிலையங்கள் அமைப்பதற்கான நிதிகிடைத்துள்ளது. மக்களுடைய நலன் கருதி அங்கும் விரைவில் பஸ் நிலையங்கள் அமைக்கப்படும்.- என்றார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் பஸ் நிலையத்துக்கான காணி ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும், உடனடியாக பஸ் நிலையத்தை அமைக்கலாம் எனவும் தெரிவித்தார்.

(ற-ஐ-21,ரி7)

# அரச பஸ்ஸை தடுத்து வைத்த தனியார் பஸ் உரிமையாளர்கள்

## நேர அட்டவணையை மீறினர் என்று தெரிவித்து

முல்லைத்தீவு, ஜன.27
நேர அட்டவணையைப் பின்பற்றாமல் தன்னிச்சையாக போக்குவரத்தில் ஈடுபட்டதாக தெரிவித்து அரச பஸ் ஒன்றை நேற்று புதுக்குடியிருப்புப் பகுதியில் நீண்ட நேரம் மறித்து வைத்திருந்துள்ளனர் தனியார் பஸ் உரிமையாளர்கள்.

நீண்ட நேரமாக அரச பஸ்ஸை மறித்து வைத்திருந்ததால் பரந்தன்-முல்லை வீதியில் பஸ் போக்குவரத்துகள் எதுவும் நடைபெறாது பதற்றமாகக் காணப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள், வடமாகாணத்தின் ஐந்துமாவட்டங்களால் இணைந்து தயாரிக்கப்பட்ட நேர அட்டவணையைப் பின்பற்றாமல் போக்குவரத்தில் ஈடுபட்டன என்றும், கிளிநொச்சி சாலையில் இருந்து புறப்படும் குறித்த பஸ் முல்லைத்தீவு சாலைக்கு செல்லாமல் புதுக்குடியிருப்புடன் மீண்டும் திரும்புகின்றது என்றும் தெரிவித்தே தனியார் பஸ் உரிமையாளர்கள் ஒன்று கூடி குறித்த பஸ்ஸை மறித்து வைத்திருந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட போக்குவரத்து அதிகாரியின் இந்தப் பொறுப்பற்ற தன்மையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும், இதற்கு முன்பும் இவ்வாறான நடவடிக்கையை நிறுத்தக் கோரி முல்லைத்தீவு பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்த தனியார் பஸ் சங்கத்தினர், தற்போது மீண்டும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர்.

கிளிநொச்சிப் போக்குவரத்து அதிகாரியே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதால் தாங்கள் பெரும்பிரச்சினையைஎதிர்கொள்கின்றோம் என்றும் முல்லைத் தீவு தனியார் போக்குவரத்து நிர்வாக உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

(ற-ஐ-21,ரி7)

# ஹெரோயினுடன் கைதானவர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன.27
இளவாலை,சேந்தாங்குளம் பகுதியில் 104 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைதான சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிவான் ரீ.கருணாகரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார் என இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

120 மணித்தியாலங்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்குரிய கட்டளையை கடந்த வெள்ளிக்கிழமை இளவாலை பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் பெற்றிருந்தனர்.

துரித கதியில் விசாரணைகளை நிறைவு செய்த பொலிஸார், கைதான இருவரையும் நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.

கடந்த 21ஆம் திகதி,இளவாலை சேந்தாங்குளம் பகுதியில் 104 கிராம் ஹெரோயினுடன் மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர். (ற-ஐ-107)

# மனைவியை தாக்கியவருக்கு ஒத்திவைத்த சிறை

யாழ்ப்பாணம்,ஜன.27
கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் கட்டுவன் பகுதியில் மனைவியைக் கத்தியால் தாக்கிக் காயம் ஏற்படுத்திய நபருக்கு ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்த மல்லாகம் நீதிமன்று ஐந்து ஆண்டுகள் ஒத்தி வைத்த 2 வருட கடூழிய சிறைத் தண்டனையும் விதித்தது.

தெல்லிப்பழை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு விசாரணையின்போது சந்தேக நபரான கணவர் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அதையடுத்துக்குறித்த தண்டனை விதிக்கப்பட்டது.

(ற-ஐ-107)

# வடக்கு முதலமைச்சரின் கருத்து முஸ்லிம்களை அவமதிக்கிறது

## அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் அமைச்சர் ரிசாத் குற்றச்சாட்டு



முல்லைத்தீவு, ஜன.27
வடக்கு மாகாண முதலமைச்சர் தனது உரையில் முஸ்லிம் மக்களை அவதூறாகப் பேசினார் என்று சாடினார் அமைச்சர் ரிசாத் பதியுதீன். எனினும் நான் எந்த உரையிலும் முஸ்லிம்களைப் பற்றிப் பேசியதில்லை என்று திட்டவட்டமாக கூறினார் வடக்கு முதல்வர்.

முல்லைத்தீவுகரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற மாவட்ட அபி விருத்திக் குழுக் கூட்டத்தின் போதே இருவரும் இவ்வாறு தர்க்கித் தனர்.

மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் மாலை நேரம் காணிப் பிரச்சினைகள் தொடர்பான விடயங்கள் அதிகமாகப் பேசப்பட்டன. இதன் போது முல்லைத் தீவு மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் சட்டத்தை மீறி குடியேறுகின்றார்கள் என்றால் அவர்களைச் சட்ட ரீதியாக அணுக வேண்டும்அதைவிடுத்துஊடகங்களின் மூலம் அவதூறு கதைப்பதோ, நிகழ்வுகளின் போது அவதூறாகப் பேசுவதையோ தவிர்க்கவேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜனோபனால் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினருடைய கருத்துக்கு, வடக்கு முதல்வர்,தான் எந்தக் கூட்டத்திலும், நிகழ்விலும் முஸ்லிம்களைப் பற்றிப் பேசியதில்லை எனவும் நீங்கள்,நீங்களாக ஒவ்வொரு கருத்தையும் மாறி விளங்கினால் அதற்குத் தான் பொறுப்பு அல்ல என தெரிவித்தார்.

இதன் போது குறுக்கிட்ட அமைச்சர் ரிசாத் பதியுதீன் முதலமைச்சர் ஒரு கூட்டத்தின் போது தன்னுடைய வீட்டில் வேலைபார்த்த முஸ்லிம் நபர் சட்டத்துக்குப் புறம்பான வேலைகளில் ஈடுபட்டார் என்று தெரிவித்திருந்தார். ஒருதனி மனிதனை வைத்துக் கொண்டு ஒட்டு மொத்த முஸ்லிம்களையும் முதலமைச்சர் அவமதித்துள்ளார் என்று சாடினார்.

இந்த விடயத்தில் இருவரும் தர்க்கித்தபோதும், பின்னர் ஏனைய பிரச்சினைகள் குறித்து கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுத்தனர். (ற-ஐ-21,ரி7)

# மீள்குடியமர்ந்த மக்களுக்கு சட்ட உதவி ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜன.27
வளலாய் வடக்கில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கான சட்ட ஆலோசனைவழங்கும்நிகழ்ச்சித் திட்டம் வளலாய் வடக்கு கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இலங்கை சட்ட உதவி ஆணைக் குழு ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில் புதிதாக மீள்குடியேறிய மக்களுக்கு குடும்ப வன்முறை, தாபரிப்பு, விவாகரத்து, காணி தொடர்பான இலவச சட்ட ஆலோசனைகள் மற்றும் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களின் அவசியம் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டது.

கிராமத்தில் இடம்பெறும் சிறு, சிறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீதிமன்றின் ஊடாக எவ்வாறு தீர்வைப் பெறலாம் என்பது தொடர்பாக சட்டத்தரணி கே.காயத்திரியால் விளக்கம் அளிக்கப்பட்டது.

கிராமங்களில் சட்டம் தொடர்பில் விளக்கங்கள் மக்களை சென்றடையும் மட்டத்தில் எதிர்காலத்தில் வன்முறையற்றசமுதாயம்ஒன்றை உருவாக்கமுடியும்எனசட்டஉதவி ஆணைக்குழுவின் திட்டஉத்தியோகத்தர் ஆ.கோகுலன் தெரிவித்தார்.

கிராமமட்ட அமைப்புக்கள் ஊடாக இவ்வாறுதெளிவூட்டும்செயற்பாடுகள் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் தொடர்ந்து நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் கிராம சேவையாளர்,கோப்பாய் பிரதேச செயலக திறன்விருத்தி உத்தியோகத் தர் பிரியாவதி சசிகுமார் கலந்து கொண்ட மக்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். (ற-ஐ-107)

# மணவாளக் கோல திருவிழா

யாழ்ப்பாணம், ஜன.27
தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் மகா கும்பாபிஷேக நிகழ்வை முன்னிட்டு மணவாளக் கோலத் திருவிழா நிகழ்வுகள் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளன.

அதிகாலை 5.30 மணிக்கு உதயகாலப்பூசையுடன் ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வுகள் விசேட சந்திப்பூசை,சங்குப் பூசை, காலை சந்திப் பூசை,விஷேட திரவிய ஹோமம்,திரவிய அபிஷேகம் என்பவற்றைத் தொடர்ந்து காலை 9.30 மணியளவில் மகா சங்காபிஷேக நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூசை,திருவூஞ்சல் என்பவற்றைத் தொடர்ந்து அம்பாள் பூந்தண்டிகையில் எழுந்தருளி வெளிவீதியுலா வரும் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

(ற-ஐ-ரி2)

# வழிப்பறியில் ஈடுபட்டவர் புலனாய்வினரால் கைது

யாழ்ப்பாணம், ஜன.27
மானிப்பாய் பகுதியில் இரு வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்திய புலனாய்வுதுறை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சந்தேக நபர் உடுவில் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், இவர் [illegible] பகுதியைச்சேர்ந்த 25 வயதுடைய நபர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-107)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. கடற்பரப்பில் மீன்பிடிக்க வெளி மாவட்ட மீனவருக்குத் தடை

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

முல்லைத்தீவு, ஜன.27

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் வெளி மாவட்ட மீனவர்கள் பிடிபாடு அதிகரித்துள்ள (சீசன்) காலத்திலும், வேறு காலங்களிலும் மீன் பிடிப்பதற்கு தடை விதிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைதீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுநாயாற்று கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு தென்னிலங்கை மீனவர்களுக்கு தொடர்ச்சியாக அனுமதி வழங்கப்படுகின்றது. அதற்கு முல்லைத்தீவு மீனவ சங்கங்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன. அதையடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாயாற்றில் மீன்பிடிப்பதற்காக வெளி மாவட்ட மீனவர்கள் 25 பேருக்கு புதிதாக அனுமதிவழங்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரியொருவர் தெரிவித்திருந்தார்.

இதைக் கடுமையாக எதிர்த்த முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியதாஸ், நாயாற்றில் மீன்பிடிப்பதற்கு 78 வெளி மாவட்ட மீனவ படகுகளுக்கு 1983 ஆம் ஆண்டு வழங்கிய அனுமதியை ரத்துச் செய்யுமாறு நாங்கள் கடந்த காலங்களில் கோரிக்கை முன் வைத்து வந்துள்ளோம்.

எமது கோரிக்கையும் மீறி 78 மீனவப் படகுகளுக்கு மேலதிகமாக சுமார் 320 படகுகள் வரையில் நாயாற்றில் மீன்பிடியில் ஈடுபட்டன. இவர்களே சட்டவிரோத மீன்பிடி முறைகளை பெருமளவு பயன்படுத்துகின்றனர். இவ்வாறு இருக்க மேலும் 25 பேருக்கு அனுமதி வழங்கியிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் வெளி மாவட்ட மீனவர்களுடைய அத்து மீறல்கள் நிறுத்தப்பட வேண்டுமானால் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர முல்லைத்தீவுக்கு நேரடியாக வந்து எங்களுடைய நிலமைகளை அறியவேண்டும். - என்றார்.

இதற்குப் பதிலளித்த கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரி இந்த அனுமதிகள் அமைச்சர்களால் வழங்கப்படுவது என்றும் அவர்களுடைய பரிந்துரைக்கு அமையவே தென்னிலங்கை மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது என்றார்.

அதையடுத்து வெளி மாவட்ட மீனவர்கள் பிடிபாடு அதிகரித்த (சீசன்) காலத்திலும், வேறு காலங்களிலும் முல்லைத்தீவு கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்கு தடை விதிக்கப்படுகின்றது என்றும், இது குறித்து அமைச்சுக்கு அனுப்பி அறிவிக்குமாறும் ஒருங்கிணைப்பு தலைமைகளால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ற-ஜ-21,ரி7)



# சொந்தக் காணிகளைத் தருமாறு கேப்பாப்பிலவு மக்கள் ஆர்ப்பாட்டம்

## கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு முன்பாக

முல்லைத்தீவு, ஜன.27

கேப்பாப்பிலவு மக்கள் தம்மை சொந்த இடமான கேப்பாப்பிலவில் மீளக் குடியமர்த்துமாறும், மாற்றுக்காணிகள் ஏதும் தமக்கு வேண்டாம் எனத் தெரிவித்தும் நேற்றுமுன்தினம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புகுழுக் கூட்டம் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிலையில், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த வடக்குமாகாணமுதலமைச்சர், கைத்தொழில் அமைச்சர் ரிசாத், நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவமோகன், நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து காணி விடுவிப்பு தொடர்பான கோரிக்கைகளை முன் வைப்பதற்காக இவர்கள் பல மணிநேரம் வெய்யிலில் காத்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதேச செயலகத்துக்குள் செல்ல முற்பட்ட போதுபொலிஸாரால்தடுத்து நிறுத்தப்பட்டனர். தடைகளையும் மீறி உட்செல்ல முற்படும்போது, வெளியேவந்த அரசியல்வாதிகள், அடுத்த கூட்டம் ஒன்றுக்காக அவசரமாக செல்கின்றோம் என்று கூறி மக்களின் கோரிக்கைகளை பொருட்படுத்தாமல் சென்றனர்.

இதனால் சிறிது நேரம் கரைதுறைப்பற்று பிர தேச செயலகம் அமளிது மளியானது. அதேவேளை முல்லைத்தீவு கமக்கார அமைப்புக்கள் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரது இடமாற்றத்தை உடனடியாக நிறுத்துமாறு கோரி முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகளிடம் மனு கையளித்திருந்தனர். (ற-ஜ-ரி7)



வவுனியா பசார் வீதியில் மெகா கோப்சிற்றி மின் இலத்திரனியல் கடையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் கடையின் ஒருபகுதி சேதமடைந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம் பெற்றது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து தீ விபத்துக் குறித்த விசாரணைகளை மேற்கொண்டனர். மின் ஒழுக்குக் காரணமாக இந்தத் தீ விபத்து ஏற்பட்டு இருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. (ஜ-402)

# வீதிகளை புனரமைக்க தீர்மானம்

வவுனியா, ஜன.27

வவுனியாவில் பல்வேறு வீதிகள் மோசமாகக் காட்சியளிப்பதால் பொதுமக்கள் பெரும் சிரமப்படுவதுடன், அதனை உடனடியாக புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நேற்று முன்தினம் நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

வவுனியாவில் பறையனாலங்குளம், நெளுக் குளம், நேரியகுளம் வீதி பூவரசங்குளம், செட்டி குளம் வீதி, பூவரசங்குளம் வெங்கலச்செட்டிக்குளம் வீதி, கணேசபுரம் உட்பட பல்வேறு வீதிகள் மிக மோசமாக தேமடைந்துள்ளன. அதனால் பயணம் செய்வது பலருக்கு இடர்பாடாகவுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை உள்ளூராட்சித் திணைக்களங்கள் கவனத்துக்கு இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீடு, வடமாகாண சபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீடுகளில் இருந்து, வவுனியாவில் குறைந்த பட்சம் ஆயிரம் கிலோமீற்றர் வீதியையாவது இந்த ஆண்டுக்குள் திருத்த வேண்டும். அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ற-ஜ-402)

# புதிய நுழைவாயில் திறப்பு விழா இன்று



வவுனியா,ஜன.27

1999ஆம்ஆண்டுக.பொ.த சாதாரணதரம், மற்றும் 2002 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரம் கல்வி பயின்ற பாடசாலையின் பழைய மாணவர்களால் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நுழைவாயில் இன்று யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனால் திறந்து வைக்கப் படவுள்ளது.

இந்த நுழைவாயில் திறப்பு விழாவில் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி து.பிரபாகரன், மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பு.அலெக்ஸ் ராஜா, வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. செ.அன்ரன் சோம ராஜா, வவுனியா மாவட்ட அரச அதிபர் ஆ.சு.புஸ்ப குமார, கல்லூரி அதிபர் எஸ்.மரியநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (ற-ஜ-21)

# வவு. வர்த்தக மையத்துக்கான இடத் தெரிவில் இழுபறி நிலை

வவுனியா, ஜன.27

வவுனியா பொருளாதார வர்த்தக மையத்தை அமைக்க உரிய இடத்தைத் தெரிவு செய்வதில் வவுனியா மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் இழுபறி நிலை ஏற்பட்டது.

நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற வவுனியா மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில், தம்புள்ளப் பகுதியில் காணப்படுவதைப் போன்ற வர்த்தக மையம் ஒன்றை வவுனியாவில் அமைக்க அரசால் தீர்மானிக்கப்பட்டுள்ளதனால் அதற்கான இடத் தெரிவைத் தீர்மானிக்க சபைக்கு விடப்பட்டது.

இதனை ஒரு சாரார் ஓமந்தையில் அமைக்குமாறும், மறுசாரார் இரட்டைப் பெரிய குளத்தில் அமைக்குமாறும், இன்னொரு சாரார் புதிதாக திறக்கப்படவுள்ள வவுனியா தனியார் பஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் அமைக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சிப் பகுதிகளிலிருந்து வாகனங்களில் வந்து இங்கு பொருள்களைக் கொள்வனவு செய்யவும், வவுனியா மாவட்டத்தின் கிராமப்புறமக்கள், நகர்ப்புற மக்கள் வந்து பொருள்களை கொள்வனவு செய்வதற்கு வசதியான இடமாகவும் இந்தப் பொருளாதார வர்த்தக மையம் அமைய வேண்டும் என சபையில் ஆலோசிக்கப்பட்டது.

வவுனியாவில் புதிதாக திறக்கப்படவுள்ள தனியார் பஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில், காணி எடுப்பது கடினமான காரியம். ஏனெனில் விவசாய உற்பத்திப் பொருள் பண்ணைக் காணியை எடுப்பதில் பல்வேறு சிரமங்கள் உள்ளன.

வவுனியா ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தை அண்மித்த பகுதியில் காணிகள் போதியளவு உள்ளன. ஆனால் அந்தப் பகுதியில் எல்லா மாவட்டங்களையும் சேர்ந்தவர்கள் வந்து பொருள்களைக் கொள்வனவு செய்ய உகந்த இடமாக அமையுமா? என்ற கேள்வியெழுப்பப்பட்டது.

சிங்கள மக்கள் செறிந்து வாழும் இரட்டைப் பெரிய குளத்தில் காணிகள் உள்ளன. ஆனால் எல்லா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் பொருள்களை கொள்வனவு செய்வதில் போக்குவரத்து இடர்பாடு உள்ளது.

இவ்வாறு முன்னுக்கு பின்னாக பல்வேறு முரண்பட்ட கருத்துக்கள் முன் வைக்கப்பட்டமையால், பொருளாதார அபிவிருத்தி மையம் அமைப்பதற்கான இடம் குறித்து முடிவு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளி வெளிப் பகுதியில் சோதனைச் சாவடி தேவை

## பொலிஸாரிடம் பொதுமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.27
வடமராட்சி முள்ளி வெளிப் பகுதியில் பொலிஸ் சோதனைச் சாவடியொன்று நிறுவப்படவேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
குறித்த பகுதியூடாக வடமராட்சியில் இருந்து தென்மராட்சி நோக்கிச் செல்லும் பாதைகள் இரண்டினூடாகவும் பயணம் செய்யும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக தெரிய வருவதாவது:
வடமராட்சியில் இருந்து தென்மராட்சி நோக்கிச் செல்லும் வீதிகளின் இரு பக்கமும் புதர் மண்டிக் காணப்படுவதால் பொதுமக்கள் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.
கொடிகாமம் – பருத்தித்துறை வீதி மற்றும் சாவகச்சேரி – பருத்தித்துறைவீதி ஆகிய இருவீதிகள் இந்த பகுதிகளை ஊடறுத்துச் செல்கின்றன. இந்த இரு வீதிகளிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் கடந்த காலங்களில் மோசமான கொலைகள், கடத்தல்கள், பாலியல் குற்றச்செயல்கள் என்பன இடம்பெற்றுள்ளன என்றும் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

> கடந்த காலங்களில் மோசமான கொலைகள், கடத்தல்கள், பாலியல் குற்றச்செயல்கள் என்பன இடம்பெற்றுள்ளன என்றும் பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடம் முள்ளிப்பகுதியில், கழுத்தறுக்கப்பட்ட நிலையில் பெண்ணொருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்று சில மாதங்களுக்குள் முள்ளிப் பகுதியில் எரியூட்டப்பட்ட நிலையில் பெண்ணொருவருடையது என சந்தேகிக்கப்படும் எலும்புக்கூடுகளை பொலிஸார் மீட்டிருந் தனர்.
அந்த எலும்புக்கூடு யாருடையது என இது வரை பொலிஸாரால் அடையாளம் காண முடியவில்லை எனவும் பொதுமக்கள் குறிப்பிட்டனர்.
இதற்கு முன் இப்பகுதியூடாக ஓட்டோவில் சென்று கொண்டிருந்த பெண்ணையும் ஆணையும் வழிமறித்த கும்பல் ஆணைத் தாக்கிவிட்டு பெண்ணை வலுக்கட்டாயமாகக் கடத்திச் சென்று கூட்டாக வல்லுறவுக்குட்படுத்திய சம்பவமும் இடம்பெற் றது.
அத்துடன் அண்மையில் கடத்தப்பட்ட கொடிகாமத்தைச் சேர்ந்த பெண் கிராம சேவகரையும் இந்தப் பகுதியூடாக கொண்டு வருவதாகக் கிடைத்த தகவலை அடுத்து இந்த வீதிகளில் பொலிஸார் பாதுகாப்பை இறுக்கியிருந்த நிலையில், இந்த வீதியால் வந்தவர் ஒருவர் குறித்த வாகனத்தைக் கண்டு வாகன இலக்கத்தை பொலிஸாருக்கு வழங்கிய நிலையில் புதுக்குடியிருப்புப் பகுதியில் வைத்து குறித்த கிராம சேவகர் மீட்கப்பட்டிருந்தார்.
அத்துடன் அண்மையில் தனது 35 பவுண் நகைகள் இந்தப் பகுதியில் வைத்து கொள்ளைக் கும்பலால் பறித்தெடுக்கப்பட்டதாக பெண்ணொருவர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.
இவற்றைக் கருத்தில் கொண்டு இந்தப் பகுதியில் மிகவிரைவாக பொலிஸ் சோதனைச்சாவடி ஒன்றை அமைத்து பொதுமக்களின் பாதுகாப்புக்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-ஐ-109)

### புலமைப் பரிசிலில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு

சாவகச்சேரி, ஜன.27
கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளை கௌரவிக்க சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகம் முடிவு செய்துள்ளது.
அதற்கான விவரங்கள் தொடர்பான பதிவுகள் சங்க பொது முகாமையாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
ஐந்தாம் தரப் பரீட்சையில் சித்தி பெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் பற்றிய விவரங்களை உடனடியாக சங்கத் தலைமை அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு சங்கத்தலைவர் செ.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.
விரைவில் சங்கத்தால் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளதால் பெற்றோர் தமது பிள்ளைகள் சித்தி பெற்ற பாடசாலையின் அதிபரின் பரிந்துரையுடன் கடிதத்தைச் சமர்ப்பித்து பதிவு செய்யுமாறும் அறிவித்துள்ளார். (ந-ஐ-9)

### திறப்பு விழா

அச்சுவேலி, ஜன.27
முல்லைத்தீவு கல்வி வலய அலுவலகத்துக்கான மாடிக் கட்டடத் திறப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.
முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்தத் திறப்பு விழாவில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கு.சாள்ஸ் நிர்மநாதன், மருத்துவர் சி.சிவமோகன், திருமதி சாந்தினி ஸ்ரீஸ்காந்தராசா, வடக்குமாகாணக்கல்வி அமைச்சர் த.குருகுலராசா, வடக்கு மாகாணசபை உறுப்பினர் ம.அன்ரனி ஜெகநாதன், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-ஐ-11)



சுழிபுரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லத்துக்கான வயற் காணியில் புதிர் எடுத்துப் பொங்கல் பொங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை சுழிபுரம் முதியோர் இல்ல வளாகத்தில் அமைந்துள்ள வைரவர் ஆலயத்தில் நடை பெற்றது. (ந-ஐ-86)

## கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த கோரிக்கை

சாவகச்சேரி, ஜன.27
தென்மராட்சிப் பிரதேசத்தில் வீதிகளில் அலையும் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.
மகிந்த சிந்தனையின் பிரகாரம் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நாய்களைப் பிடித்து அழிக்கும் பணிகள் உள்ளூராட்சி சபைகளால் நிறுத்தப்பட்டுள்ளன.
அதனால் வீதிகளில் கட்டாக் காலிகளாக அலையும் நாய் களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. வீதிகளில் அலையும் நாய்களால் கடியுண்டும் வாகனங்களுடன் மோதுவதால் ஏற்படும் விபத்துக்களாலும் தினமும் பலர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.



தெருநாய்களுடன் வளர்ப்பு நாய்களும் வீதிகளில் நடமாடுவதால் பொது மக்கள் சொல்லொணாத கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். வீதிகளில் அலையும் கட்டாக்காலி நாய்களுடன் வளர்ப்பு நாய்களும் காணப்படுவதால் நாய்களினால் கடிபடுவோர் வைத்தியசாலைகளில் விலங்கு விசர் நோய்த்தடுப்பு ஊசி ஏற்றிக் கொள்ளவேண்டிய கட்டாய நிலையில் காணப்படுகின்றனர்.
கடந்த வாரம் சாவகச்சேரி சிவன் கோவில் பகுதியில் கட்டாக்காலி நாயால் கடியுண்ட நாய்க்குட்டி வீட்டில் உள்ளவர்களுக்கு கடித்த பின்னர் இறந்ததால் 12 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு விலங்கு விசர் நோய்த் தடுப்பு ஊசிமருந்து ஏற்றிக் கொண்டனர்.
அத்துடன் வீதிகளில் அலையும் நாய்களால் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களில் செல்வோரும் மோதுண்டு காயமடையும் சம்பவங்களும் தினமும் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் மிருசுவில் பகுதியில் வீதியின் குறுக்கே ஓடிய நாயைக் காப்பாற்ற பிக் அப் வாகனத்தை வீதி யின் மறுகரைக்குச் செலுத்திய போது வாகனம் வீதியை விட்டு விலகி தண்டவாளத்தில் ஏறியதில் அதில் பயணித்த மூன்று முதியவர்கள் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.
பிரதேசத்தில் நாய்களினால் பொது மக்கள் தினமும் பாதிப்புக்கு உள்ளாகி வருவதால் கட்டாக்காலிகளாக வீதிகளில் அலையும் நாய்களை அழிப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளனர். (ந-ஐ-9)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் குருதி வங்கி அமைக்க கோரிக்கை

சாவகச்சேரி, ஜன. 27
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வளாகத்தில் குருதி வங்கி ஒன்றை அமைக்க வேண்டும் என்று நோயாளர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்படும் நோயாளர்கள் குறிப்பாக விபத்தில் காயமடைந்தோர், கர்ப்பிணிகள் மற்றும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியோரைக் குருதி ஏற்றுவதற்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அதனால் நோயாளர்களின் குடும்பத்தினருக்கு நெருக்கடிகள் ஏற்படுகின்றன.
வைத்தியசாலை வளாகத்தில் குருதி வங்கி அமைப்பதற்கான இட வசதிகள் உள்ள போதிலும் கட்டடம் அமைக்க இதுவரை நிதி உதவி வழங்க சுகாதாரத்திணைக் களத்தினர் நடவடிக்கை எடுக்காதது குறித்தும் கவலை தெரிவித்தனர்.
அத்துடன் தற்போது வைத்தியசாலை வளாகத்தினுள் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டடம் அமைக்கும் பணிகள் துரித கதியில் இடம் பெற்று வருகின்றன. இந்தக் கட்டடத்தினுள் அதி தீவிர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைக்கூடம் போன்றவை உள்ளடக்கப்பட்ட நிலையில் அமைக்கப்பட்டு வருகின்ற போதிலும் குருதி வங்கி அமைப்பதற்கான எந்தவொரு ஏற்பாடும் மேற்கொள்ளப்படவில்லை.
சாவகச்சேரி வைத்தியசாலையில் குருதிக் காப்பகம் அமைப்பது அவசியம் எனக் கருதுவதால் வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தினர் நடவடிக்கை மேற்கொண்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் குருதிக் காப்பகம் அமைக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளனர்.
இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:
வைத்தியசாலையில் அனுப்பப்படும் பல்வேறு நோயாளர்களைக் குருதி ஏற்றுவதற்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வருகின்றோம். சாவகச்சேரி வைத்தியசாலை ஏ-9 வீதியுடன் இணைந்துள்ளதால் அடிக்கடி ஏற்படும் விபத்துக்களால் காயமடைவோருக்கும், பிரசவத் தாய்மார்களுக்கும் குருதி ஏற்றுவது அவசியம் என்பதால் அவ்வாறான நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவருகின்றோம். வைத்தியசாலையில் குருதிக் காப்பகம் இல்லாததால் இந்தநிலைமை. இருப்பினும் நோயாளர்களின் நலன்கருதி யாழ்.பிராந்திய சுகாதார திணைக்களம் வடமாகாண சுகாதார அமைச்சு மற்றும் சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு வைத்தியசாலை வளாகத்தில் குருதிக் காப்பகம் அமைத்துத் தருமாறு கோரி வருகின்றோம்.
பெரும்பாலும் இந்த வருடம் குருதிக் காப்பகத்துக்கான கட்டடம் அமைத்து வழங்குவதாக உரிய அதிகாரிகளால் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு அமைக்கப்படின் கொழும்பில் உள்ள தேசிய குருதி பரிவர்த்தனை நிலையத்தினர் [illegible] தேவையான [illegible] வழங்குவதாக கூறியுள்ளனர் என்று தெரிவித்தனர். (ந-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு எதிராக நேற்று முறைப்பாடு பதிவு

கொழும்பு, ஜன. 27
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

சிறுநீரக விற்பனைக் குற்றச்சாட்டு, தீர்வையற்ற வாகன அனுமதியை விற்பனை செய்வது தொடர்பான குற்றச்சாட்டு என இரண்டு குற்றச்சாட்டுக்களை இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கம் முறைப்பாடாகச் செய்துள்ளது.

மருத்துவர்கள் சிறுநீரக வர்த்தகத்தில் ஈடுபடுவது என்ற குற்றச்சாட்டு தீவிரமாகி விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், சிறுநீரக வர்த்தகத்துக்கு அரச மருத்துவ அதிகாரிகள் தொடர்புடையதாகக் குற்றஞ் சாட்டி அது பற்றிய விசாரணையைக் கோரியுள்ளது.

மருத்துவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட தீர்வை வரியற்ற வாகன அனுமதிப்பத்திரங்கள் இன்றுவரை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அண்மையில் அந்தத் தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரத்தை அரசு நிறுத்தவுள்ளதாக அறிவித்ததையடுத்து மருத்துவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு அரசுக்கு எதிராக கருத்துக் களையும் பரப்பி வந்தனர். ஆனால் அரசு அவர்களுக்கு வழங்கும் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரங்களை மருத்துவர்கள் வேறு சிலருக்கு விற்பனை செய்து வருகின்றனர் என்றும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. அது தொடர்பில் விசாரணை நடத்துமாறு சங்கம் கோரியுள்ளது. (த-4)

## கொலன்னாவை மாநகர சபை தலைவருக்குப் பிடியாணை

கொழும்பு, ஜன.27
கொலன்னாவை மாநகர சபை தலைவர் உட்பட நால்வருக்கு, கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்ற நீதிவான் மொஹமட் மிஹாலால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மீதொடமுல்லையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தவர்களை, நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுத்திருந்தும் அவர் முன்னிலையாகாத காரணத்தினாலேயே இந்தப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (த)

## இராணுவத்துக்குத் தேவையான அரிசியை வழங்குமாறு பணிப்பு

கொழும்பு. ஜன. 27
இராணுவத்துக்கும், வைத்தியசாலைகளுக்கும் மற்றும் ஏனைய நலனோம்புச் செயற்பாடுகளுக்கும் தேவையான அரிசியை அரச களஞ்சியங்களில் இருந்து பெற்றுக் கொடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த போகங்களில் கொள்வனவு செய்யப்பட்ட பெருந்தொகையான நெல் அரசின் களஞ்சியங்களில் இருப்பதால் அடுத்த போகத்தின் நெல் விளைச்சலைக் கொள்வனவு செய்வதற்கு அந்தக் களஞ்சியங்களை வெறுமையாக்கவேண்டியிருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தமுறை பெரும் போகத்தில் சாதனை படைக்கும் நெல் விளைச்சலை எதிர்பார்க்க முடிவதாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரிசியில் தன்னிறைவு காணும் மட்டத்துக்கு இன்று நாடு வந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

பாதுகாப்புப் படைகளுக்குத் தேவைப்படும் அரிசியை அரசின் நெற் களஞ்சியங்களில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு அவசியமான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பாதுகாப்புச் செயலாளருக்கும் பணிப்புரை விடுத்துள்ளார். (த-22)

## போர்ட் சிற்றி ஒப்பந்த பிரதியை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜன.27
கொழும்புத்துறைமுக நகரத் திட்டத்தை கைவிடுமாறு உத்தரவிடக் கோரி, சுற்றுச் சூழல் நீதிக்கான மையத்தால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் குறித்த மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இந்த வேலைத்திட்டம் தொடர்பான சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கையில் சில குறைபாடுகள் காணப்படுவதாக மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து, மனுதாரர் தரப்பு கோரியதுபோல அரசு புதிய மதிப்பீட்டு அறிக்கையை முன்வைத்துள்ளதாகக் குறிப்பிட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதிபதி விஜித் மலல்கொட, தனது தனிப்பட்ட கருத்துக்கு அமைய குறித்த மனு தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட தேவையில்லை எனவும் கூறியுள்ளார்.

இருப்பினும், எதிர்வரும் மார்ச் மாதம் 16ஆம் திகதி இந்த மனுவை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அவர், அன்றைய தினம் கொழும்புத்துறை முக நகரத் திட்டம் தொடர்பில் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரதிகளை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (த-சி)

# எரிபொருள்களின் விலைகளை குறைக்கக் கோரிப் போராட்டம்

கொழும்பு,ஜன.27
முன்னரைவிட உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை பெருமளவில் குறை வடைந்திருப்பதால் இலாபத்தைப் பொது மக்களுக்குப் பெற்றுத் தருமாறு பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் அரசை வலியுறுத்தும் போராட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய இயக்கத்தினதும் மற்றும் சிவில் அமைப்புக்களினதும் ஒழுங்கமைப்பில் அடுத்த வாரத்தில் அமைச்சின் முன்றிலில் இந்தப் போராட்டம் நடத்துவதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

> தற்போது உலகச் சந்தையில் மசகு எண்ணெய் பீப்பா ஒன்றின் விலை29.8 அமெரிக்க டொலர்கள் வரை குறைவடைந்துள்ளது.

தற்போது உலகச் சந்தையில் மசகு எண்ணெய் பீப்பா வொன்றின் விலை 29.8 அமெரிக்க டொலர் கள் வரை குறைவடைந்துள்ளது. இந்த இலாபத்தைக் கட்டாயமாக நுகர்வோருக்குப் பெற்றுத்தர வேண்டியுள்ளதாகச் சுட்டிக் காட்டும் நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே, எரிபொருள்களின் விலைகளை குறைத்து விடுமாறு வலியுறுத்தும் மக்கள் போராட்டத்தில் இறங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிகழ்ந்துள்ள மசகு எண்ணெய் விலையின் மிகப்பெரும் சரிவுக்கு அமைய இலங்கைப் பெற்றோ லியக் கூட்டுத்தாபனத் துக்குத் இலாபத்தையும்வைத்துக்கொண்டு ஒரு லீற்றர் பெற்றோலை 90 ரூபாவுக்கும் ஒரு லீற்றர் டீசலை 70 ரூபாவுக்கும் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உலகச் சந்தையில் திடீரென மசகு எண்ணெய் விலையில் அதிகரிப்பு ஏற்படும் போது உடனடியாகவே எரிபொருள் களின் விலைகளை உயர்த்தும் கூட்டுத் தாபனம் மசகு எண்ணெய் விலை மிகப் பெருமளவில் குறைவ டைந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எரிபொருள்களின் விலைகளைக் குறைக்காமல் இருப்பது கடுமையான குற்றம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த-ஜ-22)

ஜென்டில்மேன்களை
அலங்கரிக்கும்
சுதந்திரம்




அபிமானத்துடன் அணிய
எமரல்ட் பரிசாக வழங்கும்
இலங்கையின் தேசியக் கொடி
பதித்த பதக்கம் மற்றும் பொத்தான்

சுதந்திரதினத்தைச் சிறப்பிக்கும் வகையில் எமரல்ட் அறிமுகப்படுத்தியுள்ள சுதந்திரதின சிறப்பு சேர்ட் வகையில் ஒன்றை அல்லது எமரல்ட் கோப்பரேட், எமரல்ட் எக்டிவ், எமரல்ட் பெஷன், எமரல்ட் லியனாடோ சேர்ட்களில் இரண்டை வாங்கினால் இப் பரிசுகளில் ஒன்றை நீங்கள் பெறலாம்.

பில் மற்றும் சேர்ட்டின் கடதாசி லேபளை உங்கள் பெயர், முகவரி மற்றும் கையடக்கத்தொலைபேசி இலக்கத்துடன் எமக்கு அனுப்பினால், இப்பெறுமதி மிக்க பரிசு உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

இவ்வெகுமதி ஜனவரி 22 முதல் பெப்ரவரி 12 வரை மட்டுமே.
கையிருப்பு முடியும்வரை மட்டுமே. நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

எமரல்ட் சுதந்திரதின சிறப்பு சேர்ட் வகையை எங்கு பெறலாம் என்பதை தெரிந்துகொள்ள அழையுங்கள்: 0115 112 112

Emerald®
www.emeraldshirts.com
www.facebook.com/Emeraldsrilanka
www.twitter.com/Emerald_Shirts

விற்பனைப் பிரிவு, எமரல்ட் இன்டர்நெஷனல் (பிரை) லிமிட்டட், 104/4, தெஹிவளை வீதி, மஹரகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது பரணகம குழு

## பதவிக்கால நீடிப்புக் கோரிக்கைக்குப் பதிலில்லை

கொழும்பு, ஜன. 27

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்திவரும் மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு தனது பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் விடுத்த கோரிக்கைக்கு அவரிடமிருந்து இன்னும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என அறியமுடிகின்றது.



ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித்தருமாறு ஜனாதிபதிசெயலகத்திடம்தாம்கோரிக்கை விடுத்துள்ளபோதிலும் அதற்குரிய திகதி இன்னும் ஒதுக்கப்படவில்லை என்று காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஆணைக்குழுவின் தலைவரான மக்ஸ்வெல் பரணகம நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் செயற்பாடு தொடர்பில் கலந்துரையாடும் நோக்கிலேயே மேற்படி குழு ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு திட்டமிட்டுள்ளது. தமது ஆணைக்குழுவின் பதவிக்காலத்தை மேலும் ஆறுமாத காலத்துக்கு நீடிக்குமாறு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பரணகம குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 16ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அதன் பின்னர் மேற்படி ஆணைக்குழுவின் பதவிக்காலத்தை நீடிப்பதா? அல்லது கலைப்பதா? என்பது தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே இருக்கிறது. அந்தவகையில், இந்த ஆணைக்குழுவை கலைப்பதற்குரிய முடிவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுப்பார் என அறியமுடிகிறது. இதன் காரணமாகவே ஆணைக்குழுவுடனான சந்திப்புக்கு அவர் முக்கியத்துவம் வழங்கவில்லை எனக் கூறப்படுகிறது.

பரணகம ஆணைக்குழு கலைக்கப்பட்ட பின்னர் அதற்கு கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் காணாமற்போனோர் தொடர்பில் அமைக்கப்படவுள்ள பணியகத்திடம் ஒப்படைக்கப்படும் எனவும் அறியமுடிகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு வகுத்துள்ள நான்கு திட்டங்களில் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக தனி பணியகமொன்று அமைக்கப்படும் என்ற உறுதிமொழியும் இருக்கிறது.

எனினும், தமது ஆணைக் குழுவின் பணிகளை முன்னெடுப்பதற்கு மேலும் கால அவகாசம் வழங்குமாறு தாம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

போர்க்காலத்தில் வடக்கு, கிழக்கில் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக தமது ஆட்சியின் போது ஓய்வுபெற்ற நீதியரசர் மக்ஸ்வெல்பரணகமதலைமையில்மூவரடங்கிய குழுவொன்றை மகிந்த ராஜபக்ச அமைத்திருந்தார்.

இந்த விசாரணைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில், உள்ளக போர்க்குற்ற விசாரணையை முன்னெடுக்கும் வகையில் அதன் விடயப்பரப்பை மகிந்த விஸ்தரித்ததுடன், அனைத்துலக சட்டதிட்டம் தொடர்பில் பரணகம குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக டெஸ்மன் டி சில்வா தலைமையில் அறுவர் அடங்கிய ஆலோசனைக்குழுவொன்றையும் அமைத்திருந்தார்.

ஆட்சிமாற்றத்தின் பின்னரும் பரணகம குழுவுக்குப் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்புதல் வழங்கினார். அந்தவகையில் விசாரணைகளை முன்னெடுத்த பரணகம ஆணைக்குழு, போர்க்குற்றங்கள் தொடர்பிலான தமது இறுதி விசாரணை அறிக்கையை கடந்த ஓகஸ்ட் மாதம் ஜனாதிபதியிடம் கையளித்தது.

எனினும், காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை. அண்மையில்கூட யாழில் பொது அமர்வு நடத்தப்பட்டது.

அதன்பின்னர் அடுத்த அமர்வை எங்கு நடத்துவது என்பது பற்றி முடிவெடுக்கப்படவில்லை. அடுத்தகட்ட நவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதியின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது பரணகம ஆணைக்குழு. (த-சி)

## முன்னாள் மேயருக்கு பிணை

மட்டக்களப்பு, ஜன. 27

மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் திருமதி சிவகீர்த்தா பிரபாகரன், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தினால் நேற்று முன் தினம் இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் சிவகீதா பிரபாகரன் மேயராக இருந்த காலத்தில் நீதிமன்றத்தின் அனுமதியின்றி மட்டக்களப்பு மாநகர சபை பிரிவிலுள்ள கட்டடமொன்றை உடைத்துள்ளார்.

இதற்கு எதிராக அந்தக் கட்டட உரிமையாளர், மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து மட்டக்களப்புப் பொலிஸார் அது தொடர்பில் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தொடுத்தனர்.

இந்த வழக்கு தொடர்பில் கடந்த இரண்டு தவணைகளுக்கு மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயரான சிவகீதா பிரபாகரனை நீதிமன்றத்துக்கு முன்னிலையாகுமாறு, நீதிமன்றம் அழைப்பாணை விடுத்திருந்த போதிலும் குறித்த தவணைகளுக்கு இவர் முன்னிலை யாகவில்லை.

எனினும், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை குறித்த வழக்குக்கு இவர் முன்னிலையான போது இரண்டு சரீரப் பிணையில்செல்லமட்டக்களப்புநீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராஜா உத்தரவிட்டார்.

இந்த வழக்கு, எதிர்வரும் 10ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். (த)

## பள்ளத்தில் வீழ்ந்த ஹன்ரர் சாரதி சாவு

நுவரெலியா நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நல்ல தண்ணி காட்டுப் பகுதியில்ஹோட்டல் ஒன்றின் நிர்மாணப் பணிகளுக்கு மணல்களை ஏற்றிச்சென்று இறக்கிய பின் மீண்டும் திரும்புகையில், ஹன்ரர் குறித்த காட்டுப்பகுதியில் 30 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக் குள்ளானதில் ஹன்ரர் செலுத்திய சாரதி உயிரிழந்துள்ளார்.

ஹன்ரரில்ஏற்பட்ட இயந்திரக்கோளாறு காரணமாகவே இந்தவிபத்துநேர்ந்துள்ளதாகவும், விபத்து இடம் பெற்ற இடத்திலேயே சாரதி உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (த-ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## போர்க் குற்றங்களைக் கடாசிவிடும் அரசின் புதிய உத்தி வேண்டாமே...

போர்க்காலத்தில் இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்து விசாரிக்க உள்ள உள்நாட்டுப் பொறிமுறையில், வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை என்றாகி விட்டது! இந்தத் தகவலை நாட்டின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அறுத்து உறுத்து, உலகத்துக்கு அறிவித்துள்ளார்.

போர்க் காலக்குற்றங்கள் குறித்து விசாரிக்க உள்ள பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டேன் என்று அவர் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தெரிவித்துள்ளார்! கடந்த வாரத்தில் பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டியில் அதனை, இறுக்கமாக வெளிப்படுத்தி உள்ளார்.

உள்நாட்டு விவகாரங்களைத் தாமே, இப்போதைய தமது அரசே தீர்த்துக் கொள்ள உள்ளதாகவும், அவற்றில் வெளிநாட்டுத் தலையீடுகள் தேவை இல்லை என்றும் அவர் காத்திரமாக, வெட்டு ஒன்று துண்டு இரண்டாக எடுத்துக் கூறியுள்ளார்.

ஆயினும், அனைத்துலக நாடுகள் மட்டத்தில், ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை, இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஊன்றி வலியுறுத்தி உள்ளது.

நீதிக்கான நம்பிக்கை, அரசியல் கணக்கீடுகளின் அடிப்படையில் கைவிடப்பட்டதாக, போரினால் பாதிப்புற்ற குடும்பங்கள் உணர்ந்தால்-

மைத்திரிபால சிறிசேன அரசினால் நிறைவேற்றப்பட்ட உண்மையான உரிமைகளுக்குக் கிடைத்த வெற்றி, வெகு வேகமாக மங்கிப் போய் விடும், கரைந்துவிடும் என்றும், மனித உரிமைகள் கண்காணிப்பகம் அழுத்தி ஆழமாகச் சுட்டிக்காட்டி உள்ளது.

ஆயினும் மேற்சொன்ன அழுத்தம், கொழும்பு அரசினால் உள்வாங்கப்படுமா என்பது பென்னம் பெரிய வினாவாக உயர்ந்து எழுந்து நிற்கிறது. அதன் நிலைப்பாடு, உனக்கும் பேப்பே, உன் அப்பனுக்கும் பேப்பே என்ற போக்கு, நல்லிணக்க முயற்சிகளை, அவை நாடிய செயற்பாடுகளை துவைத்துத் துவம்சம் செய்துவிடும்!

மேலும், போரினால் எல்லா நிலைகளிலும் மிகப்பெரிய அளவில் பாதிப்புற்ற தமிழ் மக்களின் வாக்குகளினாலேயே, ஜனாதிபதித் தேர்தலின்போது, இப்போது ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ளவர் வெற்றி பெற்றார் என்பதை மறந்து போகமாட்டார் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அவர் நேர்கொண்ட பார்வையுடன் தடம்பதித்து நடந்து செல்வாரா அல்லது நிலைமை தலைகீழாகிப் போய்விடுமா என்பதிலேயே நல்லிணக்கம் தங்கியுள்ள, பரிதாப நிலை மேலுயர்ந்துள்ளது.

இத்தகு நிலையில்,--

நீதிக்கான நம்பிக்கை, அரசியல் அடிப்படையில் கைவிடப்பட்டது என்று போரினால் பாதிப்புற்ற குடும்பங்கள் உணரத் தொடங்கிவிட்டன.

அந்த நிலை நின்று தாம் அடி நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள், என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் எடுத்துக் காட்டி உள்ளமை, முற்றிலும் உண்மையின் பாற்பட்டதும் அர்த்தம் நிறைந்ததும் ஆகும்.

# அதிக பட்ச அதிகாரப் பகிர்வுக்கு
# ஒற்றையாட்சியில் சாத்தியம் இல்லை

## சமஷ்டி முறையே சரியான தீர்வு
## த.தே.கூ முன்வைக்கும் கோரிக்கை

**சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் மக்களுக்கு சமஷ்டி அமைப்பு முறையிலான ஒரு தீர்வையே விரும்புகிறார்கள் என்று கடந்த வாரம் அதன் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் கிளிநொச்சியில் நடந்த அந்தக் கட்சிக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார். இந்தச் செய்தி தமிழ் ஊடகங்களால் வெளியிடப்பட்டிருந்தது. சம்பந்தன் பின்னர் பத்திரி கைகளிடம் பேசியபோது இவ்வாறு கூறினார்: ஒற்றையாட்சி முறையில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வு சாத்தியம் இல்லை. அதில் சட்ட ரீதியிலும் அரசமைப்பு ரீதியிலும் சிக்கல்கள் இருக்கின்றன. 2015 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் எங்கள் நிலைப்பாட்டை மிகத் தெளிவாக நாங்கள் தெரிவித்திருக்கிறோம் என்று கூறினார்.

தமிழ் மக்கள் மற்றும் இப்போது மேற்கொள்ளப்படவிருக்கும் அரசமைப்புதிருத்தம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டிருந்த தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்தவற்றில் ஒரு பகுதி வருமாறு:

இலங்கையின் தமிழ் மக்களாகிய நாம், சம்பந்தப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் நியமனங்களின்படி தனித்துவ விழுமியங்களைக் கொண்ட மக்கள் நாங்கள். எமது நாட்டில் ஒரு மக்கள் சமுதாயம் என்ற முறையில் ஏனைய மக்கள் சமுதாயங்களுடன் கௌரவம், தன்மானம் மற்றும் சுயாதீனமாகவும் விடுதலையுற்றவர்களாகவும் அச்சமின்றி பேரினவாத மேலாதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்களாக அமைதியான சுகவாழ்வைத் தொடர்ந்து மேற்கொள்ள விரும்புகின்றோம். அவ்வித ஒரு மக்கள் சமுதாயம் என்ற முறையில் எமது வரலாற்று ரீதியான வாழ்விடங்கள், எமது ஒருங்கிணைந்த உரிமைகள் குறித்து கவலை கொண்டுள்ளோம். ஒரு மக்கள் சமுதாயம் மற்றும் ஒரு தேசியம் என்ற முறையில் பிரிக்கப்படாத ஒருங்கிணைந்த இலங்கை நாட்டுக்குள் தமிழ் பேசும் வடக்குகிழக்கில் தன்னாட்சியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான எமது விதியை நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையை செயற்படுத்திக் கொள்ளும் தகுதியை இவை எமக்கு வழங்குகின்றன. இந்த வகையிலான இப்போதைய ஏற்பாடுகள் போதியனவாக இல்லை என்பதுடன் திருப்தியளிப்பவையாகவும் இல்லை. அவை பெரும்பான்மையினருக்கு சலுகை அளிப்பனவாகவும் தமிழ் மக்கள் மீது பேரின மேலாதிக்கத்தைத் திணிப்பவையாகவும் உள்ளன.

> "எமது நாட்டில் ஒரு மக்கள் சமுதாயம் என்ற முறையில் ஏனைய மக்கள் சமுதாயங்களுடன் கௌரவம், தன்மானம் மற்றும் சுயாதீனமாகவும் விடுதலையுற்றவர்களாகவும் அச்சமின்றி பேரினவாத மேலாதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்களாக அமைதியான சுக வாழ்வைத் தொடர்ந்து மேற்கொள்ள விரும்புகின்றோம்."

நியாயம், சமத்துவம், நீதி, அமைதி மற்றும் பாதுகாப்புக்கு வழி சமைக்காத அரசமைப்புக் கட்டுமானத்தில் ஒரு பல்லின சமுதாயத்தில் ஜனநாயகம் முனைப்புடன் செயற்படுவது சாத்தியமில்லை. இந்த மாதிரியான ஒரு நிலைமையில்தான் நாம் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்கின்றோம்.

இறைமையானது மக்களிடம் தங்கியுள்ளதேயன்றி அரசிடம் அல்ல என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக நம்புகின்றது. கொழும்பிலுள்ள அரசு தமிழ் மக்களை ஆட்சி புரியும் உரிமையைக்கொண்டிருக்கவில்லை. அதனை மக்களே தம்மிடம் கொண்டிருக்கிறார்கள். இந்த வகையில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தமானது குறைகளைக் கொண்டிருக்கின்றது. அதிகாரங்கள் யாவும் மத்தியிலும் அதன் முகவரான ஆளுநரிடமுமே குவிக்கப்பட்டுள்ளன. எமது அரசியல் தத்துவமானது சகல அதிகாரங்களையும் தன்வசம் கொண்டுள்ள அரசுக்கு சவாலாக அமையக்கூடிய ஜனநாயக தளத்தைக் கொண்டுள்ள அடிப்படையில் உருவானதாகும். முழுநாட்டிலும் இவ்வித நோக்கங்களை அடையும் விதத்தில் 2015 ஜனவரி 8 ஆம் திகதி நாங்கள் குறிப்பிட்டுக்கூறக்கூடிய விதத்தில் பங்களிப்பை வழங்கியிருந்தோம். எனவே எமது அரசியல் திட்டமானது தமிழ் மக்கள் அடங்கலாக சகல மக்களதும் நீதி மற்றும் சமத்துவத்துக்கான தேவைகள் மற்றும் அபிலாசைகளில் வேர் கொண்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் தீர்மானத்துக்கான தனது திருத்தங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்துள்ளது. இது தொடர்பான பிரச்சினைகளை விவாதிப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் கட்சியின் ஒரு குழுவினர் அவரை சந்திக்கவிருக்கின்றனர். நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்த பிரதமருடன் ஆலோசனை கலந்த பின்னர் சபாநாயகர் கருஜயசூரிய புதிய திகதிகளை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**ராஜபக்சவின் நிலைப்பாடு**

புதிய அரசமைப்புத் திருத்தமானது ஒரு தனி ஆவணமாக நிறைவேற்றப்படலாகாது. அவ்வாறு செய்தால் அரண் செய்யப்பட்டுள்ள பல முக்கிய சரத்துக்கள் ஒரே வீச்சில் மாற்றப்பட்டு விட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் பற்றி அவர் குறிப்பிடுகையில்; எதுவித மாற்றமும் செய்யப்படுவதற்கு முன்னர் இந்திய அரசமைப்பு முறை பற்றி நன்கு ஆராயப்பட வேண்டும். ஏனென்றால் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு பகிர வேண்டிய நிலைமை இருக்கிறது என்றார். ராஜபக்ச எது கூறியிருந் தாலும் அரசமைப்புத் தொடர்பான குழுவுக்கு சுதந்திரக் கட்சியிலுள்ள ராஜபக்சவுக்கு விசுவாசமானவர்களையும் சிறிசேன நியமித்துள்ளார்.

லாம். ஒற்றையாட்சிக்கு மாறான பிரிவுகள் புதிய அரசமைப்புத் திருத்தத்துக்குள் நுழைக்கப்பட்டு விடக்கூடும் என்று மக்கள் சந்தேகம் கொண்டுள்ளார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கொழும்பு பௌத்தாலயம் ஒன்றின் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்திருப்பதாக செய்திகள் வெளியிடப்பட்டுள் ளன. அரசமைப்பில் அரண் செய்யப் பட்டுள்ள சில சரத்துக்களை ஒரு வெகுஜன வாக்கெடுப்பின் மூலமே திருத்த வேண் டும். புதிதாக ஓர் அரசமைப்பை மக்கள் வாக்கெடுப்புக்கு விடுவதாயின் அரண் செய்யப்பட்டுள்ள பல சரத்துக்கள் ஒரே வீச்சில் மாற்றப்பட்டுவிடும் அபாயமிருப் பதாக அவர் அச்சம் தெரிவித்துள்ளார். 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் பற்றி அவர் குறிப்பிடுகையில்; எதுவித மாற் றமும் செய்யப்படுவதற்கு முன்னர் இந்தி ய அரசமைப்பு முறை பற்றி நன்கு ஆரா யப்பட வேண்டும். ஏனென்றால் அதி காரங்கள் மாகாண சபைகளுக்கு பகிர வேண்டிய நிலைமை இருக்கிறது என்றார். ராஜபக்ச எது கூறியிருந்தாலும் அரச மைப்புத் தொடர்பான குழுவுக்கு சுதந்திரக் கட்சியிலுள்ள ராஜபக்சவுக்கு விசுவாச மான வர்களையும் சிறிசேன நியமித்துள் ளார். கட்சியின் அதிகாரத்தை தம்வசப் படுத்தும் சிறிசேனவின் முயற்சிகளில் இதுவும் ஒன்று என்று இதுபற்றிக் கூறப்படுகின்றது. அதற்கு முன்னர் ஹம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப் பினரும் ராஜபக்சவின் புத்திரருமான நாமல் ராஜபக்சவை சிறிசேன சந்தித்தி ருந்தார். மத்தியஸ்தர் ஒருவரின் ஏற்பாட் டில் நாமல் ராஜபக்சவை சிறிசேன அழைத்துப் பேசியபோது ஒன்றுபட்டு பணிபுரிய அழைத்ததாகத் தெரிய வரு கிறது. தமது குடும்பத்தினர் ஒவ் வொருவரும் ஐந்தாறு விசாரணைகளை எதிர்கொண்டு வருகிறார்கள் என்று கவலை தெரிவித்த நாமல் ராஜபக்ச தமது தந்தையார் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக எங்கும் நகர முடியாமல் இருக்கிறார், பல்வேறு அவமரியாதை களுக்கிடையில் தன் கௌரவத்தை நிலைநாட்டிக் கொள்ளும் நிலையில் இருக்கின்றார் எனக் கவலை தெரிவித்தார் என்று தகவல்கள் கூறின. தாம் நாம லுடன் தான் பேசுவதாகவும், அவர் தந்தை பற்றியல்ல என்று சிறிசேன சுட்டிக்காட்டிய தாகத் தெரிகின்றது.

ராஜபக்ச இப்போது புதிய கட்சியொன்றை உருவாக்கும் முன்னேற்பாடாக மாவட் டத்துக்கு மாவட்டம் சென்று பேச்சு வார்த்தைகள் நடத்திவரும் நிலையில், சிறிசேன, நாமலுடன் நடத்தியிருக்கும் பேச்சுவார்த்தைகளின் விவரம் வெளியி டப்படாது போனாலும், ராஜபக்ச மீதும் அவர் குடும்பத்தினர் மீதும் நடத்தப் பட்டுவரும் விசாரணைகள் நிறுத்தப்படு மானால் அவர் அரசியலில் இருந்து முற்றாக விலகிக் கொள்வாரா என்ற வகையிலான ஒரு கேள்வி இப்போது எழுப்பப்படுகின்றது என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. இதே கேள்வி ராஜபக்சவிடமும் அவருடனிருந்த சகோதரர் பசில் ராஜபக்சவிடமும் கடந்த வெள்ளியன்று களுத்துறையில் வைத்துக் கேட்கப்பட்டது. அவ்வாறான கூற்றுக்களில் எந்தவித உண்மையும் இல்லை என்று இருவருமே மறுதலித்தனர். தாங்கள் அரசியலில் இருந்து விலகப்போவதில் லை என்றும் விசாரணைகளை நிறுத்தித் தம்மை மௌனிகளாக்கிவிடமுடியா தென்றும் கூறினார்கள். நாமலும் தமது நண்பர்களிடம் பேசுகையில்; அவ்வாறான வாக்குறுதி எதனையும் தாம் வழங்கி யிருக்கவில்லை என்றும் தமது குடும்பத்தி னர் நியாயமில்லாத முறையில் நடத் தப்படுவதாகவே சிறிசேனவிடம் எடுத்துக் கூறியதாகவும் விளம்பியுள்ளார்.

# சந்நிதியான் சன்னிதானம் புண்ணிய பூமிதான்

தைப்பூசத்திருநாள் அனேகமாக பெரும்பாலான இந்து ஆலயங்களில் கொண்டாடப்படுவது வழமை. இந்த நன்னாளில் சுபகாரியங்கள் குறிப்பாகத் திருமணங்கள் கூடுதலாக நடைபெறுவதும் கண்கூடு.

இந்தமுறை தைப்பூசத் திருநாள் ஞாயிற்றுக்கிழமையில் வந்தது பலருக்கும் வசதியாகவும் வாய்ப்பாகவும் அமைந்து விட்டது. தொண்டமானாறு செல்வச்சந்நிதியானின் தைப்பூசத் தரிசனம் காணவென யாழ்.நகரில் இருந்து காலையில் பஸ்மூலம் ஆலயத்துக்குச் சென்றிருந்தோம்.

ஆலயத்திலோ தேர்த்திருவிழாவுக்கு வந்தது போன்ற சனக்கூட்டம். வீதியைச் சுற்றி வாகனங்கள் நிறைந்திருந்தன- நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இத்தனை வாகனங்களும் இன்றைக்கென்று இங்கு வந்தி ருக்கின்றனவே. கார்கள், ஓட்டோக்கள், மோட்டார்சைக்கிள்கள் என்றில்லாமல் வெளிமாவட் டங்களிலிருந்து வந்த தனியார் பஸ்களும் ஆலய வீதியை நிறைத்திருந்தன.(30 வரையான திருமணங்கள் அன்றைய தினம் இங்கு நடைபெற்றதாக உதயனின் செய்தி

பயணிகளுடன் அல்லது பயணிகளை ஏற்றிச்செல்ல ஆலயத்துக்கு வரும் அரச மற்றும் தனியார் பஸ் வண்டிகள் ஆலய வீதியில் தரித்து நிற்க முடியாமல் பெரும் சிரமங்க ளைச் சந்திக்க நேர்ந்தது. இதில் பாதிக்கப்பட்டது பொதுமக் கள்தான்.

பஸ்களைத் தேடிப்பிடித்து ஏறுவதற்கும், ஆலயத்துக்கு வந்தவர்கள் இறங்குவதற்கும் பட்டபாடுகள் சொல்லிமா ளாது. ஆபத்துக்குப் பாவமில்லை என்பதுபோல், வாகனப் போக்குவரத்தை நெறிப்படுத்துவதில் பொதுமக்களின் பங் களிப்பு கண்டபடி, எல்லை மீறியதாக, தான்தோன்றித்தன மானதாக இருந்தும் ஏதோ அந்தச் சந்நிதியானின் பேரரு ளால் இடர்களோ, அசம்பாவிதங்களோ நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

இறைவனின் சோதனையோ என்னவோ மழையும் விடாது சிணுங்கிக் கொண்டிருந்தது. மங்கல உடையுடுத்தி திரும ணத்துக்கு வந்தவர்கள் பாடுபெரும்பாடுதான். எது எப்படி யாயினும் முகூர்த்த நேரத்தைத் தவற விடக்கூடாது என்பதில் அவர்கள் குறியாக இருந்தனர்.

இப்படியான இக்கட்டான வேளைகளில் இந்த ஆலயத்தின் ஆளுகைப் பிரதேசத்துக்குரிய உள்ளூராட்சி நிறுவனம், காவல்துறை ஆகியோரது சேவை அவசியமான ஒன்றாகும். குறை சொல்ல வேண்டும் என்ற நோக்கில் இதைத் தெரிவிக்கவில்லை.

இந்த நிகழ்வுகளின் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொண்டு ஆலய நிர்வாகிகளாவது மேற்குறிப்பிட்ட நிறுவனங்களின் சேவையைக்கோரிப் பெற்றுக் கொண்டிருப்பின் ஏற்பட்ட சிர மங்களைத் தவிர்த்திருக்க முடியுமல்லவா? இனி வரும் காலங்களிலாவது திட்டமிட்டுமுன்னெச்சரிக்கையாக செயற்படுவது அனைவருக்கும் நல்லதாக இருக்கும் என்ப தைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கி.வே.கிருஷ்ணானந்தன்
யாழ்.நகர்.

# அரச அதிபர் மற்றும் காவல்துறை மேலதிகாரிகளுக்கு

நான் உரும்பிராயில் வசிக்கும் உதயன் பத்திரிகையின் வாசகன். நான் அறியத் தருவது என்னவென்றால், உரும்பிராயில் அரச அதிகாரம் பெற்ற சாராய விற்பனை நிலையம் ஒன்று உள்ளது. அதைவிட உரும்பிராய் - கோப்பாய் வீதியில் உள்ள ஒரு ரயர்க்கடையில் காவல்துறையினரின் ஆசீர் வாதத்துடன் ஒரு மதுபானக்கடை இயங்குகிறது.

மதுப்பிரியர்கள் அதில் காலையில் தொடங்கி 24 மணி நேரமும் மது அருந்தி விட்டு தொந்தரவுகள் செய்வதால் பாட சாலை மாணவிகள் தொடங்கி குடும்பப்பெண் கள் வரை குறிப்பிட்டவீதியால் அச்சத்து டன்தான் பயணிக்க வேண்டி உள்ளது.

குடும்பத்தால் புறக்கணிக்கப்பட்டவர்கள் முதற்கொண்டு காவல்துறையால் தேடப் படுகின்றவர்கள் வரை அதில் பங்குபற்று கிறார்கள். இது தொடர்பாக கோப்பாய் காவல்துறைக்கு அறிவித்தும் எந்தப் பயனும் இல்லை. எனவே தயவு செய்து சம்பந் தப்பட்டவர்களை இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மை யுடன் கேட்டுக்கொள் கிறோம்.

பாதிக்கப்பட்ட பெண்களின்
பெற்றோர் சார்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை வித்தியானந்த கல்லூரியின் எதிர்காலம்?

முல்லை அ.சசி

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள முள்ளிய வளைக் கிராமத்தில் அமைந்துள்ளது முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி.

இந்தக் கல்லூரி தேசியப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டு இயங்கிவருகின்றது. இந்தப் பாடசாலைக்கு வருடா வருடம் தரம் ஒன்பதின் பின்னர் மாணவர்களை கணிசமான எண்ணிக்கையில் இணைக்கும்பாடசாலையாகவே உள்ளது.தற்போது பாடசாலை சில பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளது.


முள்ளியவளைபிரதேசத்தைஉள்ளடக்கிய சுமார் 39 சமூக மட்ட அமைப்பினர் தமது அமைப்பு சார்ந்த இறப்பர் முத்திரை பதித்து கையொப்பம் இடப்பட்ட மனு ஒன்றை வடமாகாணசபை வளாகத்தில் கல்வி அமைச்சர் த.குருகுலராசாவிடம் நேரடியாக கையளித்துள்ளனர்.

இந்த மனுவில் வித்தியானந்தக் கல்லூரியின் எதிர்கால நிலைமை என்னும் தலைப்பில் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளவையாவன:

எமது கல்லூரிக்கு மாணவர்களை வழங்கும் பிரதான பாடசாலையாக தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அமைந்துள்ளது. இவ்வருடம் திடீரென தரம் 10க்கு மாணவர்கள் இந்தப் பாடசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்த விளைவாக வித்தியானந்தக் கல்லூரியின் மாணவர் தொகை வீழ்ச்சியடைந்துள்ளமை வித்தியானந்தக் கல்லூரியின் சமூக மட்டத்தில் பெரும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. இத்தேசியப் பாடசாலையின் எதிர்காலம் எவ்வாறு அமையப்போகின்றது என்ற ஐய உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

முல்லை வலயத்தின் ஒரே ஒரு தேசிய பாடசாலையாகவும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வி மற்றும் இணை பாடவிதான செயற்பாடுகளில் பல சாதனைகள் படைத்த ஒரு கல்விக் கூடமாகவும் விளங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததே. இந்தநிலை தொடர்பாக கல்வி அமைச்சர் என்ற வகையில் சில விடயங்களை மட்டும்சிறந்த முடிவை எதிர்பார்த்து தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.



அயல் பாடசாலைகளை சிறந்த பாடசாலைகளாக உருவாக்குதல் என்ற அபிவிருத்தித் திட்டத்தில் எமது கல்லூரியும் உள்வாங்கப்பட்டது. எனினும் 2020 ம் ஆண்டு 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இந்த வகையில் தண்ணீரூற்று இ.த.க.பாடசாலையின் தரம் உயர்த்தப்பட்டதால் இந்த அபிவிருத்தி எமது கல்லூரிக்கு கிடைக்காமல் போகக்கூடிய வாய்ப்புள்ளமை மிகவும் மனவருத்தத்துக்குரியது

இந்தத் திட்டம் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திற்கும் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் அங்கு மாணவர்களின் தொகை சடுதியாக வீழ்ச்சியடைந்து வருவதினால் இத்திட்டம் அப்பாடசாலைக்கு நிராகரிக்கபட்டமை குறிப்பிடத்தக்கது

முல்லை வலயத்திலும் சிறந்து விளங்கிய பாடசாலைகளில் ஒன்று முல்லைத்தீவு மகாவித்தியாலயம். அங்கும் அயற் பாடசாலையொன்றின் வகுப்புத் தரம் உயர்த்தப்பட்டமையால் மாணவர் தொகை சடுதியாக வீழ்ச்சியடைந்து 300 ஆகக் குறைந்துள்ளது. சகல வளங்களையும் கொண்ட இப்பாடசாலையின் வீழ்ச்சிக்கு யார் காரணம் என எண்ணும்போது வேதனை தரும் விடயமாக உள்ளது இந்த நிலைமை நாளை வித்தியானந்தக் கல்லூரிக்கும் வரக்கூடாது என்பதையே சமூக சிந்தனை கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை தொடர்பான முடிவுகளை எடுக்கும்போது பிரதேச கல்விமான்கள் சமூக மட்ட அமைப்புக்களை உள்வாங்கி அவர்களது கருத்துக்களுக்கு இடமளித்து முடிவெடுப்பதே சிறந்ததாக அமையும் என நாம் கருதுகின்றோம்.

எமது பாடசாலைக்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் தரம் கூடிய இரண்டு பாடசாலைகள் உள்ளமை பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அதுமட்டுமல்லாமல் எமது பிரதேச மக்கள் தொகையினையும் கருத்திற்கொண்டே இவ்வாறான முடிவெடுப்பது சாலச் சிறந்ததாகும்.

இப்பாடசாலைகளின் வகுப்புத் தரம் உயர்வினால் ஏற்படக்கூடிய பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு சிறந்த தீர்வினை எமக்கு வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையில்தங்களின்கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளோம்.

தாய் மண்ணைக் காக்க பல தியாகங்களை செய்த நாம், எமக்கெல்லாம் வாழ்வு தந்த தாய்க்கல்விக்கூடமான வித்தியானந்தக் கல்லூரியின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் எந்தத் தியாகமும் செய்வோம்; செய்யத் தயாரகவுள்ளோம் என்பதனை வேதனையுடன் கூறிக் கொள்கின்றோம் என மேற்படி மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## துலாம்

மகிழ்ச்சியையோ துக்கத்தையோ பெரிதுபடுத்தாமல் அனைத்தையும் சமமாக பாவிக்கும் பண்புகொண்ட துலா ராசி நேயர்களே! இந்த 2016-ஆம் ஆண்டில் 02-8-2016 வரை பொன்னவனான குரு லாப ஸ்தானமான 11-ஆம்வீட்டில்சஞ்சாரம்செய்யவிருப்பது மூலம் எல்லா வகையிலும் நற்பலன்களை அடைவீர்கள். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். குடும்பத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். குடும்பத்தில் மங்கலகரமான சுபகாரியங்கள் கைகூடும். எடுக்கும் முயற்சிகளில் சில தடைகளுக்குப்பின் வெற்றியினை அடைவீர்கள். தொழில், வியாபாரம்செய்பவர்களுக்கு எதிர்பார்க்கும்லாபங்கள் கிட்டும். கூட்டாளிகள் மற்றும் தொழிலாளிகளை அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. உங்களுக்கு ஏழரைச் சனியில் பாதச் சனி தொடருவதால் எதிலும் சற்று கவனமுடன் செயல்படுவது நல்லது. சனி பகவான் உங்கள் ராசிக்கு கேந்திர திரிகோணதிபதியாகி யோககாரகன் என்பதால் பெரிய அளவில் கெடுதிகளைச் செய்யமாட்டார். குரு பகவான் ஆண்டின் பிற்பாதியில் விரய ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்யவிருப்பதால் பொருளாதாரரீதியாக நெருக்கடிகள், கடன்கள் உண்டாகக்கூடிய சூழ்நிலை ஏற்படும். குடும்பத்தில் நிம்மதிக் குறைவு, அதிக மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ளக்கூடிய நிலை உண்டாகும். முன்கோபத்தைக் குறைத்துக்கொண்டு பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பாராத இடமாற்றங்களால் அலைச்சல், பதற்றம் அதிகரிக்கும். 08-01-2016 முதல் ராகு 11-ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்வதால் எதையும் சமாளித்து ஏற்றம் பெறுவீர்கள்.

**உடல் ஆரோக்கியம்**

உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பாதிப்புகள் தோன்றினாலும், சில மருத்துவச் செலவுகளுக்குப்பின் குணமடையும். புத்திர வழியில் எதிர்பாராத செலவும் வீண் விரயமும் அதனால் மன அமைதிக் குறைவும் உண்டாகும். தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பதால் வீண் அலைச்சல், பதற்றம் குறையும்.

**குடும்பம், பொருளாதார நிலை**

இந்த ஆண்டின் தொடக்கத்தில் குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபிட்சமும் நிலவும். நெருங்கியவர்களின் ஆதரவு மனநிம்மதியை உண்டாக்கும். திருமண சுபகாரியங்கள் கைகூடும். ஓகஸ்ட் மாதம் முதல் குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும். முன்கோபத்தைக் குறைத்துக்கொண்டு எதிலும் நிதானமாகச் செயல்பட்டால் சாதகப் பலனைப் பெறுவீர்கள்

**உத்தியோகம்**

ஆண்டின் தொடக்கத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடிகள் குறைந்து எதிர்பார்க்கும் உயர்வுகளைப் பெறமுடியும். உடன் பணிபுரிபவர்களி டையே இருந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து வேலைப் பளுவும் குறையும் என்றாலும் ஏழரைச் சனி தொடருவதால் உங்களுக்கு பணியில் தேவையற்ற பிரச்சினைகளும் நெருக்கடிகளும் அவப்பெயர்களும் உண்டாகும்.

**தொழில், வியாபாரம்**

இந்த ஆண்டின் முற்பாதியில் தொழில், வியாபாரரீதியாக மேற்கொள்ளும் எந்தவொரு புதிய முயற்சிகளிலும் நல்ல லாபம் கிட்டும். பயணங்களாலும் ஓரளவுக்கு நற்பலனைப் பெறமுடியும். எதிர்பாராத புதிய வாய்ப்புகள் தேடிவந்து லாபம் தரும். ஓகஸ்ட் மாதத்துக்குப்பிறகு முடிந்தவரை கூட்டாளிகளையும் உடனிருக்கும் தொழிலாளர்களையும் அனுசரித்து நடந்து கொள்வது நல்லது.

**கொடுக்கல்- வாங்கல்**

கொடுக்கல்- வாங்கலில் சரளமான நிலை ஏற்படும். பெரிய அளவில் லாபத்தைப் பெறமுடியாவிட்டாலும் போட்ட முதலீடுகளுக்கு நஷ்டம் ஏற்படாது. ஓகஸ்ட் மாதம் முதல் சற்று நெருக்கடிகள் அதிகரிக்கும். கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றமுடியாது. மற்றவர்களிடம் அவப்பெயர் ஏற்படும்.

**அரசியல்**


ஆண்டின் தொடக்கத்தில் மக்களின் ஆதரவுகள் சிறப்பாக இருக்கும். பிறரின் ஏச்சுப்பேச்சுகளுக்கு செவிசாய்க்காமல், தங்கள் காரியங்களில் கருத்துடன் செயல்படுவது நல்லது. ஓகஸ்ட் மாதம் முதல் நீங் கள் அவசியம் மேடைப் பேச்சுகளிலும் மற்றவர்களிடம் பேசும்போதும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. பத்திரிகைகளில் வரும் தவறான செய்திகளால் மனநிம்மதிக் குறைவு ஏற்படும்.

**கலைஞர்கள்**

கையில் கிடைக்கும் வாய்ப்புகளை நழுவவிடாமல் பயன்படுத்திக் கொள்வது நல்லது. அனைவரையும் அனுசரித்து நடப்பது, நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துவது நல்லது. எதிலும் எதிர்நீச்சல் போடவேண்டியிருப்பதால் பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது உத்தமம். எதிர்பாராத பயணங்களால், சற்று அலைச்சல், உடல்சோர்வு உண்டாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுபராயத்திலேயே பிள்ளைகளை நல்வழிப்படுத்துங்கள் இல்லையேல் பதின்ம வயதில் பதற நேரிடும்

சி.நற்குணலிங்கம்
நெல்லியடி

**18** வயதுக்குக் குறைவானவர்கள்சிறுபராயத்தினர் எனப்பொருள் கோடல் செய்யப்பட்டுள்ளது. வாழ்க்கையில் இந்தப் பருவமே மிகமுக்கியமான, அவதானமான, கண்காணிப்பான பருவமாகும். இந்தப் பருவத்தில் எதிர்கால உலகுக்குப் பொருத்தமான திறன்களையும், தேர்ச்சிகளையும்வழங்கிமுழுஆளுமை மிக்க பிரசைகளாக உருவாக அடித்தளமிடவேண்டும். சிறுபராயத்தில் பின்பற்றப்படும் பழக்கங்கள் சிறந்ததாக சமூகத்தால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமையுமானால் வாழ்வு சிறக்கும். இளவயதுப் பழக்கங்கள் ஒவ்வாத பழக்கங்களாக அமையுமானால் பதின்ம வயதில் நெறி பிறழ்ந்த வாழ்வு வாழ வேண்டி நேரிடும். எனவே பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் மீது சிறுபராயத்திலேயே அதிக கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல் பிள்ளையின் பதின்ம வயதில் நீங்கள் படும்பாடோ பெரும்பாடாகும்.

சிறுபருவம்தான் அவர்கள் எல்லாவற்றையும் கற்றுக்கொள்ளக்கூடிய நல்லதொரு பருவமாகும். அவர்களுக்கு நல்லதொரு வழிநடத்தலின் கீழ் பயணிப்பது எப்படி என்பதைப் பெற்றோர்கள் கற்றுக் கொடுக்க வேண்டும். ஒருமுறைதானும் அவர்களுக்கு நல்ல பண்பாட்டை பழக்கவழக்கங்களை கற்றுக் கொடுப்பின் அது ஆயுள் முழுவதும் அமைதியாக வாழ உதவும். பெற்றோர் இருவரும் ஒருமித்த கருத்துடனிருந்து பிள்ளைகளைத் திட்டமிட்டு நெறிப்படுத்த வேண்டிய காலம் இது. மற்றவர்களை மதித்து நடக்க பிரச்சினைகளை விடுவிக்க ஓய்வுநேரத்தை வினைத்திறனுடையதாகக் கழிக்க, நல்லவர், தீயவரை இனங்காண, நல்ல நட்பைப் பெற்றுக்கொள்ள, எவரோடும் அளவாகப் பழகிக்கொள்ள, பாதுகாப்பை உறுதிப்படுத்த, பாதகமான நடத்தைகளின் விளைவுகளை முன்கூட்டியே அறிந்துகொள்ள, பிள்ளையின் வயது மட்டத்தை அறிந்து செய்ய வேண்டியவற்றையும் செய்யத்தகாதவற்றைப் பற்றியும் அறிந்து கொள்ள, சமூக நியமங்களை மதிக்கும் பண்பை, சமுதாயத்தை நேசிக்கும் பண்பைப் பெற்றோர்கள் தாம் முன்மாதிரியாக இருந்து பிள்ளைகளுக்கு சிறுபராயத்திலேயே போதிக்க வேண்டும்.

பிள்ளை மீது நியாயமான கட்டுப்பாடுகளை மட்டும் விதிக்க வேண்டும். விளக்கம் பெற்றுத் திருந்துவதற்கும், தவறைவிளங்கி திருத்திக் கொள்ளவும் சந்தர்ப்பமளிக்க வேண்டும். வீட்டில் பிள்ளையின் கௌரவம் பேணப்பட வேண்டும். பெற்றோரால் பிள்ளை உள்ளார்ந்த மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டும். பிள்ளையின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து நடக்க வேண்டும். கற்றல் பேறுகளை விருத்தி செய்ய சிறந்த கற்றல் சூழலை வீட்டில் ஏற்படுத்த வேண்டும். ஆளுமை வளர்ச்சியின் அடித்தளமாக உள்ள வீடு அன்பு காட்டும் இடமாகக் காணப்பட வேண்டும். மகிழ்ச்சி யான குடும்பச் சூழல் வீட்டில் பிரதிபலிக்க வேண்டும். பிள்ளைகளை எந்நேரமும் படிபடி என வற்புறுத்திக் கரைச்சல் கொடுத்துப் படிக்க வைப்பது தவறாகும். பிள்ளை தானாக உணர்ந்து படிக் கக்கூடிய இயல்பை ஏற்படுத்திக் கொடுங்கள். படிப்பதை உற்சாகப் படுத்துங்கள். பயன்களைக்கூறி கல்வியால் எவ்வாறு எதிர்காலம் சிறக்கும் என்பவற்றைக் கூறி வழிப்படுத்துங்கள். பெற்றோர் மீது எதிர்மறையான எண்ணங்கள் பிள்ளையிடம் தோன்ற வாய்ப்பளிக்காதீர்கள். பிள்ளைகளுக்கு ஒழுங்கான வழிகாட்டலைக் கொடுங்கள்.

பிள்ளைகளை நல்வழிப்படுத்த இன்னொருவருடன் ஒப்பிட்டுப்பேசும் பழக்கத்தை வைத்திருக்கக்கூடாது. இது மனக்குழப்பம், விரக்தி, பொறாமை உணர்வு, தாழ்வு மனப்பான்மை, மனச்சோர்வு, கற்றலில் ஆர்வக் குறைவு போன்ற எதிர்மறையான விளைவுகளையே தோற்றுவிக்கும். பிள்ளைகளது மனநிலையறிந்து பக்குவமாகப் பேசப்பழக வேண்டும். பெற்றோர் பிள்ளைகள், மனம்விட்டுப் பேசும் நிலை குடும்பத்தில் காணப்பட வேண்டும். இவை வாழ்வின் அர்த்தத்தைப் பிள்ளை புரிந்து கொள்ள வாய்ப்பாக அமையும். பிள்ளை சமூகத்தோடு வாழப் பழக்கிக்கொள்ள வேண்டும். அவர்கள்தான், வாழ்க்கையில் வெற்றி பெறுவர் என்ற எண்ணக் கருவை சிறுபராயத்திலேயே ஊட்ட வேண்டும். விவேகானந்தர் கூற்றுக்கு அமைவாக பிள்ளை சமூகத்தோடும் வாழப்பழகிக்கொள்ள வேண்டும். அவர்கள் தான், வாழ்க்கையில் வெற்றி பெறுவர் என்ற எண்ணக் கருவை சிறுபராயத்திலேயே ஊட்ட வேண்டும். சிறுபராயம் முதல் தன்னை அடக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அதனை அவர் களுக்குப் பழக்கிக் கொள்வதன் மூலம் வெளியில் உள்ள எதற்கும் அவர்கள் வசப்படமாட்டார்கள்.


சிறுவயதில் நல்ல பண்புடனும், ஒழுக்கத்துடனும் வளர பொருத்தமான வழிகாட்டல்கள் பெற்றோரால் மேற்கொள்ளப் படாமையே பலர் பதின்ம வயதில் ஒழுக்கத்தோடு காணப்படாமைக்குப் பிரதான காரணமாகும். ஒரு கட்டடத்துக்கு எவ்வாறு அத்திபாரம் முக்கியமோ அதே போன்றுதான் சிறு பராயத்திலேயே நல்ல தொரு அத்திபாரம் இடப்படுவதுடன் மிகவும் அவதானமாக பெற்றோர்கள் அவர்களைக் கையாள வேண்டும். இல்லையேல் பதின்ம வயது பிள் ளைகளுக்கு பிரச்சினைக்குரியதாக அமைந்து எதிர்காலம் கேள்விக் குறியாக அமைந்துவிடும். சிறுவயதில் பிள்ளைகள் விட்ட தவறுகளை பதின்ம வயதில் திருத்த முயல்வது பயனற்ற முயற்சியாகவே அமையும்.

ஏனெனில் பதின்ம வயது ஒரு பருவ மாற்றத்தின் பதற்ற நிலைக்கான வயதாகும். இளமை தொடர்பான உணர்வு மேலோங்கிக் காணப்படும் வயது. சமூகப் பண் பாட்டுக்கு ஒவ்வாத தேடல்களில் ஈடுபட முனையும் வயது. குழுச்சண்டை, மது பாவனை இவ்வாறான பண்பாட்டு எதிர் நிலைகளில் நாட்டம் அதிகமுள்ள வயது. பெற் றோருக்குக் கீழ்ப்படியும் தன்மை, மதிப்பளிக்கும் தன்மை குறைவாகக் காணப்படும் வயது. தம்மை ஒரு விசேட வகைக்குரியவர்களாக அடையாளப்படுத்த விரும்பும் வயது. எனவே தவ றான எண்ணங்கள் சிந்தனைகள் மனதில் தோன்றி கலாசார சீரழிவுகளுக்குள் தோயவேண்டிய நிலை சாதாரணமாக ஏற்படும். இது பெற்றோர் மனதுக்கு மிகவும் வேதனையான ஒரு கட்டமாகும். இது எல்லாப் பெற்றோருக்கும் உரித்துடையானதல்ல. சிறுபராயத்தில் பிள்ளைகள் மீது கூடிய கவனம் எடுக்காத பெற்றோருக்கு மட்டும் உரித்துடையதா கும். எனவே பிள்ளைகளின் இழி செயலுக்கு முழுப்பொறுப்பாளிகளும்

> பெற்றோர் பிள்ளைகள், மனம்விட்டுப் பேசும் நிலை குடும்பத்தில் காணப்பட வேண்டும். இவை வாழ்வின் அர்த்தத்தைப் பிள்ளை புரிந்து கொள்ள வாய்ப்பாக அமையும்.

பெற்றோரே. ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகள் கல்விமான்களாக உயர்பதவிகளில் காண முனைகிறார்களே ஒழிய ஒரு நல்ல மனிதனாக, சமுதாயம் ஏற்கும் பண்புகளைக் கொண்டவனாக, சமூகப்பற்றாளனாக, சிறந்த குடிமகனாக வளர்க்க முயற்சிப்பதில்லை. எந்த முயற்சியானாலும் அது பிள்ளையின் சிறுபராயத்திலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். பெற்றோர் விழிப்பு நிலையிலிருந்து பிள்ளைகளை சிறுபராயம் முதல் வளர்த்தால் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வு பசுமையாகக் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் மகாத்மா காந்தியின் சிலை மீது ஐ.எஸ். என கறுப்பு மையினால் எழுதப்பட்டுள்ளது. குடியரசு தினத்துக்கு அண்மித்த நாளில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (த-ரி4)

# மலேசியாவ
# ஐ.எஸ். எச்சரி

## அது தொடர்பான காணொலி வெளியீடு

கோலாலம்பூர், ஜன. 27

ஐ.எஸ். அமைப்புக்கு ஆதரவு வழங்கியதற்காக, அதன் ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டனர். இந்தச் செயலுக்குக் கண்டனம் தெரிவிக்கும் நோக்கோடு ஐ.எஸ். அமைப்பின் மலேசியப் பிராந்தியப் பொறுப்பாளர், மலேசியாவை எச்சரிக்கும் காணொலியை வெளியிட்டுள்ளார்.

நாட்டுக்கு இது பெரும் அச்சுறுத்தல் என மலேசியப் பிரதமர் நிஜிப் ரசாக் தெரிவித்துள்ளார். இந்த அச்சுறுத்தும் வீடியோவை நாம் கருத்தில் கொள்கின்றோம். இந்தச் சவாலுக்கு முழு உலகமும் முகம் கொடுத்த வருகின்றது. இந்த நிலையில் இருந்து நாம் வெகுதொலைவில் உள்ளோம் எனப் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

மலாய் மொழியில் வெளியிடப்பட்ட முதல் ஐ.எஸ். காணொலி என பொலிசார் தெரிவித்தனர். குறித்த காணொலியில் தென்படுபவர் உள்ளூர்ப் போராளியான கடிபா நுசன்ரறா எனப் பொலிசார் அடையாளம் கண்டுள்ளனர்.

மேலும் ஐ.எஸ். அமைப்பின் அங்கத்தவர்கள் என 7 பேரைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிசார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து தோட்டாக்கள், ஜிகாத் புத்தகம், ஐ.எஸ். கொடி மற்றும் பிரசாரக் காணொலிகளைக் கொண்டிருந்தனர். அத்துடன் அவர்கள் நாட்டில் குண்டுவெடிப்புகளுக்குத் திட்டமிட்டியிருந்தமை தெரியவந்துள்ளது.

இதேபோன்று 10 நாள்களுக்கு முன்பு கோலாலம்பூரில் தற்கொலைத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தவர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட் டார்.

தீவிரவாத அமைப்புக்கு எதிரான தலைமை பொலிஸ் அதிகாரி அயோப் கான் மைதின் பிட்சேய் தெரிவிக்கையில், காணொலியில் இருந்து, போராளி அமைப்பினர் சிறப்பாகத் திட்டமிட்டிருப்பது தெரிய வந்துள்ளது. குறித்த காணொலியை ஆய்வுக்குட்படுத்த முடிய வில்லை எனவும் தெரிவித்தார்.

நீங்கள் எங்களைக் கைது செய்தால் எங்கள் எண்ணிக்கை இன்னும் உயரும். கலிபாவின் சட்டங்களை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு மிக நெருங்கிய நிலையில் உள்ளோம் என அந்த



# ஏமனில் நடந்த வான் தாக்குதலில் நீதிபதியும் குடும்பத்தினரும் சாவு

சனா, ஜன.27

ஏமன் தலைநகர் சனாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சவூதி தலைமையிலான கூட்டுப் படைகள் நடத்திய வான் வழித் தாக்குதலில், ஏமன் நாட்டின் நீதிபதியும், அவரது குடும்பத்தினர் 7 பேரும் உயிரிழந் துள்ளனர் என அதிகாரிகள் அறிவித்துள் ளனர்.

சவூதி தலைமையிலான கூட்டுப்படைகள், ஹவுதி இனத்தவர்களுக்கு எதிராக ஷெல் வீச்சுகளை நிகழ்த்தியுள்ளனர். கடந்த மார்ச் மாதத்திலிருந்து ஏமனின் தலைநகரை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுள்ளனர்.

இதுவரை இடம்பெற்ற தாக்குதலில் 6 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவற்றில் பாதியளவு சிவிலியன்கள் என ஐ.நா. தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. ஹவுதியர்களால் நியமிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு நீதிமன்ற நீதிபதியான யாயா ருபேய்ட்டின் இல்லத்தின் மீது குண்டுத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

போராளிகள், அல்-குவைதா அமைப்பின் வழக்குகள், ஜனாதிபதி அப்ட்-ரபு மன்சூர் ஹடியின் தேசத்துரோக வழக்குகளையும் இந்த நீதிபதியே கையாண்டிருந்தார். மீதமிருந்த அவரது மகனும் இந்தக் குண்டு வீச்சில் கொல்லப்பட்டிருந்தார். நீதிபதி ருபேய்ட்டின் இரண்டு மாடி அடுக்கு வீடு முழுமையாக அழிக் கப்பட்டது.

ஐ.நாவின் உலக உணவுத் திட்டத்தினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை, 12 ட்ரக்குகளில் போரினால் பாதிக்கப்பட்ட ராய் மாவட்ட பகுதிகளில் வசிக்கும் 3 ஆயிரம் குடும்பத்தினருக்கு ஒரு மாதத்துக்குப் போதுமான உணவை வழங்கினர்.

(த-ரி4)










# சிறப்பாக
# இந்தியச

புதுடில்லி, ஜன.27

இந்தியாவின் குடியர
நேற்று வெகு சிறப்பாக
கப்பட்டது. 1950 ஆம் அ
சமைப்பு நிறைவேற்றப்
கொண்டாடும் வகையில்
அனுஷ்டிக்கப்படு கிறது
தலைநகர் புதுடில்லியி
வப் பலத்தைக் காண்பிக்
வகுப்புகளும், கலாசார
மையை வெளிப்படுத்
களும் இடம்பெற்றன. ர
இடம்பெற்ற இந்த நி
பிரதம விருந்தினராக
ஜனாதிபதி பிரான்
ஹொடான்ட், இந்திய
பிரதமருடன் கலந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வுக்கு
# ரிக்கை



காணொலியில் குறிப்பிடப்பட்டிருந்ததாக உள்ளூர் ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. (த-ரி4)



## ாக நடைபெற்றது
## பக் குடியரசு தினம்

7
குடியரசு தினம்
ப்பாக அனுஷ்டிக்
ஆம் ஆண்டு அர
வற்றப்பட்டதைக்
கயில் இந்த தினம்
கிறது.
லியில் இராணு
ணிபிக்கும் அணி
ாசார பூல்வகை
படுத்தும் பவனி
றன. ராஜ்பாத்தில்
ந்த நிகழ்வுக்குப்
ளராக பிரான்ஸ்
ரான் கொய்ஸ்
ந்திய ஜனாதிபதி,
ந்து சிறப்பித்தி

ருந்தார். ஆயிரக்கனக்கான மக்கள் இராணுவ அணிவகுப்பையும், இதர ஊர்வலங்களையும் பார்வையிட வந்திருந்தனர்.
இந்த நிகழ்வில் முதல் முறையாக வெளிநாட்டு இராணுவத்தின் அணிவகுப்பும் இடம்பெற்றது. அத்துடன் நாய்களின் ஊர்வலமும் இடம்பெற்றிருந்தது. ஆயிரத்து 200 நாய்களில் 36 நாய்கள் மாத்திரமே ஊர்வலத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தன. ஒட்டக அணிவகுப்பும் இடம்பெற இருந்த நிலையில், சிலகாரணங்களுக்காக அந்த அணிவகுப்பு தடை செய்யப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்தனர். (த-ரி4)

# அமெரிக்கப் பனிப்புயலால் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

## 25 பேர் வரை உயிரிழப்பு

நியூயோர்க், ஜன.27
அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் கடும் பனிப்புயல் தாக்கியது. இதனால் குறைந்தது 25 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.
இந்த நிலையில் வொஷிங்ரன் நகரம் இன்னமும் இயல்பு நிலைக்கு மீளவில்லை. அரசு அலுவலகங்கள், பாடசாலைகள் என்பன மூடப்பட்டுள்ளன.
ஸ்னோசில்லா என்று அழைக்கப்படும் பனிப்புயலால் 85 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டனர். மேலும் நியூயோர்க்கின் சென்றல் பார்க்கில் 68 சென்ரி மீற்றர் அளவுக்குப் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. 1869 ஆம் ஆண்டுக்குப் பின்பு ஏற்பட்ட பெரிய பனிப் புயல் இது எனத் தெரிவிக்கப்பட்டது. வொஷிங்ரன் நகரை 22 அங்குலம் அளவு பனிப் பொழிவு ஸ்தம்பிக்கச் செய்தது.
பிலடெல்பியா மற்றும் பால்டிமோர் ஆகிய பகுதிகளில் வரலாற்றில் இல்லாத அளவுக்குப் பனிப்பொழிவு இடம்பெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பனி ஒதுக்கும் வாகனங்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளன.
இதற்கிடையில் ஆயிரக்கணக்கான மக்கள் பூங்காக்களில் சுவடி பனிவிளையாட்டுக்களில் ஈடுபட்டுள்ளனர். பனிப்பந்துச் சண்டையில் நூற்றுக்கனக்கானோர் பங்கெடுத்தனர். சிறுவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (த-ரி4)

96 வது கிளை
27-01-2016

பொரளை
அதுருகிரிய
கேகாலை
நவம் மாவத்தை
ஹோமாகம
எல்பிட்டிய
கல்முனை
காலி
கம்பஹா
ஹோமாகம
கடுவெல
ஹெவ்லொக் டவுண்
யாழ்ப்பாணம்
வவுனியா
மாலபே
கிரிபத்கொடை
கஹாவத்த
கட்டுநாயக்க மொணராகலை
அனுராதபுரம்

மானிப்பாய்

வெற்றிப்பாதையை முன்னோக்கி

கிரிஉல்ல
கண்டி
மஹரகம
கொள்ளுப்பிட்டிய
பிட்டகோட்டை
ஜா-எல
கல்கிஸ்ஸை
கொச்சிகடை
மஹியங்கணை
மாத்தறை
வத்தளை
செங்கலடி
நெல்லியடி
பழைய சோனகத் தெரு
ராஜகிரிய
மட்டக்களப்பு
குருணாகல்
மதுகம
நாராஹென்பிட்ட
மாத்தளை

எமது புதிய கிளைக்கு விஜயம் செய்து சிறந்த வங்கிச் சேவைகளை அனுபவித்திடுங்கள்

• நடைமுறைக் கணக்குகள் • சேமிப்புக் கணக்குகள் • நிலையான வைப்புக் கணக்குகள் • வீட்டுக் கடன்
• தனிநபர் கடன் • வாகனக் குத்தகை வசதிகள் • வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்றல் சேவை
• சிறிய நடுத்தரளவு வியாபாரத்திற்கான கடன் வசதி - நீண்ட கால கடன் வச்தி (குறைந்த வட்டிக்கு), குறுகிய கால கடன் வசதி உட்பட்ட பல்வேறு வங்கி மற்றும் நிதிச் சேவைகள்

இல. 260, மானிப்பாய் வீதி, மானிப்பாய்.

தொ.பே: முகாமையாளர் (நேரடி) - 021 225 6720, பொது - 021 225 6721 / 021 225 6722 | தொலைநகல்: 021 225 6723

கொடுக்கல் வாங்கல் செய்யும் நேரம்:
அலுவலக தினங்களில் - திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 - மாலை 4 மணி வரை

NDB வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருதுகள் பல பெற்ற நாடகக் கலைஞர் என்.தங்கவேலு

## வேலணையூர் நாடகக் கலைஞர் கலாபூசணம் என்.தங்கவேலு அவர்களுடனான நேர்காணல்

நேர்கண்டவர்
பொன்.கனகரத்தினம்
(ஜே.பி)

பிறக்கும்போதே எல்லோருமே ஒரே மாதிரித்தான் பிறக்கின்றனர். அவர்களைக் கலைஞர்களாகவும் ஏனைய திறன் படைத்தவர்களாகவும் உருவாக்குவது குடும்பமும் அவர் வாழுகின்ற சூழலும் தான் என்று கூறுகின்றார் வேலணையூர் நாடகக் கலைஞர் கலாபூசணம் நல்லான் தங்கவேலு. வேலணை கிழக்கு நேதாஜி சனசமூக நிலையத்தைச்சேர்ந்த இவர் சிறுவயதிலிருந்தே நாடகங்களில் நடிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அந்த ஆர்வத்தின் காரணமாக தமதுஊரில் பல கலைஞர்களைச் செதுக்கியவர். கிராமியக் கூத்துக்கள், இசை நாடகங்கள் என்பவற்றை மக்கள் மத்தியில் ஆற்றுகை செய்து பாராட்டைப் பெற்றவர். கலைக்காகத் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டவர். கடந்த வருடம் கலாசார அமைச் சால் வழங்கப்பட்ட கலாபூசணம் விருது பெற்றவர். இன்னும் பல விருது களைப் பெற்ற இவர், காத்தவராயன் சிந்துநடைக் கூத்து, அல்லி அர்ச்சுனா சிந்துநடைக் கூத்து, அரிச்சந்திரா இசை நாடகம் உட்பட இன்னும் பலவற்றில் அண்ணாவியாகவும் நடிகராகவும் இருந்து நெறிப்படுத்தி ஆற்றுகை செய்தவர். சங்கீதத்தை முறைப்படி கற்றுக்கொள்ளாவிட்டாலும் சுருதி பிறழாது அருமையாகப் பாடும் திறன் பெற்றவர். வேலணைப் பிரதேச சபை யின் கலாசாரப் பேரவையினால் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். இனி அவரது நேர்காணலைக் கவனிக் கலாம்.



**கலைக்கான வாயில் தங்கள் குடும்பத்தில் எவ்வாறு உருவானது?**

எனது தந்தையின் உறவினர்கள் அனேகர் நாடகக் கலையில் ஈடுபாடு கொண்டவர்கள். தந்தையின் தம்பியாகிய சித்தன் சின்னையா நடிகராகவும் அண்ணாவியாகவும் இருந்து பல நாடகங்களை எழுதியும் நடித்தும் வெற்றி கண்டவர். அவர் இப்போது உயிருடன் இல்லை. அவர் வழிநடத்தலில் ஆற்றுகையின்போது பார்த்தும் கேட்டும் வந்த அந்தக் கலைத் தூண்டல் தான் எனக்கான கலை வாயிலைத் திறந்து விட் டது.

**நாடக உலகத்துக்குள் எப்படிப் பிரவேசித்தீர்கள்?**

நான் சிறுவனாக இருந்தபோது கூடுதலாக கலைஞர் வி.வி.வைரமுத்துவின் நாடகங்கள் எங்கு மேடையேறினாலும் பார்ப்பதற்கு நிச்சயமாக எனது தந்தை உதவி புரிந்தார். அதனால் எனக்கு மிகமிகப் பிடித்தமான அரிச்சந்திரா நாடகத்தை நானே பிரதான பாத்திரத்தில் நடிக்க ஆசைப்பட்டு எனது கிராம இளைஞர்களைச் சேர்த்துப் பயிற்றுவித்து ஆற்றுகை செய்வதற்குத் துணைபுரிந்தவர் சரவணையூர் அண்ணாவி கதிர்காமு.

**தங்கள் நாடக மன்றம் மற்றும் ஆற்றுகைகளுக்கு எத்தகைய வரவேற்பு உண்டு?**

சிறந்த வரவேற்புண்டு. நாட்டுக் கூத்துக்களில் நிறைந்த பற்றுள்ள மக்கள் கிராமத்தில் இன்றும் உள்ளனர். நாம் ஆற்றுகை செய்கின்றோம் என்று அறிந்தால் மக்கள் வெள்ளத்தில் அரங்கு நிறைந்து வழியும். அந்தளவு வரவேற்பு எமது நாடக மன்றத்துக்கும் ஆற்றுகைக்கும் உண்டு என்று கூறுவதில் பெருமைப்படுகின்றேன்.



**தங்கள் கலைப்பணிக்கு குடும்பத்தின் ஆதரவு எவ்வாறுள்ளது?**

முழு ஆதரவு தருகின்றனர். இன்னும்சொல்லப்போனால் என்னை உற்சாகப்படுத்துவதே எனது குடும்பத்தினர் தான். அவர்களின் ஆதரவினால்தான் என்னால் உற்சாகத்துடன் கலைப்பணியில் ஈடுபட முடிந்தது.

**கலைஞர்களுக்கு தாங்கள் சொல்ல நினைக்கும் செய்தி என்ன?**

கலைஞர்கள் சமூகத்தைச் செதுக்குவதில் பெரும் பங்கு வகிப்பவர்கள் இவர்கள் குடும்பத்திலும் சமூகத்திலும் உயர்ந்த மதிப்பீடுகளைப் படைக்கின்றனர். இவர்கள் வாழும் வரை உலகம்வாழும். இந்தஉலகம்உய்வதற்கான வாழ்வதற்கான வழி முறைகளை இவர்கள் கூறுகின்றனர். இத்தகைய கலைஞர்கள் வாழும் காலத்திலேயே கௌரவிக்கப்பட வேண்டும்.

**உங்களுக்குக் கிடைத்த பட்டங்களையும் அவை யாரால் வழங்கப்பட்டன என்பது பற்றியும் கூறுவீர்களா?**

1975 ஆம் ஆண்டு அரியாலை காந்தி சனசமூக நிலைய அரங்கில் கலையரசு சொர்ணலிங்கம் ஐயாவால் நாடகமணி என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட் டேன். யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தினரால் நடிகமணி என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன். யாழ்.சைவப்பிர காச வித்தியாலயத்தில் திரு மெட்ராஸ் மெயில் ஐயாவால் நடிகவேள் என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன். வேல ணைப் பிரதேச செயலககலாசாரப் பேரவையால் கலைவாரிதி என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன். பருத்தித்துறையில் நடைபெற்ற கலாசார விழாவில் வடமாகாண முதலமைச்சர் கவிவிக் னேஸ்வரனால் யாழ். முத்து என் னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன். கடந்தவருடம் 15.02.2015 இல் இலங்கை கலாசார அமைச்சரால் நடத்தப் பட்ட கொழும்பு மகரகம இளைஞர்சேவை மண்டபத்தில் நடைபெற்ற கலாசார விழாவில் கலாபூசணம் விருதும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டேன். இத்தனை விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுக் கொண்டமைக்கு இறைவனுக்கும் எனது தாய், தந்தையருக்கும் எனது சமூக மக்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



கொழும்புத் தமிழ் சங்கம் மாதந்தோறும் நடத்தும் இராக அளிக்கை நிகழ்வில் மார்கழி மாதத்துக்கான இராக அளிக்கை நிகழ்வில் இணுவையூர் சகோதரர்களான அழகே சன்அமிர்த லோசன். அமிர்தசிந்தஜன் ஆகியோரின் ஸ்வராஞ்சலி இராக அளிக்கை 32 நிகழ்வு கடந்த மாதம் 30ஆம் திகதி கொழும்புத் தமிழ் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி யசோதா பாலேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திண்ணபுரம் சுந்தரேசர் புராணமும் பொருணயமும்

பேராசிரியர், கலாநிதி கனகசபாபதி
நாகேஸ்வரன்
சப்ரகமுவ பல்கலைக்கழகம்

இந்தப் புராணத்தின் ஆசிரியர் நவாலியூர்ப் புலவர்மணி சோ.இளமுருகனார். உரையாசிரியர் பண்டிதைமணி இ.பரமேசுவரியார். இந்தப் புராணம் பாயிரச் சருக்கம், காரைவளச் சருக்கம், திண்ணபுரச் சருக்கம், தவம்புரி சருக்கம், ஐயனார் கோயில் காண் சருக்கம், சுந்தரேசர் கோயில் காண் சருக்கம், சோமாற்கந்தச் சருக்கம், திருக்கோயிற் பாதுகாவலர் சருக்கம், அந்தணர் பூசைபுரி சருக்கம், விழாவயர் சருக்கம், என 10 சருக்கங்களையும் மொத்தமாக 806 செய்யுள்களையும் கொண் டது. விழாவயர் சருக்கம் 166 செய்யுள்களைக் கொண்டு விரிவாக அமைக்கப்பட்டுள்ளது. காரைவளச் சருக்கம் 149 செய்யுள்களாலும் தவம்புரி சருக்கம் 120 செய்யுள்களையும், திண்ணபுரச் சருக்கம், 84 செய்யுள்களையும், சோமாற்கந்தச் சருக்கம் 72 செய் யுள்களையும், ஐயனார் கோயில்காண் சருக்கம் 70 செய்யுள்களையும், சுந்தரேசர் கோயில் காண் சருக்கம் 60 செய்யுள்களையுங் கொண்டமைந்துள்ளது.

ஈழத்துச் சிதம்பர புராணத்தின் பாயிரச்சருக்கம் விநாயக வணக்கம் காப்புச் செய்யுளுடன் ஆரம்பிக்கின்றது. தமிழிலக்கிய மரபையொட்டிப் புராணத்திலே காப்புச் செய்யுள் பாடப்படுவது புதுமைக்கு மாறானதல்ல முற்போக்குக்கும் முரணானதல்ல என்பதை நீள நினைக்கும் வகையிலேயே ஈழத்துச் சிதம்பர புராணம் என்ற இந்த நூலும் அமைகிறது. இலக்கிய வழக்கிலே, மொழி வரலாற்று மரபிலே, மொழியியற் கல்வித் தத்துவ முறையிலே, கவிதை நெறியிலே காப்புச் செய்யுள் பாடிய பின்பே நூல் இயலும். இதுவே உலக மொழிவழக்கில் உன்னதப் பண்பு; உயரிய பண்பு பிறமொழி எவற்றுக் கும் கிடையாத பெருவழக்கு இலக்கியம் என்ற பாடப்பரப்பில் காப்புச் செய்யுள் இடம்பெறாத தன்மை கிடையவே கிடையாது. தமிழ் இலக்கிய மரபைப் பேணிப் பாடிய புராணமாகையால் மிகப் பக்தி செய்து, அரிதின் முயன்று, விடாமுயற்சியுடன் கூடிய பக்தியுடன் கண்டறிய முடியாத கடவுளைக் கண்டறிவதற்கு உறுதுணைபுரியுமாறு வேண்டிப்பாடுவதே காப்புச் செய்யுள், ஈழத்துச் சிதம்பர புராணத்தின் காப்புச் செய்யுள் மேல்வருமாறு இயல்கிறது.

திண்ண மாபுரச் செல்வனின் காதையை
வண்ண வண்டமிழ் செய்து வணங்கிட
நண்ணு மின்னலைப் போக்கும்வி நாயகன்
தண்ணந் தாமரை தாடலை சூடுவாம்
(பாயிரச் சருக்கம்: காப்புச் செய்யுள்)

திண்ண மாபுரத்திற் கோயில் கொண்டெழுந்தருளிய சுந்தரேசப் பெருமானின் தல வரலாற்றை அழகிய வளஞ்சான்ற செந்தமிழாற் பாடித் துதிக்க, அடியவர்களுக்கு வருகின்ற துன்பங்களை நீக்கிக் காத்தருளுகின்ற விநாயகக் கடவுளது குளிர்ந்த செந்தாமரை மலர் போன்ற திருவடிகளைத் தலைமேற்சூடி வணங்குவோமாக. இலக்கிய முற்போக்குவாதிகள் சொல்வதும், செய்வதும் செய்ததும் இலக்கியமேயல்ல, கட்சிப் பரப்புரை. அது தமிழ், தமிழர் சம்பந்தப்பட்டதும் அல்ல என்பதை இவ்விடத்திலாயினும் ஓர்ந்துணர்தல் நன்மை தருவதாகும். சிந்திப்போமாக.

திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் என்பது, திண்ணபுரத்திலே எழுந்தருளியிருக்கும் சுந்தரேசப் பெருமானைப் பற்றிய புராணம் என விரியும். சுந்தரேசர் பேரழகர். புராணமென் பது பழைய வரலாற்றைக் கூறுவது. திண்ணபுரம், ஈழத்துச் சிதம்பரம் எனப்படுதலினால் ஈழத்துச் சிதம்பரபுராணம் எனப்பட்டது. சிதம்பரத்திலே திருநடனச் செய்யும் கூத்தப் பெருமானே திண்ணபுரத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கின்றாராதலினாலும் சிதம்பரத்தில் நடைபெறும்.

திருவாதிரை விழாவைப் போலவே இங்கும் அவ்விழா நடைபெற்று வருவதனாலும் தென்னிந்தியாவுக்குச் சென்று சிதம்பரத்தை தரி சிக்கும் வாய்ப்பில்லாத ஈழத்தார் ஆண்டு தோறும் இங்கே மிகுதியும் வந்து தரிசித்துப் போகும் வழக்கமுடமையாலும் அந்தப் பெயர் வழங்கு வதாயிற்று.

பாயிரம் என்பது நூலின் வரலாறு. சருக்கம் என்பது நூலின் உள்பிரிவு. அது படலம் எனப்படும். செல்வன் என்றது சுந்தரேசப் பெருமானை. அருட்செல்வன் மிக்கவராதலின் செல் வன் எனப்பட்டார். செல்வன் கழலேத் துஞ் செல்வஞ் செல்வே திருஞானசம் பந்த மூர்த்தி சுவாமிகள் கூறியதுங் காண்க. தாடலை சூடுவாம் என்றதில், தாழ்தலை என்று தனித்தனி ஒலித்துநின்ற இரு சொற்களும் ஒன்றுபட்ட வழித்தாடலை என ஒன்றுபட்டு ஒலித்து நிற்பது போல விநாயகப் பெருமானது திருவடிகளில் அடியேனது சித்தம் ஒன்றுபட்டு நின்று, அந்தப் பெருமானது திருவருளாலே இந்நூலை இனிது முடிக்கும் என்று வழிபட்டவாறாம்.

ஈழத்து சிதம்பர புராணத்தில் சுந்தரேசப் பெருமான் வணக்கம் மேல்வருமாறு பாடப்பட்டுள்ளது. அந்தச் செய்யுள் வருமாறு:

முந்தை மாலொடு முண்டகன் கண்டிலா
அந்த ணாளன்சிற் றம்பலத் தாடுவான்
வந்து திண்ண வளம்பதி மேவிய
சுந்தரேசனின் றூவடி சூடுவாம்
(முண்டகன் பிரம்மதேவன்)

முன்னொரு காலத்தில் திருமாலோடு பிரமதேவனும் தேடிக் காணாத கருணை வடிவானவனும் சிற்றம்பலத்தே நின்று திருநடனம் செய்பவனும் ஆகிய திண்ணபுரத்தில் வந்து எழுந்தருளிய சுந்தரேசப் பெருமானின் தூய்மையான திருவடிப் போதுகளை தலையில் சூடி வணங்குவோம் என்றவாறு.

அந்தணாளன் அழகிய தண்ணளியுடையவன். தண்ணளி கருணை செந்தீவண்ணரந்தணாளர் கண்டீர் எனத் தேவாரத்துள் வருதலைக் காண்க.

சிற்றம்பலம் என்பது சிதம்பரத் தலத்தை இத்தலத்தில் உள்ள ஐந்து சபைகளுள் ஒன்றாகிய சிற்சபையையும் சிற்றம்பலம் என்பர். இத்தலத்தில் நடராசப் பெருமான் சிவகாமி அம்மையார் கண்டு மகிழவும், பிரம்ம விட்டிணு இந்திரன் முதலிய தேவர்கள் ஆனந்தக் கடலில்மூழ்கவும் வலத்திருவடியை முயலகன் மீது ஊன்றி, இடத் திருவடியை குஞ்சித பாதமாக உயர்த்திஐந்தொழிலும் நிகழ்தலை வேண்டி எப்பொழுதும் ஆனந்த நடனம் செய்தவண்ணம் இருப்பர். இந்த உண்மையை மாணிக்கக் கூத்தனை வண்டில்லைக் கூத்தனைப்

பூணுற்ற மன்றுட் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப் பொற் கூத்தனை யாரறிவாரே

என்று திருமந்திரம் எடுத்துக் கூறுகிறது. அந்தணாளனும் சிற்றம்பலத்து ஆடுவா னும் ஆகிய சுந்தரேசன் என்க என்று எழுதுவார் பண்டிதைமணி ஈ.பரமேசுவரியார் ஈழத்து சிதம்பர புராணத்திலே இடம்பெறும் சௌந்தராம்பிகையாரின் வணக்கம் பின்வருமாறுள்ளது. ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று பெரிய மலங்களாலும் மூடப்பட்டுக் கிடக்கும் மூவகை உயிர்களும் அம் மலங்களில் நின்றும் நீக்கிப் பக்குவம் அடைந்து சிவபெருமானது திருவடிகளைச் சேருவதற்கு இப்பிறப்பிலும் மேல்வரும் பிறப்பிலும் மாறிமாறி வருகின்ற ஏழுவகைத் தோற்றத் திலும் உடல் நின்று காத்தருள்கின்ற எல்லா உயிர்களுக்கும் தாயாகிய சௌந்தராம்பிகையாரின் திருவடிப் போதுகளை தலையில் சூடி வணங்குவோம். இந்தப் புராண செய்யுளுக்கு உரை எழுதும்போது சைவ சிந்தாந்தத்தில் இடம்பெறும். சின்முத்திரை, மும்மல நீக்கம், முத்திக் கோட்பாடுகள் என்பன பற்றி மிக மிக விரிவாகப் பண்டிதமணி இ.பரமேசுவரியார் உரை எழுதியுள்ளார். கூத்தபிரான் வணக்கம் பின்வருமாறு உள்ளது.

ஆர்த்தெழுந்துல கோடுயி ராடிட
நீத்தந் தண்மதி நீள்சடை யாடிட
ஏத்துந் திண்ண புரத்துநின் றாடிடுங்
கூத்தன் சேவடி கும்பிடு வாமரோ

எல்லா உலகங்களோடும் எல்லா உயிர்களும் ஆரவரித்து மனவெழுச்சிகொண்டு தொழிற்பட கங்காநதியும் குளிர்ந்த சந்திரனும் நீண்ட சடையும் சுழன்று ஆட, துதிக்கப்படுகின்ற திண்ணபுரத்தில் எழுந்தருளியிருந்து திருநடனம் செய்கின்ற கூத்தப் பிரானது திருவடிகளைக் கும்பிடுவோம்.

அறிவித்தாலும் அறியாத உலகங்களும், அறிவித்தாலறியும் உயிர்களும் எப்போதும் இயங்கிக்கொண்டேயிருத்தல் இறைவனது திருநடத்தினாலாதலின் உலக கோருயிர் ஆடிட என்றார்.

ஐயனாரும் சுந்தரேசப் பெருமானும் ஒருங்கே இணைந்தமைந்த திருத்தலம் ஈழத் துச் சிதம்பரம். ஈழத்துச் சிதம்பர புராணம்ஐயனார் வணக்கத்தை மேல்வருமாறு பாடும்.

துய்ய மாலொடு தோகைய ளாய்வரச்
செய்ய செஞ்சடை சேரழ கண்முனம்
மெய்யிற் கூடிய வாடலின் மேவிய
ஐயன் சேவடி யஞ்சலி
செய்குவாம்

முன்னொரு காலத்திலே, மிகவும் சிவந்த சடையினையுடைய சிவபெருமான் பரிசுத்தராகிய திருமால் ஒரு மோகினிப்பெண்வடிவமெடுத்து வருதலும், அந்த மோகினிப்பெண்ணைக்கலந்த திருவிளையாடலின் இடமாகத் தோற்றி யருளிய ஐயனாரது சிவ ந்த பாதங்களை வணங்குவோம்.

திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் என்பது, திண்ணபுரத்திலே எழுந்தருளியிருக்கும் சுந்தரேசப் பெருமானைப் பற்றிய புராணம் என விரியும். சுந்தரேசர் பேரழகர். புராணமென் பது பழைய வரலாற்றைக் கூறுவது. திண்ணபுரம், ஈழத்துச் சிதம்பரம் எனப்படுதலினால் ஈழத்துச் சிதம்பரபுராணம் எனப்பட்டது.

ஐயனார் வரலாற்றைச் சிறிது காண்போம்.

பாற்கடலிற் பிறந்த அமுதத்தை மோகினி வடிவங்கொண்டு வந்த திருமால், தேவர்கள் எல்லோருக்கும் பங்கிட்டு வழங்கிய பின்னர் திருப்பாற் கடலோரமாக உலாவி வரும் வேளையிற், சிவபெருமான் தமது நால் வகைச் சக்திகளுள் திருமாலும் ஒரு சத்தியாவரென்பதை உலகுக்குக் காட்டவெண்ணி அழகியதொரு திருவுருவங் கொண்டு ஒரு திருவிளையாட்டாக அம்மோகினி வடிவோடு கலந்து நின்றார்.

அப்போது கரிய மேனியும் சிவந்த சடையும் செண்டு தரித்த கையும் உடைய உக்கிரவடிவத்தோடு ஒரு புதல்வர் தோன்றினார். சிவபெருமான் அந்தப் புதல்வருக்கு மால் சிவன் மைந்தன் என்னும் பொருள்படும் அரிகரபுத்திரர் எனப் பெயரிட்டுப் பல வரங்களைக் கொடுத்து, உருத்திரருள் ஒருவராகியும் ஒரு புவனத்துத் தலைவராகியும் இருக்கப் பணித்துத், தேவர்களும் முனிவர்களும் வணங்கும் முதன்மையுங் கொடுத்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓயாமல் போராடும் மக்கள் கலைஞன்



## நாடக ஆற்றுகையாளர் சீலனுடன் ஒரு சந்திப்பு

சி.ப. வேந்தன்

பதினாலுபதினைஞ்சுவயசிலயே நான் நாடகத்துறைக்குள்ள வந்திட்டன். பாடசாலையிலே கவிதை எழுதிறது பாட்டு எழுதிறது என்று செய்கிறனான். அந்த நேரம் எனக்கு கலை,பண்பாட்டுக்கழகத்திண்ட தொடர்புகள் கிடைச்சுது. படிச்சுக் கொண்டே அவையோட சேந்து நாடகம் செய்யத் தொடங்கீற்றன். இப்படி தனது நாடக அனுபவங்களை பேச ஆரம்பிக் கிறார் நாடக ஆற்றுகையாளர் சத்திய சீலன்.

தனியே நடிப்பது மட்டுமன்றி நெறியாள்கை, இசையமைப்பு, ஒப்பனை,மேடையலங்காரம், வேட உடை என அத் தனை பக்கங்களிலும் தனது திறனை விசாலப் படுத்தி கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக நாடகத்துடன் பயணித்துக் கொண்டிருப்பவரை ஒரு மங்கலான மாலைப் பொழுதில் நீர்வேலியில் அமைந்துள்ள அவரது வீட்டில் சந்தித் தேன். வீடெங்கிலும் நாடக பதாகைகளும் வேட உடைகளும்-முக மூடிகளும் என ஓர் கலைக்கூடம் போல் காட்சியளித்தது. நான் என்ன பெரிசா செய்திட்டன் என்னை எதுக்குப் பேட்டி எடுக்கறியள் என தன்னடக்கத்தோடு மறுத்தவரை ஒருவாறு சம்மதிக்க வைத்து எனது உரையாடலைத் தொடர்ந்தேன்.

என்ர சொந்த இடம் பளை. இப்ப நான் கலியாணம் கட்டி நிர்வேலியில இருக்கிறன். என்ர மனைவியும் ஒரு நாடகக் கலைஞர்தான். மற்றபடி என்ர பின்னணியில நாடகத்துறையில ஒருத் தரும் இல்லை. நான்1996ஆம் ஆண் டில இருந்து தொடங்கி தொடர்ந்து 2000ஆம் ஆண்டுவரையும் கலை பண்பாட்டுக் கழகத்தோட நாடகம் செய்து கொண்டிருந்தனான். அதுக்குப்பிறகு ஏ.எல் எடுத்திற்று தையல் வேலை பழகிக்கொண்டிருக் கேக்கதான் செயற்றிறன் அரங்க இயக்கம் 2004ஆம் ஆண்டு நாட கத்தை தொழில்முறையா செய்ய ஆர்வமுள்ள ஆக்கள் தேவை எண்டு பேப்பரில விளம்பரம் குடுத்தவ. அப்ப நானும் அதில போய் இணைஞ்சு நாடகங்கள் நடிக்கத் தொடங்கினன். 2007ஆம் ஆண்டு வரையும் தொடர்ச் சியா முழுநேரமும் நாடகத்தை ஒரு தொழிலாக செய்து கொண்டு வந்தனான்.

அப்பதான் முதன்முதலா குழந்தை சேரிண்ட பஞ்சவர்ண நரியார் எண்ட நாடகத்தில பிரதான பாத்திரம் எடுத்து நடிச்சனான். 1978ஆம் ஆண்டு கூடி விளையாடு பாப்பா எண்ட நாடகத்துக்குப் பிறகு மிக வும் பிரபலமா பேசப்பட்ட நாடகம் இது.

இதில முதலாவதா வாற 'வீட்டுப்பூனை' எண்ட பாட்டு நான் எழுதின பாட்டுத்தான். அது எனக்கொரு நல்ல ஆரம்பமாக இருந்தது. அதோட தேவானந் சேரிண்ட 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' எண்ட சமூக நாடகம் கிட்டத்தட்ட 50 பேருக்கு மேல சேர்ந்து நடிச்ச நாடகம் அதிலயும் எனக்கொரு நல்ல பாத்திரம் கிடைச்சது. அதோட ஏகப்பட்ட தெருவெளி நாடகங்களும் அவரோட சேர்ந்து செய்தனான். அதுகளும் நல்ல அனுபவத்தை எனக்குத் தந்தது. அதோட நாடகத்தில ஒரு மரியாதையும் அதின்ர பெறுமதியும் தெரிஞ்சது.

இதுகளில கிடைச்ச அனுபவமும் பயிற்சிகளும் என்னால நாடகத்தில சாதிக்க ஏலும்,என்னாலும் முடியும் எண்ட நம்பிக்கையை தந்தது. இந்த நம்பிக்கைதான் என்னை பாட்டிவீட்டுச்சேவல், தோட்டத்துப்பொம்மை, அழகாய் ஓர் மரம்,காட்டில் ஓடும் மாட்டுவண்டி போன்ற பல சிறுவர் நாடகங்களை தனியாக எழுதி நெறியாள்கை செய்து நாடகத்தின்ர அடுத்த நிலைக்கு என்னை போகச்செய்தது எனலாம்.

குழந்தை சேரோடையும் தேவானந் சேரோடையும் சேந்து இயங்கேக்க ரெண்டுபேரிண்ட தனித்தன்மைகளையும் பெறக்கூடியதாக இருந்தது. அது என்ர நெறியாள்கைத் திறனுக்கு நல்ல முறையில் வலுச்சேத்தது எண்டு சொல்லலாம். நாடகத்துறையில எனக்கு கிடைத்த வரம் எண்டுதான் இதைச் சொல்லவேணும். அதோட கமலநாதன் சேரிண்ட ஊக்கமும் அவையிட்ட கிடைச்ச அந்த துறைசார்ந்த அறிவும் தான் என்னை இப்ப தனி ஒரு ஆற்றுகைக் கழகத்தை உருவாக்கி செயற்படுத்தக்கூடிய திறனைத் தந்திருக்கு. என்றவரது பேச்சில் அவரது ஆசான்கள் மீது அவர் வைத்திருக்கும் மதிப்பும் நன்றியும் ஒருங்கே தெரிந்தது.

உங்களது ஆற்றுகைக் கழகத்தையும் அதன் செயற்பாட்டையும் பற்றிச்சொல்லுங்கள் என்றதும் 'புதிய பண் பாட்டுக்கான அரங்கப் பயணம்' எண்ட கொள்கையோட 'செம்முகம்' எண்ட ஆற்றுகைக் கழகத்தை உருவாக்கி நாடகத்தின் மூலமா நிறையப் பிரச்சினைகளப் பேசிக்கொண்டு வாறம். [illegible] வருசம் 7 [illegible] தெருவெளி அரங்காக ஆற்றுகை செய்திருக்கிறம். எல்லாரும் சொல்வதைப் போல பண்பாட்டுச் சீரழிவு எண்டு குடி, பாலியல் எண்டதுகளை மட்டுமே பார்க்காமல் அடிப்படைப் பண்பாட்டுச்சீரழிவ கூடுதலா பேசிக் கொண்டு வாறம். மனிசனப் பாத்து சக மனுசன் சிரிக்காம இருக்கிறான்.நல்ல குடி தண்ணீர் இல்ல, பஸ்சில ஒரு மனுசனுக்கு எழும்பி இடம் குடுக்கிறதில்லை, வயதானவர்களை மதிக்கிறதில்லை இதுதான் இப்ப இருக்கிற மிகப்பெரிய பண்பாட்டுச் சீரழிவு. அப்ப இதுகளைப் போன்ற அடிப்படைப் பிறழ்வுகளப் பேசிற நாடகங்களை போட்டுக்கொண்டு வாறம், எனக்கூறும் அவரிடம் இவைகளை ஆற்றுகையால் எவ்வளவு தூரம் மக்களிடம் கொண்டு செல்லக்கூடியதாக இருக்கிறது எனக் கேட்டபோது-

> என்ர சொந்த இடம் பளை. இப்ப நான் கலியாணம் கட்டி நிர்வேலியில இருக்கிறன். என்ர மனைவியும் ஒரு நாடகக் கலைஞர்தான். மற்றபடி என்ரபின்னணியிலை நாடகத்துறையில ஒருத்தரும் இல்லை. நான் 1996ஆம் ஆண்டில இருந்து தொடங்கி தொடர்ந்து 2000ஆம் ஆண்டு வரையும் கலை,பண்பாட்டுக் கழகத்தோட நாடகம் செய்து கொண்டிருந்தனான்.

நாங்கள் கூடுதலா மிக எளிமையாக மக்களிண்ட பிரச்சினைகள மக்களிண்ட வாசலுக்கே போய்ச்செய்யிறவேலையை செய்துகொண்டு வாறம். ஆனாலும் கூட மக்கள் எங்களை நோக்கி வரச்செய்யிற தெண்டது மிகப்பெரிய சவாலாகத்தான் இருக்குது, எனும்போது ஆற்றுகைக் காரனின் குரலில் ஆற்றாமையின் வருத்தம் தெரிந்தது.

இன்றைய கலைகள் மக்களிடமிருந்து விலகிவிட்டதாக ஒரு குற்றச்சாட்டு இருக்கிறதே இதுகூட ஒருவகைக்காரணம் எனக்கூறலாம் தானே என்றபோது-

ஓம்! உண்மைதான் நவீனத்துவம் பின் நவீனத்துவம் எண்டு சொல்லி மக்களிட்ட இருந்து இலக்கியங்கள் கலைகளைப் பிரிக்கினம். இதுகளாளையும் எங்கட படைப்புகளுக்கான அங்கீகாரம் குறைஞ்சு கொண்டு போகுது. கவிதை எண்டது கவிஞர்களுக்கானதாகவும் நாவல் எண்டது எழுத்தாளர்மாருக்காகவும், நாடகம் எண்டது நாடகக்காரருக்காகவும் எண்டு துறைசார்ந்தவர்களுக்காக மாத்திரம் வருவதே ஒழிய மக்களுக்கானவைகளாக எவையும் வருகுதில்லை - அதனாலை இதுகளுக்கும் மக்களுக்குமான இடைவெளி அதிகரிச்சிட்டுது. இந்த இடைவெளிகளை மூன்றாந்தர, எங்களுக்குத் தேவையே இல்லாத விடயங்களப் பேசிற சின்னத்திரைகளும் சினிமாக்களும் பிடிச்சிட்டுது. எனும் போது ஒரு மக்கள் கலைஞனுடைய நியாயமான கோபம் அவருள் தெறித்தது.

சவாலான இந்தத்துறையில கடந்த பத்தாண்டுகளாக இடைவெளியில்லாது எப்படி உங்களால் இயங்க முடிகிறது என்றேன்.

கூட்டுறவு எண்ட தன்மை எங்கட வாழ்க்கையில இல்லாமப் போட்டுது நாடகம் எண்டது ஒரு கூட்டுக்கலை அத குழுவா இயங்காமல் செய்ய ஏலாது. இப்பகூட ஒரு சிறிய குழுவாகத்தான் நாங்கள் செய்துகொண்டு வாறம். இதுக்குக் காரணம் நாடகத்தின் மீது இருக்கிற விருப்பமும்-மதிப்பும்,தான் ஏதோ சமூகத்துக்கு என்னால செய்யக்கூடிய ஒரு சின்னச்சேவை, திருப்தி. எங்கட அப்பா நெடுகலும்சொல்லுவார்'நீ உழைக்கிறது பெரியாளா வாறது என்றதுக்கு அப்பால முதல்ல நல்ல மனுசனா இருக்கிறது முக்கியமானது' எண்டு! அந்த வார்த்தைகள் தான் என்னை இயங்கவைச்சுக் கொண்டிருக்கு. அதுக்கான வழிகள நான் இதன் மூலமா தேடுறன். அத விட என்ர குடும்பத்தின்ர ஒத்துழைப்பும் மிக முக்கியமான காரணம். அப்பா நல்ல புல்லாங்குழல் கலைஞன் அதைவிட நல்ல ரசிகன்;அதாலை எனக்கு இந்த கலைத்துறையில ஈடுபட எனக்கு எந்த வித தடையும் இருக்கேல்ல. அதைப் போல் என்ர மனைவியும் நாட கத்துறை சார்ந்தவள் எண்டதாலை அப்ப அவவுக்கும் இந்தத் துறையிண்ட நெளிவு சுளிவுகள் தெரியும். அதனால இண்டைக்குவரையும் எனக்கு இதிலை எந்த வித இடையூறும் வரேல்ல. இன்ற வரை உங்கட குறும்பட அனுபவங்களைப் பற்றிச் சொல்லுங்களேன் என்றேன்.

கமலநாதன் சேரிண்ட 'வெற்றிக்கு வழி' எண்ட குறும்படத்திலை ஒப்பனை செய்யத்தான் நான் போனனான்,பிறகு நடிக்க வேண்டியதாய் போட்டுது. அது தான் என்ர முதல் குறும்பட ஆரம்பம்.பிறகு நாலைஞ்சு படங்களில உதவி இயக்கம், இசை, ஒப்பனை எண்டு செய்தனான். ஒப்பிலாமணி , அப்பாவின் மிதிவண்டி, வழியில், வீடு 8 க்கு 10 எண்ட படங்களைச்சொல்லலாம். இப்ப புதியவள் எண்ட படத்துக்கு இசையமைச்சிருக்கிறன் என்று மேலும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி பரமலிங்கம்



# வானொலி நாடகங்கள்!

தமிழ் நாடகங்களில் தெருக் கூத்து தனித்துவமான ஒன்றெனலாம். அதுபோலவே வானொலி நாடகங்களும் தனியான நாடகப் பிரிவொன்றே! வானொலி நாடகங்கள் நேரடியாகக் கண்களால் பார்த்தும், கேட்டும் புரிந்து கொள்பவை அல்ல. காதுகளால் மட்டுமே கேட்டுப் புரிந்து கொள்ளக்கூடியவை!

ஒரு சம்பவத்தை மேடைக் காட்சிகள் ஊடாகச் சித்திரிப்பது போன்று வானொலி நாடகப் பிரதிகளில் கொண்டுவர முடியாது. செவிப்புலனுக்கு மட்டுமே 'விருந்தாகும் வானொலி நாடகப் படைப்புக்கள் உருவாக்கத்தில் வித்தியாசமானவை!

மேடை நாடகங்களில் கொண்டு வரக் கூடிய காட்சி அமைப்புக்கள் போன்று இல்லாமல் நாடக மாந்தர்களையும் மிகக் குறுகிய வட்டத்துள் வைத்துக் கொண்டே கதையை நகர்த்த வேண்டிய கடைப்பாடு இதில் உண்டு.

**பாத்திரக் குறைப்பு!**

மேடையில் பத்துப் பேர்களையும், இதைவிட அதிகமானவர்களையும் கொண்டு வர முடியும். வானொலிக்கு அவ்விதம் அதிகபாத்திரங்களைக்கொண்டுவந்தால் கேட்போரைக் குழப்பி விடவே இயலும். எவருக்கு என்னென்ன பாத்திரங்கள் என்பதைத் தெளிவுபடுத்த முடியாமல் அமைந்துவிடும்.

அது மட்டும் என்றில்லாமல் நாடகப் பாத்திரங்களுக்கு வேதனம் வழங்கும் காரணத்தாலும், வானொலி நாடகங்களின் தயாரிப்புச் செலவைக் குறைக்கும் நோக்கிலும் கால், அரை மணிநேர நாடகங்களை நான்கு, ஐந்து கதா மாந்தர்களைக் கொண்டே கதையை நகர்த்தி முடிக்க வேண்டும்.

ஒருமணி நேர நாடகமாயின் ஆறு, ஏழு பாத்திரங்களுக்கு மேற்படக்கூடாது. இவை நிலைய வானொலி நாடகச் செலவுகளைக் குறைக்கும். அதே சமயம் செவிப்புலன் ஊடாக நாடகங்களைக் கேட்பவர்களுக்கும், கதா மாந்தர்களை இனம் காட்டவும், வானொலி நாடகப் பிரதி எழுத்தாளர் கடைப்பிடிக்க வேண்டிய தேவை எழுகின்றது.

**அதிகப்படியான நாடகங்கள்!**

எமது நாட்டைப் பொறுத்த வரையில் மேடை நாடகங்களைப் பார்க்கிலும், வானொலி நாடகங்களே அதிகளவில் எழுதப்பட்டும், நடிக்கப்பட்டும் வந்துள்ளன. அந்த வகையில் வானொலி அலை வரிசைகள் மலிந்துள்ள இற்றைநாள்களில் இலங்கை வானொலி எனக்குறிப்பிடப்படும் இலங்கை வானொலி அல்லது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தமிழ்ச் சேவை ஒன்று, தமிழ்சேவை இரண்டு, பண்பலை தென்றல் ஆகியவை தாம் வானொலி நாடகங் களைப் பெருமளவில் ஒலிபரப்பி வருகின்றன.

> **தற்பொழுது 90, வயதைப் பூர்த்தி செய்திருக்கும் இலங்கை வானொலி லண்டன் பி.பி.சி ஒலிபரப்புத் தொடங்கி மூன்று ஆண்டுகளின் பின்னர் தொடங்கப்பட்டதாகும். இலங்கை வானொலியின் அபிவிருத்திப் பாதையில் 60களுக்குப் பிற்பாடு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமாக மாற்றம் பெற்றது.**

இலங்கை வானொலி சேவை தொடங்கி இன்றைய தென்றல் ஒலிபரப்பு வரை ஆயிரக்கணக்கில் வானொலி நாடகங்களைத் தயாரித்து ஒலிபரப்பிய பெருமை அன்னை வானொலி எனக்குறிப்பிடும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தையே சாரும். இரண்டாயிரமாம் ஆண்டுக்குப் பிற்பாடு புற்றீசல் போன்று தமிழில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பண்பலை வரிசை ஒலிபரப்புக்களிலும், இருந்திருந்து ஒருசில வானொலி நாடகங்கள் ஒலிபரப்பாகினும், முழுமையான வானொலி நாடகப் படைப்புக்களை தமிழ் உலகுக்கு அவை தரவில்லை.



**தயாரிப்பாளர் சானா!**

1960களில் கலாஜோதி எஸ்.சண்முகநாதன் (சானா) என்பவர் வானொலி நாடகத் தயாரிப்பாளராக விளங்குகையில் வாரத்தில் கால், அரைமணி நேர நாடகங்கள் இரண்டு ஒலிபரப்பாகி வந்தன. இடையிடையே மத்தாப்பு என்னும் நகைச்சுவை நாடகங்களைக் கொண்ட கதம்ப நாடக ஒலிபரப்புக்களும் நடத்தப்பட்டன. அவற்றுக்கு எழுத்தாளர்களால் அனுப்பப்பட்ட நாடகப் பிரதிகள் ஏ.பி. எனத் தரம் பிரிக்கப்பட்டு இரண்டு ரூபா மூன்று ரூபா வீதம் சன்மானமும் வழங்கப்பட்டு வந்தன.

தற்பொழுது 90, வயதைப் பூர்த்தி செய்திருக்கும் இலங்கை வானொலி லண்டன் பி.பி.சி ஒலிபரப்புத் தொடங்கி மூன்று ஆண்டுகளின் பின்னர் தொடங்கப்பட்டதாகும். இலங்கை வானொலி அதன் அபிவிருத்திப் பாதையில் 60களுக்குப் பிற்பாடு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமாக மாற்றம் பெற்றது. 1967 ஜனவரி 5 ஆம் திகதி அது நடந்தேறியது. இப்பொழுது 49 ஆண்டுகள் நிறைந்துள்ளன. சேவைகளை விஸ்தரிக்க தமிழ்ச் சேவை ஒன்று, தமிழ்ச்சேவை இரண்டு, தென்றல் என்பன ஆரம்பிக்கப்பட்டன. தேசிய சேவை ஒன்றெனவும், வர்த்தக சேவை இரண்டெனவும் இயங்கி வருகையில் வர்த்தக சேவையில் விளம்பர நிறுவனங்களின் அனுசரணைகளுடன் சில்லையூர் செல்வராஜன் மற்றும் வரணியூரான் எஸ்.எஸ்.கணேசபிள்ளை, எஸ்.ராமதாஸ், இளங்கீரன் என்பவர்களது தொடர் நாடகங்கள் வாரம்தோறும் ஒலி பரப்பாகியும் வந்தன.

**புகழ்பெற்ற லண்டன் கந்தையா!**

இவற்றில் இலங்கையர்கோன் எழுதிய லண்டன் கந்தையா என்னும் நீண்ட தொடர் நாடகம் வருடக் கணக்காக ஒலிபரப்பி வந்ததும் வரலாறு. பிற்காலத்தில் பேராசிரியராக மிளிர்ந்த கார்த்திகேசு சிவத்தம்பி நடித்து வந்ததுடன் ஒத்துழைப்பும் வழங்கினார். கலாஜோதி எஸ்.சண்முகநாதன்(சானா) லண்டன் கந்தையா என்னும் பிரதான பாத்திரத்தில் நடித்ததுடன், தயாரிப்பையும் ஏற்றுக் கொண்டிருந்தார்.

அன்னை வானொலியின் நாடகத் தயாரிப்பாளர்களாக கே.எம்.வாசகர், பி.விக்னேஸ்வரன், ஜோர்ஜ் சந்திரசேகரன், ராஜேஸ்வரி சண்முகம், ராஜபுத்திரன் யோகராஜன், லூக்கஸ் திருச்செல்வம் போன்ற இன்னும் பலர் கலாஜோதி எஸ்.சண்முகநாதனைத் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

இந்தக் கட்டுரையின் நோக்கம் வெறுமனே பட்டியல் இடுவதல்ல. அந்தப் பணியை ஏலவே ஜி.பி.வேதநாயகம்(முறைமுதல்வன்) என்பவர் பத்தி எழுத்தாகப் பல வாரங்கள் எழுதி வந்தார். அவற்றில் 1967களில் இருந்து 1972 முற்பகுதி வரையில் ஏறத்தாழ பத்துக்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களை நவாலியூர் த.பரமலிங்கம் என்னும் பெயரில் என்னால் எழுதப்பட்ட விவரங்கள் விடுபட்டுப் போயுள்ளன.

பொதுவாகப் பட்டியல் கோரிக்கையில் அவ்விதம் தவறி விடுதலும் தவிர்க்க முடிவதில்லை. அதனால் வானொலி நாடகங்களாக ஒலிபரப்பப்பட்ட தமிழ் நாடகங்களின் வீக்கதூக்கம்பற்றி மேலோட்டமாய் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

**மண்டைதீவு உபநிலையம்!**

1980 களுக்கு முன்பாக இலங்கை வானொலியின் நிகழ்ச்சிகளை வடபகுதி நேயர்கள் தெளிவாகக் கேட்பதற்காக மண்டைதீவில் அஞ்சல் ஒலிபரப்பு உப நிலையம் ஒன்றும் இயங்கி வந்தது. அதனூடாக நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கேட்கக் கிடைத்த வாய்ப்புக்களும், இங்கே தோன்றிய இடர்களால் நீடிக்காமல் போனது.

நவாலியூர் த.பரமலிங்கம் நாடகங்களை வானொலியில் எழுதி வந்த சுவடுகள் மேற்கூறிய நிலைமைகளால் ஓய்ந்துபோக அராலியூர் நா.சுந்தரம்பிள்ளை என்பவரது வானொலி நாடகங்கள் அதிகம் ஒலிபரப்பப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

1960,1970 களில் வி.எ.குகராஜா, ஞான சக்தி கந்தையா, நவாலியூர் த.பரமலிங்கம், ஜனகமகள் சிவஞானம் போன்றோரது நாடகப் பிரதிகள் மாறிமாறி ஒலிபரப்பப்பட்டும் வந்தன. அந்தக் காலம் மேற்சொன்னவர்களது நாடகப் பிரதிகள் போட்டிபோட்டுவளர்ச்சிநிலைக்குக்கொண்டு செல்லப்பட்டதையும் அவதானிக்கக் கூடியதாக அமைந்தன.

அந்த நாளில் ஜனகமகள் சிவஞானம் எமது நாட்டு எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தெரிவு செய்து நிகழ்ச்சித் தொடரொன்றுக்கு நாடகங்களாக்கி வழங்கி வந்ததையும் நினைவு கூரலாம். மற்றும் முத்தொள்ளாயிரம் இலக்கியக் காட்சிகளை நாடகங்களாக ஒலிபரப்புச் செய்ததும் குறிப்பிடக் கூடியன.

**அப்பாவும் மகனும்!**

இலங்கை வானொலியில் ஞாயிறு தினங்களில் ஒலிபரப்பிக் கொண்டிருந்த சிறுவர் மலர் நிகழ்ச்சியில் குட்டி நாடகங்கள் ஒலிபரப்பாகின. அவற்றில் எனதும் வேறு பலரது குட்டி நாடகப் பிரதிகள் ஒலிபரப்பாகி வந்தன. சி.சண்முகம் என்பவரால் எழுதப்பட்ட அப்பாவும் மகனும் தொடர் நாடகமும் ஒலிபரப்பாகிப் பிரசித்தி பெற்றிருந்தது.


தினந்தோறும் இரவு வேளைகளில் ஒலிபரப்பான முஸ்லிம் நிகழ்ச்சியில் செவ்வாய்க்கிழமைகளில் அரைமணி நேர நாடகங்கள் ஒலிபரப்பாகி வந்தன. அ...னில் பல்வேறுபட்ட முஸ்லிம் எழுத்தாளர்களின் நாடகப் பிரதிகள் ஒலிபரப்பாகின. எம்.அஸ்வத்கான் என்பவரது பிரதிகள் அதிகமாய் இடம் பிடித்தன.

எம்.அஸ்வத்கான் பிற்பாடு பிரதி எழுத்தாளரில் இருந்து நாடகத் தயாரிப்பாளராகவும் உயர்ந்தார்.


(24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுவோம்...



## கடலில் வேகமாக நீந்தும் மயில் மீன்



ஆழ்கடலில் மிகவும் வேகமாகச் செல்லும் ஓர் அரிய ஜீவன்களில் ஒன்றே மயில் மீன் என அழைக்கப்படுகின்றது. பறவைகளில் மயிலுக்கு தோகைகள் இருப்பதைப்போல இவ்வகை மீன்களுக்கும் தோகைகள் போன்று இறக்கைகள் இருப்பதால் மயில்மீன் என்கிறார்கள். இவ்வகை மீன்களின் மேல்புறத்தில் இரு இறக்கைகளும் வால் பகுதியில் ஓர் இறக்கையும் இருக்கும். இந்த மீனின் மேல்தாடை கீழ் தாடையை விட இரு மடங்கு பெரிதாக இருக்கும். மீனின் உடல்பகுதியில் இருபுறமும் 20க்கும் மேற்பட்ட வெள்ளைநிற வரிக்கோடுகள் காணப்படுகின்றன.

இதன் அலகு சுமார் 10அடி வரை நீளம் உடையதாகவும் மிகவும் கூர்மையானதாகவும் இருக்கிறது. இந்த அலகின் மூலம் படகுகளைக் கூட கொத்தி உடைத்து விடும் சக்தி உடையது. மீனின் மேல்பகுதி கரு ஊதா நிறத்திலும் அடிப்பகுதி வெள்ளை நிறம் கலந்த மண் நிறத்திலும் காணப்படுகிறது. ஒரு வருடத்தில் 1.2மீ முதல் 1.5 மீ வரை வளரக் கூடியது.

சுமார் 100கிலோ வரை எடையுடைய இம்மீன்கள் 16 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கிறதாம். ஒரு மீன் மட்டுமே குறைந்தது 2 லட்சம் மைல்களுக்கு மேல் கடலில் பிரயாணம் செய்வதுடன் வெவ்வேறு கடல் பகுதிகளுக்கும் மாறி மாறிச் சென்று கொண்டேயிருக்கும்.

ஒரு மீன் மட்டும் லட்சக் கணக்கான முட்டைகளை சங்கிலித் தொடர் போல இடுகிறதாம். இடப்பட்ட முட்டைகள் தட்ப வெட்ப சூழ்நிலைகளைத் தாங்கி அதற்கேற்றவாறு மீன்குஞ்சுகளாக மாறிக் கொள்கின்றன. வஞ்சிரம், கணவாய் மற்றும் தவளைகள் போன்றவையே இவற்றின் விருப்ப உணவு. இந்த மீனும் பெரும்பாலும் மனிதர்கள் சமைத்து சாப்பிடத்தான் பயன்படுகிறது என்றாலும் இவற்றைப் பிடிப்பது மிகவும் அரிதாகவே உள்ளது.

# முட்டாளும் புத்திசாலியும்



மழை! ஓயாத மழை! ஏரி நிறைந்து வழியும் அளவுக்கு மழை. அந்த ஏரி நீர் குளிர்ச்சி அடைந்து விட்டது. அந்தக் குளிரைத் தாங்க முடியாத ஒரு தவளை, மழை ஓய்ந்ததும் சற்று தூரத்திலுள்ள ஒரு கிணற்றுக்கு வந்தது. கிணற்று நீர் வெது வெதுப்பாக இருக்குமே என்பதால் கிணற்றுக்குள் குதித்தது.

அந்தக் கிணற்றில் பல காலமாக வாழ்ந்து வந்த ஒரு தவளை இந்தப் புதிய தவளையை வரவேற்றது. "நான் வெகுநாள்களாகப் பேச்சுத் துணைக்குக்கூட ஆளில்லாமல் தவித்துக்கொண்டிருந்தேன். உன்னைக் கண்டதும் எனக்கு மகிழ்ச்சி" எனக் கூறிப் பொந்தில் சேமித்து வைத்திருந்த உணவு வகைகளைப் புதிய தவளைக்கு கொடுத்தது.

இரண்டு தவளைகளும் பேசிக் கொண்டிருந்தன. கிணற்றிலிருந்த மற்ற தவளைகளுக்குப் புதிய தவளை வந்தது பிடிக்கவில்லை. "இங்கே கிடைக்கும் உணவு நமக்கே போதவில்லை. இதில் புதிய விருந்தாளி வேறு" எனக் கவலைப்பட்டன. புதிய விருந்தாளியை எப்படியும் துரத்திவிட முடிவு செய்தன.

இரண்டு தவளைகளும் பேசிக்கொண்டிருப்பதை அருகே சென்று வேடிக்கை பார்த்தன. அப்போது அந்தக் கிணற்றுத் தவளை ஏரித் தவளையிடம் "நண்பனே! நீ இத்தனை நாளும் எங்கே தங்கியிருந்தாய்? எனக் கேட்டது.

"நான் ஏரியில் தங்கி இருந்தேன்" என்றது ஏரித் தவளை.

'ஏரியா? அப்படியென்றால் என்ன? எனக் கேட்டது கிணற்றுத் தவளை.

"இந்தக் கிணற்றைப் போன்ற பெரிய நீர் நிலை. அதில் மீன், ஆமை, முதலை ஆகியவை உண்டு" என்றது ஏரித்தவளை.

"இந்தக் கிணற்றைப் போன்றதில் அவ்வளவு உயிரினங்களா?" என்றுகேட்டது கிணற்றுத் தவளை.

"இந்தக் கிணற்றைவிட மிகப் பெரியது ஏரி" என்றது ஏரித்தவளை.

கிணற்றுத் தவளை நம்பவில்லை. "நண்பா நீ பொய் சொல்லுகிறாய். இந்த கிணற்றைவிட பெரிய நீர் நிலை உலகத்தில் இருக்க முடியாது" என்றது.

ஏரித்தவளை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கிணற்றுத் தவளை நம்பவில்லை. கூட இருந்த மற்ற தவளைகளும் நம்பவில்லை.

எல்லாத் தவளைகளும் ஏரித்தவளையைப் பார்த்து "நீ பொய்யன் புரட்டன். உன்னை நம்பி இங்கே வைத்திருந்தால் ஆபத்து" என்று கூறி தவளையைத் தாக்க முயன்றன.

அப்போது கிணற்றிருந்து நீர் எடுக்க ஒரு பெண் தோண்டியை இறக்கியபோது அதனுள் தாவிச் சென்று குதித்த ஏரித் தவளை தோண்டித் தண் ணீருடன் மேலே சென்றது. தாவிக் குதித்து ஏரி நோக்கிச் சென்றது.

முட்டாள்களிடம் வாதாடுவதை விட அவர்களிடமிருந்து ஒதுங்கிச் செல்வதே சிறந்தது.

# வரலாற்றில் இன்றைய தினம்

1785 - ஜோர்ஜியா பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. இது முதலாவது அமெரிக்க பொதுப் பல்கலைக்கழகம் ஆகும்.

1939 - லொக்கீட் பி-38 லைற்றினிங் குண்டு வீச்சு விமானத்தின் முதலாவது பறப்பு.

1943 - இரண்டாம் உலக மகா போர் ஜேர்மனி மீதான அமெரிக்க குண்டு வீச்சு விமானங்களின் முதலாவது தாக்குதல்.

1961 - சோவியத் நீர் மூழ்கிக் கப்பல் எஸ்.-80 மூழ்கி அதிலிருந்த அனைவரும் சாவு.

1967 - அப்பொலோ 1 விண்கலத்தின் சோதனையின் போது விண்வெளி வீரர்கள் ஹீஸ் கிறிஸ்ஸம், எட்வட் வைற் மற்றும் றோகர் சபீ தீப்பிடித்துச் சாவு.

1967 - ஐக்கிய அமெரிக்கா ஐக்கிய ராஜ்ஜியம் மற்றும் சோவியத் ஒன்றியம் ஆகியான விண்வெளி ஒப்பந்தத்தில் வோஷங்டனில் வைத்து ஒப்பமிட்டன.

1973 - பரிஸ் சமாதான ஒப்பந்தத்தின் மூலம் உத்தியோக பூர்வமாக வியட்நாம் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

1984 - பெப்ஸி விளம்பரப்படப் பிடிப்பின்போது பொப் பாடகர்மைக்கல் ஜாக்ஸன் தீப்பிடித்து இரண்டாம் நிலைக் காயங்களுக்கு உள்ளானார்.

1993 - தடா சட்டத்தின் கீழ் நெடுமாறன் கைது.

1994 - பேச்சுக்கு வழி ஏற்படுத்த கைதிகளை விடுவிக்குமாறு புலிகளிடம் பிரதமர் ரணில் கோரிக்கை.

1994 - யாழ். மக்களின் கஷ்டங்களை நீக்குவதற்கு அரசுடன் தொடர்பு கொண்டு பேசுவேன் என அதி மேற்றிரர்ணியார் அதி வண. நீக்கிலஸ் பெர்னாண்டோ தெரிவிப்பு.

1994 - அரசியல் தீர்வே ஒரே வழி என யாழ்.அரச அதிபர் கா.மாணிக்க வாசகர் கொழும்பில் பேட்டி.

1995 - இரணவிலவில் வொய்ஸ ஒப் அமெரிக்க நிறுவ அரசு அனுமதி.

2004 - இந்தியக் குடியரசு தினத்தன்று பிரதமர் வாஜ்பேயின் பேரன் படுகொலை.

2006 - மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஒரு மாத காலத்தில் 208 முறைப்பாடுகள்.

2008 - 13 ஆவது திருத்த நடைமுறையை ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லையென ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ சூளுரை.

2013 - ஜெனீவா சமருக்கு முன் 13 ஐ ஒழிக்க தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கோரிக்கை

2013 - ரூவாண்டாப் படுகொலை தொடர்பாக சர்வதேசப் பொலிஸாரால் தேடப்பட்டவர் பிரான்ஸில் வைத்துக் கைது.



## பச்சைக்கிளியே வா வா

பச்சைக்கிளியே வா வா
பாலும் சோறும் உண்ண வா
கொச்சி மஞ்சள் பூச வா
கொஞ்சி விளையாட வா
கவலையெல்லாம் நீங்கவே
களிப்பெழுந்து பொங்கவே
பவள வாய் திறந்து நீ
பாடுவாயே தத்தம்மா
பையப் பைய பறந்து வா
பாடிப் பாடிக் களித்து வா
கையில் வந்து இருக்க வா
கனி அருந்த ஓடி வா

## பழமொழிகள்

1. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
2. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்
3. இறைக்கிற ஊற்றே சுரக்கும்
4. நிறைகுடம் தளம்பாது. குறைகுடம் கூத்தாடும்
5. பெண் என்றால் பேயும் இரங்கும்
6. யானைகொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்
7. கெடுவான் கேடு நினைப்பான்
8. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
9. தோல்வியே வெற்றியின் முதல் படி
10. சர்க்கரை என்று சொன்னால் தித்திக்குமா
11. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது
12. பழகப் பழகப் பாலும் புளிக்கும்
13. வேலியே பயிரை மேய்ந்தால் விளைவு என்ன?
14. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்
15. துள்ளுகிற மாடு பொதி சுமக்காது
16. எலி வளையானாலும் தனி வளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிருந்தாவனத்தில் திலகார்ப்பணம்

கே.எஸ்.சிவஞானராஜா

இலங்கையின் தலைசிறந்த கர்நாடக சங்கீத வித்துவானாக விளங்கிய, அமரர் எல்.திலகநாயகம் போலின் ஆறாவது ஞாபகார்த்தமாக, நல்லூர் சோமராகம் இசைமன்றத்தினர் நடத்திய இசையர்ப்பணமே திலகார்ப்பணமாகும்.

இந்நிகழ்வு, நல்லூர் ஸ்ரீ ஸ்ரீஇராகவேந்த்ர சுவாமிகள் ருத்திகா – பிருந்தாவனத்தில், கடந்த 5 ஆம் திகதி சனியன்று மாலை சிறப்பாக நடைபெற்றது. சங்கீத பூசணம் வி. சிவஞானசேகரம் பிரதம விருந்தினராகவும், மூத்த இசைக்கலைஞர் சங்கீத பூசணம் எஸ். பாலசிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்து அரங்கைச் சிறப்பித்தனர்.

**பல்லவி**

இராகம் – தாளம் – பல்லவி பாடுவதில் மிகச்சமர்த்தரான திலகநாயகம்போல், அசுர வேக கற்பனாஸ்வரம் பாடுவதிலும், கிரக பேதம் செய்வதிலும், விற்பன்னர். இன, மத மொழிகளுக்கப்பால் சமூக நல்லிணக்கத்தை வெளிக்காட்டுவதில் அயராது பாடுபட்டவர். பல்லவி போல் – திலகநாயகம் போல் இலங்கையின் இசை வரலாற்றில், பல்லவி என்ற மனோதர்மத்துக்கு போலின் விஸ்தாரமான வியாபகம், அனு லோம பிரதி லோம அலங்காரங்கள் போல இதுவரை யாருமே பாடியதில்லை என்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயமாகும். அபூர்வ இராகங்களிலும், கனதியான தாளங்களிலும் இசையரங்கை உருப்படிகளால் மூழ்க வைத்தவரே போல் அவர்கள். ஏராளமான சீடர்களை உருவாக்கிய பெருமையைத் தனதாக்கியவர். அவரது பெறுமதியான சீடர்களில், திருமதி குமுதா உமாகாந்தன் முக்கியமானவர்.இவரது ஏற்பாட்டிலேதான் மேற்படி திலகார்ப்பணம் சமர்ப்பணம் அரங்கேறியது.

**நிகழ்ச்சிகள்**

இசையோடு தமிழ்பாடி அழைத்திட்ட குழு ஒன்றில் : ஏழு மாணவர்களும், நல்லூர் முருகனின் மணியோசையைப் புகழ்ந்து பாடிய குழு இரண்டில் : ஐந்து மாணவர்களும்,

செய்நன்றி மறத்தலாகாதென அறம் கூறிவந்திட்ட குழு மூன்றில் நான்கு மாணவர்களும், செந்தமிழின் இசையை வாத்தியத்தில் வடித்த குழு நான்கில்: மூன்று மாணவர்களும் மானிடன் உடலில் ஒலிக்கக் கூடிய ஏழு ஸ்வரங்களை வியந்து பாடிய குழு ஐந்தில்: ஐந்து மாணவர்களும், மொத்தத்தில் சமர்ப்பணம் செய்த இருபத்தெட்டு மாணவர்களையும் பாராட்டியே மகிழ வேண்டும். குமுதா உமாகாந்தனின் இந்த முயற்சி பிரமாதமே. கர்நாடக சங்கீத பரம்பரையொன்று வாழையடி வாழையாக அடுத்த சந்ததிக்கு வரமாகிறது என்பதை – திலகநாயகம் போலின் குருத்துவம் – நிலைநிறுத்தியுள்ளது. இசைக்குரிய பக்குவம் துளிர் விட்ட பாங்கு அருமை.

**கௌரவம்**

ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் பீடத்தினர், வருடா வருடம் ம்ருத்திகா பிருந்தாவனத்தில் சுவாமிகளின் தரிசனத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடி வரும் வேளையில், இசை அபிசேகம் செய்து பக்திப் பிரவாகத்தைக் காணுற்ற திலகநாயகம் போலின் குருவாகிய சங்கீத பூசணம் எஸ்.பாலசிங்கம் பேறாகக் கருதியமையால், அவரைக் கௌரவிக்கும் பெரியதோர் கைங்கரியமும் இங்கே கைகூடியமை போற்றுதற்குரியது. போல் அவர்கள் இயற்றிய சொந்த சாகித்தியங்களும், ராகவேந்திர பாமாலைகளும் திலகார்ப்பணத்துக்கு மேலும் மகிமை சேர்த்தது எனலாம். திருமதி சசிதேவி சிவசிதம்பரத்தின் முழு ஒத்துழைப்பும், ஆதரவும் இந்நிகழ்வை மிக்க பெறுமதியாக்கிற்று. அனுபவம் வாய்ந்த சேவியர் அவர்களால் ஒலியமைப்புச் செய்யப்பட்டமை, பட்டாசு மாமா என்ற புகழ் பெற்ற நாமத்தை ஒருதரம் உச்சரிக்க வைத்தது. அளவான மண்டபம் மிகத் தூய்மை ததும்பும் பக்தி சொரூபங்கள். பார்த்தாலே பசி தீரும் பாக்கியமான பீடம் வேறு என்னதான் வேண்டும்?


**நிறைவு**

பேராசிரியர் என்.சண்முகலிங்கனும், சங்கீத பூசணம் – எஸ்.கணபதிப்பிள்ளையும், சங்கீத பூசணம் – வி.சிவஞானசேகரமும் திலகார்ப் பணத்துக்குப் புகழாரம் சேர்த்தனர்.

**வேண்டுதல்**

மாதா, மாதம் பொருத்தமான ஒரு நாளில் வளரும் இசைக்கலைஞர்களின் நிகழ்வுகள் சோமராகம் மன்றத்தினரால் அரங்கேற்றப்பட வேண்டும். இது ஒரு இசைப்பாணியாக வெல்லப்படுமாயின் யாழ்ப்பாணத்தில் குரு – சிஷ்ய மகத்துவம் தோற்காது காப்பாற்றப்படும் என்பது காலத்தின் நோக்காகும்.

# சட்டத்தரணி சுப்பிரமணியம் கந்தசாமி



வாழ்க்கை என்பது ஒரு கலை. அதில் தேறுதல் கடமை, வாழத் தெரிந்தவர்களாக இருப்பதுதான் உலகத்தாருக்கு நாம் செய்யக்கூடிய மிகப்பெருஞ் சேவை–என்றார். மு.வரதராசன் கடந்த 8 ஆம் திகதி காலமான பிரபல வழக்கறிஞர் சு.கந்த சாமியின் வாழ்வு மு.வவின் பொன்மொழிக்கு முற்றும் பொருந்துவதாகவே எனக்குப்பட்டது.

கந்தசாமி சாவகச்சேரி டிறிபேறிக் கல்லூரியில் தமது படிப்பைமுடித்துவிட்டுத்தமக்குரியதுறைவழக்குரைத்தலே என்றுணர்ந்து சட்டக்கல்லூரியில் கற்று அரங்கேறினார். சொந்த ஊராகிய சாவகச்சேரியிலேயே தமது தொழிலை ஆரம்பித்து, மக்கள் வியந்து போற்றும் வண்ணம் நேர்மையாகத் தமது பணியைத் தொடர்ந்தார். பத்மினி தேவியைக் கரம்பிடித்து மூன்று ஆண் பிள்ளைகளையும் மூன்று பெண் பிள்ளைகளையும் பெற்றெடுத்தார். அறுவருக்கும் சிறந்த கல்வியளித்து அவையத்து முந்தியிருக்க செய்தார். இவர் பிள்ளைகளின் ஒழுக்கத்திலும், கல்வியிலும் கண்ணுங்கருத்துமாக இருந்தசான்றோன்.

சு.கந்தசாமி பாசத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தவர். எனது ஊர், எனது பாடசாலை, எனது உறவுகள் என்பனதான் அவரின் பேச்சும் மூச்சுமாக– இருந்தன. கடந்த 50 வருட காலத்தில் சாவகச்சேரியில் அடையாளமே தெரியாதபடி அனேகமாற்றங்கள் நடந்து விட்டன. இத்தனை மாற்றங்கள் மத்தியில் வானளாவ உயர்ந்து நின்ற ஓர் ஆலமரம் என்றால் அது சட்டத்தரணி கந்தசாமிதான். டிறிபேறிக் கல்லூரி மீது அவர் கொண்டிருந்த பற்றும், விசுவாசமும் அசைக்க முடியாதவை. அந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஆர்வம் மிக்க உறுப்பினராகத் திகழ்ந்த கந்தசாமி கல்லூரியின் நிகழ்வுகள் எல்லாவற்றிலும் வந்து கலந்து கொள்வார். டிறிபேக்கில் தமக்குக் கற்பித்த ஆசிரியர்களைப் பற்றி அடிக்கடி கூறுவார்.

சாவகச்சேரியில் நீதிமன்றத்துக்கு முன்னால் அவருடைய அலுவலகம் இருந்தது. அதற்கு முன்னால் அவருடைய மொறிஸ்மைனர் கார் நிற்கும். சில காலமாக சாவகச்சேரிக்கு நான் சென்ற பொழுது அதைக் காணமுடியவில்லை. அதனால் அவரைப் பற்றி விசாரித்தபொழுது அவர் நோய் வாய்ப்பட்டிருக்கின்றார், விரைவில் வந்து விடுவார் என்று கூறினார்கள். பின்னர் கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை உதயனில் வந்த செய்தி என்னைக் கதிகலங்கச் செய்தது. சாவகச்சேரியின் கடைசி ஆலமரமும் சரிந்து விட்டது என்று என்நண்பர்களிடம் கூறினேன்.

இறைவன் இந்தச் சான்றோனை எம்மோடு வாழவிட்டார். சிறப்புற வாழ்ந்த சட்டத்தரணியின் வாழ்வுக்கு அவருடைய குடும்பம் மட்டுமன்றி சாவகச்சேரி மக்கள் அனைவருமே கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

**கலாநிதி வண. எஸ்.ஜெபநேசன்**




## இசையால் இறைவனை ஆட்கொண்ட
## அமரர் நவாலியூர் சிவஸ்ரீ.சபாரத்தின சிவம்

சபா ஐயா என அன்பாக அழைக்கப்படும் நவாலியூர் சிவஸ்ரீ. இளையதம்பி சபாரத்தினசிவம் கடந்த திங்கட்கிழமை (11.01.2016) அன்று இறைவனடி சேர்ந்தார்.

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கு புலவர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினசிவம் தனது குரல் வளத்தால் ஆலயங்களில் இனிமையான பாடல்களை வழங்கினார்.

வடபால் உள்ள பல ஆலயங்களுக்கு பாடல்களை இயற்றிஇசையமைத்து தானே பாடியுள்ள வரலாறு இன்று வகை சொல்லும். ஆலயங்களுக்குச் செல்லும்போது சுருதிப் பெட்டியுடன் சென்று பஜனைகளை இசைப்பதில் வள்ளலாகத் திகழ்ந்தார். இதனால் நவாலியூர் சிவஸ்ரீ. இளையதம்பி சபாரத்தினசிவம் இசைஞான திலகம், பஜனை மணி, அருள்ஞானபனுவல் எனும் பட்டங்கள் இவருக்கு கிடைக்கலாயின.



இந்து கலாசார அமைச்சில் நடத்தப்பட்ட சைவகுருமாருக்கான 10 நாள் விசேட பயிற்சியில் சிறப்புற கற்றுத்தேறியதால் சிவத்திரு எனும் சிறப்புப் பட்டமும் இவருக்குக் கிடைத்திருந்தது. ஆலயங்களில் பூசை வழிபாட்டையும் சிவத்தொண்டையும் செய்துவந்த சபாரத்தினசிவம் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தம்மை முழுமையாக அர்ப்பணித்து ஆலய பிரதம குருவாக, பூசகராக பூசை வழிபாட்டை மேற்கொண்டார்.

வலி.தென்மேற்கில் பல சமூக அமைப்புக்களில் தம்மை இணைத்துக்கொண்ட அவர் சிறியவர்கள், இளைஞர்களுக்கு இசையையும்சுருதி வாசிப்பதையும் முறையாகப் பயிற்றுவித்தார். இதற்காக நவாலி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த சனசமூக நிலையம் 'சமூகச் சுடர்' எனும் கௌரவ பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. சமயப்பணி, இசைப் பணி, சமூகப்பணி ஆகிய முப்பணிகளை வடபால் உள்ள மக்களுக்கு இயன்றவரை செய்த சமூகத் தொண்டனாக காட்சியளித்தார். நவாலி வடக்கு பெத்தனாச்சி அம்மன் ஆலயத்தில் பிரதம குருவாக இருந்த வேளையில் ஏற்பட்ட நோயின் நிமித்தம் தனது பணிகளைக் குறைத்து வந்த சபாரத்தினசிவம் தனது இறுதிக்காலம் வரை ஆலயங்களுக்கு மலர்கள் வழங்குவதற்காக தினமும் காலை மாலை என இருநேரமும் பூப்பறித்து சுவாமிக்குப் பூச்சொரியும் வேலையை நித்தமும் செய்து கொண்டிருந்தார்.

இவரது மனைவியாகிய கணேஷ்வரி தனது கணவருக்கு ஏற்றாற்போல் ஆலயத் தொண்டில் இணைந்து இருவரும் பணிபுரிந்தனர். 2016 ஆம் ஆண்டில் கலாபூசணம் விருதுக்கு விண்ணப்பம் செய்வோம் என எண்ணிய வேளையில் அவர் கடந்த 11 ஆம் திகதி அன்று இறைபதம் எய்திய செய்தி வலி.தென்மேற்கு மக்களை ஒருகணம் உறையச் செய்துவிட்டது. சபாரத்தினம் ஐயா அனைத்து மக்களையும்சமூகங்களையும் ஒன்றிணைத்த உயர்ந்த உள்ளம் கொண்டவர். அனைவரது வாழ்விலும் சுபீட்சம் நிறைய வேண்டும் என எண்ணிய பெரியார்.அவரது எண்ணம்சிந்தனை நோக்கு நிறைவேற எல்லாம் வல்ல இறைவனை வணங்குவோமாக.

**செ.ரமேஷ்**
**உள்ளூராட்சி உதவியாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலையைப் பேசும் "கூத்தாடி" குறும்படம்

கோகுலராகவன்

வடமராட்சி கிழக்கு கலாசாரப் பேரவையின் தயாரிப்பில், தபினின் இயக்கத்தில் அண்மையில் "கூத்தாடி" குறும்திரைப் படம் வெளிவந்திருக்கிறது. இது தபினின் முதல் முயற்சி. அதில் அவர் வெற்றி பெற்றிருக்கிறார் என்றே சொல்லத் தோன்றுகின்றது.

குறுந்திரைப்படம் என்பதன் வரையறை பற்றிய தெளிவுடன் "கூத்தாடி" இயக்கப் பட்டிருக்கிறது. போரின் முடிவின் பின்னான யாழ்ப்பாணத்தில் குறுந்திரைப்பட உருவாக்கத்தில் இளைஞர், யுவதிகள் பேரவாவுடன் இறங்கி இருப்பது மகிழ் வானது.

ஆனால் அந்தப் படைப்புகளில் குறும்பட வரையறை, வியாபகம், கட்டுமானம், போக்கு, பிரதேச அடையாளம் பற்றிய விழிப்புணர்வு அற்ற நிலையில் திரைப்பட இயக்கம் நிகழ்வதாகவே படுகின்றது. மாறாகக் "கூத்தாடி" மண்ணின் அடையாளத்தைப் பேணி, குறுந்திரைப்பட வரையறையைக் கருத்தில் கொண்டு, இயக்கப்பட்டிருப்பது மிகச் சாதமாகக் கொள்ள முடிகின்றது.







குறுந்திரைப்படங்கள் சிலவேளைகளில் நாடகப்பாணியான திருப்பத்தைக் கொண்டவையாக அமைந்து விடுகின்றன. இது ஒரு பாணியாக இருப்பினும் கதையை, அதன் போக்கில் விட்டு செய்தியைச் சொல்வது நவீன பாணியாக அமையலாம்.

கூத்தாடியும் நாடகப்பாணி திருப்பத்தைக் கொண்ட கதையும், முடிவும் கொண்டது தான். ஆனால் சொல்ல வந்த செய்திக்கு அந்தப்பாணி தேவைப்பட்டு இருப்பதால், கூத்தாடி இயல்பான போக்குக்கு மாறி இருப்பதாகத் தோன்றுகின்றது.

வழக்கிழந்து போகும் ஒரு கலைவடிவம் எவ்வாறு புதிய பரம்பரையால் கவனிக் கப்படாமல் போகின்றது என்பதும், அந்தக் கலைவடிவம் புதிய பரம்பரையால் பிழைப்பு வடிவமாகக் கொள்ளப்படுவதும் படத்தின் பிரதான கரு.

நடிகர்கள் சரிவரக் கையாளப்பட்டுள்ளார்கள். இது இயக்குநரின் திறமையை வெளிக்காட்டுகின்றது. சுயவடிவில் அண்ணாவியாராக இருக்கும் இராமநாதன் திரையிலும் அண்ணாவியாராகத் தோன்றுகின்றார். தனக்குப் பின் கூத்துக் கலையை வளர்க்க தனது மகன் தயாராக இல்லை என்ற பெருங்கவலையுடன் வாழும் கலைஞனாக படத்தில் வாழ்கிறார். அவரைத் தேடிப்பிடித்து நடிக்க வைத்திருப்பது அக்கலைக்குச் செய்யும் சமர்ப்பணமாகக் கொள்ள முடியும்.

இராமநாதன், தான் கூத்தாடிய மர நிழலை வெறுமையுடன் நோக்கும் காட்சி ஒரு மகா கலையானது மண்ணினால் மறக்கப்படுகின்றது என்பதற்கான ஏக்கமாக நிகழ்கின்றது. மரத்தின் அடியில் கிடக்கும் வெற்று பியர் "ரின்களை" எட்டி உதைத்து, இளைய சமுதாயம் எங்கேலயித்து நிற்கிறது என்பதை இயக்குநர் தொடுகின்றார்.

அண்ணாவியாரும், மகனும் இரவுப் பொழுதில் ஒரு வள்ளத்தின் மேலிருந்து உரையாடுவதும் , அதற்கான காட்சிப் படிமமும் படத்தில் இயல்பாகத் தோன்றுகின்றது. தூக்கலாகவும் இருக்கிறது.

மூக்குப்பேணியில் தேநீர் குடிக்கும் பழைமை வாதியான தந்தையினை- அண்ணாவி இராமநாதனை- காணும் மகன் அக்கலையால் ஒரு பிரயோசனமும் இல்லை என்கிறான். தந்தையின் ஏக்கம் தொடர்கின்றது.

மகனின் நடிப்பு போதுமானதாக இருந்தாலும், இயக்குநர் மகனை நடிக்க வைக்க சில இடங்களில் அதிக அழுத்தத்தைக் காட்ட இயல்புக்கு மீறி நடிக்க வைத்திருப்பதைத் தவிர்த்திருக்கலாம்.

உரையாடல் முறைமை யாழ்ப்பாணப் பேச்சுவழக்கு முறையைக் கொண்டிருப்பதும், பிரதேச அடையாளத்தை வெளிக் கொணர வேண்டியதன் அவசியம் இயக்குநரால் முழுதாக உணரப்பட்டிருப் பதும் , தற்போதைய பிற குறுந்திரைப்பட இயக்குநர்களுக்கான பிரத்தியேக செய்தி.

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் குறும்படங்களின் செலவை ஈடு செய்ய முடியாமல் பலரும் கடினப்படுவது கவலை தரும் விடயம். கூத்தாடி படத்தின் காட்சிகளும் , அதிக பொருள் செலவில்லாமல் அவை எடுக்கப்பட்டிருப்பதும் திரைப்படத்தின் பொருளாதரச்சுமையை குறைத்திருப்பதும் இங்கு உணரப்பட் வேண்டியதாகும்.

மொத்ததில் ச.ராகவனின் "மூக்குப் பேணி", க.ரதிதரனின் "கால்", "வெட்டை" போன்ற ஈழத்துக் குறும்படங்களின் வரிசையில் "கூத்தாடியும்" இணைந்து கொண்டுள்ளது.

# வானொலி நாடகங்கள்!

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விதம் இலங்கை வானொலி கடந்து போன 90 ஆண்டு களிலும் ஒலிபரப்புச் செய்த வானொலி நாடகங்கள் ஆயிரக் கணக்கானவை. தமிழ் நாடக வளர்ச்சித் தொடரில் வானொலி நாடகங்களையும் தராசில் போட்டுப் பார்க்காமல் தவிர்த்து விடமுடியுமா? வானொலி நாடகப் பிரதிகளை எழுதிக் குவித்தவரெனப் பார்த்தால் இதுவரை ஐந்நூறு நாடகங்களைப் பிரதி ஆக்கம் செய்துள்ளவரென்று தன்னைக் குறிப் பிட்டு வருகின்ற அராலியூர் நா.சுந்தரம் பிள்ளையைச் சொல்லலாம். சி.சண்முகம், இலங்கையர் கோன் மற்றும் இளங்கீரன், சில்லையூர் செல்வராஜன், வரணியூரான் எஸ்.எஸ். கணேசபிள்ளை, கே.எம்.வாசகர், எஸ்.ராமதாஸ் போன்றோர் தொடர் நாடகங் களை எழுதி வந்தனர்.



கவிஞர் இ.முருகையன், மகாகவி உருத்திரமூர்த்தி, பா.சத்தியசீலன், திமிலைத் துமிலன் ஆகியவர்களது கவிதை நாடகங்களையும், மகாகவி பாரதியின் குயிற்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற குறும் நெடும் காவியங்களை சிறப்பு நிகழ்ச்சிகளாகத் தொடர்ந்தும் அன்னை வானொலி நாடகங்களாக்கி வழங்கியமையையும் மறக்கலாகாது.

**தரமுயர்ந்த நாடகங்கள்!**

அனைத்து வானொலி நடகங்களினதும் பிரதிகளின் தரம், தயாரிப்பு, குரலூடான பாத்திரங்களின் வார்ப்பு போன்றனவைச் சீர்தூக்கிப் பார்த்தால் இலங்கையர் கோனின் லண்டன் கந்தையா தொடர், முஸ்லிம் நிகழ்ச்சிகளில் ஒலி பரப்பப்பட்ட அரைமணி நேர நாடகங்கள் என்பன முதன்மையாகத் தேறுகின்றன.

இலங்கை வானொலிக்குப் பிற்காலத்தில் பணிப்பாளர்களில் ஒருவராகத் திகழ்ந்த திருமதி பொன்மணி குலசிங்கம் தயாரித்து வழங்கிவந்த மாதர் நிகழ்ச்சி யில் அறிமுகம் செய்து வைத்து வாரந் தோறும் ஒலிபரப்பான சிறுகதை நாடகம் என்னும் புதிய நாடகப் பிரதி ஆக்கங் களைப் பற்றியும் கட்டுரையின் இறுதிப் பகுதியில் குறிப்பிடாமல் விடுபட்டு, இருந்தால் பெரியதோர் குறைபாடாகவே அமைந்திருக்கும்.

தமிழ் நாடக வளர்ச்சிப் போக்கில் வானொலி நாடகங் களையும் தவிர்த்துப் பார்க்க முடி யாதென்பதையும் சுட்டிக்காட்டி அதற்குப் பெரும்பங்காற்றிய இலங்கை வானொலியின் சேவையைப் பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டுமெனக் கூறிக் கட்டுரை நிறைவு செய்யப்படுகிறது.

# நூல் அறிமுக விழா



சைவாசிரியர்களைத் தோற்றுவித்த காரை நகர் ச.அருணசலம் என்ற நூலின் அறிமுகவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்புதமிழ்ச்சங்க மண்டபத்தில் கலாபூசணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை தலைமையில் இடம் பெற்றது. தொழிலதிபர் எஸ்.வி.எம்.குணரத்தினம் தம்பதியரின் மங்கல விளக்கு ஏற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. வரவேற்புரையை கனடாவிலிருத்து வெளிவரும் அன்பு நெறி இதழின் ஆசிரியர் வடிவழகாம்பாள் விசுவலிங்கமும் நூலிற்கான அறிமுக உரையினை கனடா சைவ சித்தாந்த மன்றத்தலைவர் சிவநெறிச் செல்வர் தி.விசுவலிங்கமும் நூலிற்கான நயப்புரைகளை அருள்மொழிஅரசி வசந்தா வைத்தியநாதன், தமிழருவி த.சிவகுமாரன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் ஆகியோர் வழங்கினர். சிறப்புரையை சித்தாந்தரத்தினம் க.பத்மானந்தனும் நன்றியுரையினை ஜெகதீசனும் ஆற்றினர்.

தமிழினியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமஷ்டி ஆட்சிக்கு

எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்றுக் காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விசேட ஊடகவியலாளர் மாநாடொன்று நடைபெற்றது.

இன்றைய சமகால அரசியல் நிகழ்வுகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அணுகுமுறை மற்றும் நிலைப்பாடுகள் தொடர்பாக சுமந்திரன் விளக்கம் அளித்தார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த சுமந்திரன் சமஷ்டி முறை தொடர்பாக தெரிவிக்கையில்,.

நாட்டின் நிர்வாகத்தில் அனைத்து இன மக்களும் அதிகாரங்களைப் பகிர்ந்துகொண்டு சமஷ்டி முறைமை ஆட்சி என்றால் நாடு ஒன்றுபடும் அதேவேளை, ஒற்றை ஆட்சி முறைமை என்றால் நாடு பிளவுபடும். ஓரினத்தை மற்றோர் இனம் அடிமைப்படுத்த முனையும்போதுதான் குரோதமும், பிரிவினைவாதமும் ஏற்படும். இதனை சிங்கள் மக்கள் தமது தலைவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

சமஷ்டி முறை அதிகாரப்பரவலாக்கம் தமிழ் மக்களால் உச்சரிக்கப்பட்ட ஒரு புதிய சொல் அல்ல. 1926ஆம் ஆண்டில் சிங்கள மக்களால் தேசியத் தலைவராக இன்னும் மதிக்கப்படும் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவால் தான் முன்மொழியப்பட்டது.

தன்னுடைய முன்மொழிவை நியாயப்படுத்தி பத்திரிகையில் ஆக்கபூர்வமான ஐந்து கட்டுரைகளை எழுதியுள்ளார். அதுமட்டுமல்ல, சுவிஸ் நாட்டில் இருப்பதுபோன்று ஒரு சமஷ்டி முறையே இலங்கைக்கும் பொருத்தமானது என்றும் அடித்துக் கூறியுள்ளார்.

1931ஆம் ஆண்டில் சோல்பரி ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்த கண்டிய சிங்களத் தலைவர்களும் சமஷ்டி முறையே ஏற்றது என சாட்சியமளித்துப் பதிலளித்துப் பதிவு செய்துள்ளனர்.

எனவே, நாட்டின் நலனில் அக்கறையுடன் செயற்பட்ட தேசிய தலைவர்களும் சிங்கள மக்களும் சமஷ்டி ஆட்சி முறைமையை எதிர்க்கவில்லை. சில சுயநலவாத அரசியல் பினாமிகளே நாடு பிளவுபட்டுவிடும் என்ற பிரேமையை ஏற்படுத்தி இனவாதத்தைத் தூண்டுகின்றனர்.

நாட்டின் நலனில் அக்கறை கொண்ட போதி மாதவனின் தர்ம போதனைகளைப் பின்பற்றும் சிங்கள மக்கள், தமது தலைவர்களும் யதார்த்தத்தை உணர்ந்து செயற்படவேண்டுமென அழுத்தம் கொடுக்கவேண்டும் என சிங்கள சகோதரர்களிடம் கோரிக்கை ஒன்றை அன்பாக முன்வைக்கின்றேன் என்று சுமந்திரன் குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்பு
பொறிமுறை விவாதம்
பின்போடப்பட்டது ஏன்?

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு அடித்தளமாக உறுதியான பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்காக முன்வைக்கப்பட்ட பிரேரணை மீதான விவாதம் மூன்றாவது தடவையாகவும பின்போடப்பட்டுள்ளது. அதற்கான காரணம் என்ன என்று ஒரு வினா எழுப்பப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் கடந்த 9ஆம் திகதி பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு 12ஆம் திகதி விவாதிக்கப்பட்டு இன்று (நேற்று) 26ஆம் திகதி விவாதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. எனினும், இன்று (நேற்று) விவாதிக்கப்படமாட்டாது. இவ்விடயம் பெப்ரவரி மாத அமர்வின் போது விவாதிக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதியும் பிரதமரும் இவ்விடயம் தொடர்பாக மிகவும் கரிசனையுடன் செயற்படுகின்றனர். அவசியமான பொறிமுறையை அனைத்து தரப்பினரும் ஒற்றுமையாக இணைந்து உருவாக்க வேண்டும். சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் இவ்விரு கட்சிகளும் இணைந்தே பிரேரணையை முன்வைத்துள்ளன. இரு பிரதான கட்சிகள் முன்வைத்த பிரேரணையை மழுங்கடிக்கச் செய்ய சில பிற்போக்குவாதிகள் முயல்கின்றனர். அதனை மலினப்படுத்த இடமளிக்கக் கூடாது. அனைத்து தரப்பினரின் ஏகோபித்த ஆதரவுடன் செயற்படுத்தவே அரசு விரும்புகின்றது. கடந்த காலங்களில் சிறுபான்மையினரின் அபிலாஷைகளை உதாசீனப்படுத்தி பெரும்பான்மை என்ற உணர்வுடன் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புகள் அனைத்துமே தோல்வியில்தான் முடிந்துள்ளன.

ஆனால், இலங்கையின் சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயமாக சிறுபான்மை இனப் பிரதிநிதிகளினதும், சிறுபான்மை இன மக்களின் பங்களிப்புடனும் ஒரு புதிய அரசமைப்பு உருவாக்கப்படவுள்ளது. இதனால் நாம் இவ்விடயத்தில் ஆதரவை வழங்குகின்றோம். அரசு முன்வைத்த காலை பின்வைக்கக்கூடாது என்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகின்றது என விளக்கமளித்தார்.

பெரும்பான்மை
அதிகாரத்தால்
ஏற்பட்ட விபரீதங்கள்

நாடு சுதந்திரம் அடைந்தபோது உருவாக்கப்பட்ட பெரும்பான்மை தன்னாதிக்க முறைமையால் சுதந்திரம் அடைந்து ஒரு வருடத்திலேயே ஒரு சமூகத்தின் (இந்திய வம்சாவளி) பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது.

அதன் பின்னர் தொடர்ச்சியாக அறுபதுகள் முதல் 1978 வரை பல்வேறு முறைமைகள் உருவாக்கப்பட்டன. அவ்வப்போது தொடர்ச்சியாக எம்மால் பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், பெரும்பான்மை தன்னாதிக்க உரிமையால் எமது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. இதனால் ஏற்பட்ட பாரிய பாதிப்புகளும் உயிரிழப்புகளும் உலகே அறிந்தது.

ஆனால், இம்முறை அரசியல் அமைப்பை உருவாக்குவதில் நாமும் பங்காளிகளாக உள்வாங்கப்பட்டுள்ளோம். நமது ஆலோசனைகளும் பிரேரணைகளும் உள்வாங்கியே அரசமைப்பு உருவாக்கப்படவுள்ளது. அதற்கு ஆதரவு வழங்கவேண்டிய கடப்பாடும் எமக்கு உண்டு என்றார் சுமந்திரன்.

ஜனாதிபதியினதும் பிரதமரினதும் கூற்றுகளைக் கண்டிக்கின்றோம்.

நீங்கள் அரசுக்கு ஆதரவாக செயற்படுகின்றீர்கள். ஆனால், ஜனாதிபதி பி.பி.சிக்கு அளித்த பேட்டியிலும், பிரதமர் சுவிஸிலும் கூறியவை மாறுபட்டவையாகவே அமைந்துள்ளனவே என்று ஒரு கேள்வி எழுப்பப்பட்டது.

நாம் அரசுக்கு ஆதரவாக செயற்படவில்லை. அரசு மேற்கொள்ளும் நல்ல விடயங்களுக்கு ஆதரவளித்து வருகின்றோம். செயல் சிறிது தாமதமானாலும் சன்னம் சன்னமாக நடைபெறுகின்றன. அதனை துரிதப்படுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை நாம் கொடுத்துவருகின்றோம்.

அதேவேளை, அரசாங்கத்தின் குறைபாடுகளை மூடி மறைக்க வேண்டிய அவசியம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை. ஜனாதிபதியினதும் பிரதமரினதும் கூற்றுகளை நாம் பகிரங்கமாகக் கண்டித்துள்ளோம். எமது அதிருப்தியைப் பதிவுசெய்துள்ளோம்.

மக்கள் வழங்கிய ஆணை

எம் மக்கள் எம்முடனேயே இருக்கின்றனர். கடந்த தேர்தலின் போது மக்கள் எமக்கு ஆணையிட்டுள்ளனர்.

1. நிரந்தரமான அரசியல் தீர்வு.
2. மக்களின் உடனடித் தேவை.

ஏனைய இனமக்களைப்போன்று எம் இனத்தவர்களும் சம பங்குடன் நிர்வாகத்தில் நேரடி பங்குகொள்ளும் சமஷ்டி ஆட்சி முறை, அடுத்து வடக்கு, கிழக்கு இணைப்பு.

இதன் மூலம் நாம் நாட்டைப் பிரித்துக் கேட்கவில்லை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் உச்சமட்ட அதிகாரத்துடன் கூடிய சமஷ்டி ஆட்சி முறையைத்தான் கேட்கிறோம். இதனை நாம் எங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியுள்ளோம். அதற்கு மக்கள் சர்வஜன வாக்களிப்பு போன்று ஏகோபித்த ஆதரவை வழங்கியுள்ளனர். இதனையே நாம் புதிய அரசமைப்பிலும் பிரேரணையாக முன்வைக்கவுள்ளோம்.

பேரவையின் ஆலோசனைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவே தமிழ்ப் பேரவை உருவாக்கப்பட்டது. அவர்களின் கோரிக்கைகளையும் ஏற்றுப் பரிசீலனை செய்யப்படும் என்று கூறுவது சரியா?

தமிழ்ப் பேரவை மட்டுமல்ல, வேறு எந்த அமைப்புகளோ, பொதுமக்களோ எம்மிடம் சமர்ப்பிக்கும் ஆலோசனைகளை ஏற்றுப் பரிசீலிப்போம். மக்களின் அங்கீகாரம் கிடைத்த முன்மொழிவுகள் பரிசீலிக்கப்படும். மக்களால் நிராகரிக்கப்பட்டவைகளை எம்மால் ஏற்கமுடியாது. இது ஒன்றும் பெரிய விடயமல்ல என்று பதிலளித்தார் சுமந்திரன். (த-சி)

## பெப்ரவரி

வரைவைச் சமர்ப்பிக்கவேண்டும் என்ற தீர்மானம் வடக்கு மாகாண சபையில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 44 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாக, அரசமைப்புக்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான குழுவை நியமிக்கும் பிரேரணை அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானத்தினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

'இதுவரை காலமும் இயற்றப்பட்ட அரசமைப்பு யாப்புக்கள் தமிழ்த் தேசிய இனத்தின் இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ளப்படவில்லை. அரசியல் யாப்பு மாற்றத்தில் அல்லது உருவாக்கத்தில் தமிழ் மக்கள் பங்கு கொண்டு அவர்களின் அரசியல் உரிமைகளை அரசியல் யாப்பு மூலம் நிலைநிறுத்துவதை உறுதி செய்வது அவசியம்.

வடக்கு மாகாண மக்களின் ஜனநாயகரீதியில் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற வகையிலும், தமிழ்த் தேசிய இனத்தின் சுயாட்சிக் கோரிக்கை தொடர்பான அனுபவங்களைக் கொண்டவர்கள் என்ற வகையிலும், அரசமைப்பு என்ற வகையில் வடக்கு மாகாண சபைக்கு முக்கிய பொறுப்பும் – கடமையும் – உரிமையும் உள்ளதாலும் தமிழ்த் தேசிய இனம் சார்பில் முன் வைக்க வேண்டிய முன்மொழிவுகளை [illegible] மாகாண சபையின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்க பின்வரும் மாகாண சபை உறுப்பினர்களைக் கொண்ட குழு நியமிக்கப்படுகின்றது' என்ற பிரேரணை முன்மொழியப்பட்டது.

இதில், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தலைவராகவும், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இணைத் தலைவராகவும் இருப்பார். இதன் உறுப்பினர்களாக அமைச்சர்களான த.குருகுலராஜா, பா.டெனீஸ்வரன், ப.சத்தியலிங்கம், பொ.ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர்களான கே.சயந்தன், சூ.பிறிமூஸ் சிராய்வா, ம.அன்ரனி ஜெகநாதன், ஜி.ரி.லிங்கநாதன், க.சிவாஜிலிங்கம், ப.அரியரத்தினம், எம்.தியாகராசா, அ.பரஞ்சோதி, அயுப் அஸ்மின், திருமதி அனந்தி சசிதரன், இ.ஆனோல்ட், க.சர்வேஸ்வரன், வை.தவநாதன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (த-5)

## வெளிநாட்டு

தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இலங்கை அரசினால் முன்னெடுக்கப்படும் பொறுப்புக்கூறல் செயல்முறையில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்படவேண்டுமெனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனினும் அண்மையில் பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பொறுப்புக் கூறலுக்கு விசேட நீதிமன்றம் அமைக்கப்படமாட்டாது எனவும் உள்நாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடனேயே பொறுப்புக்கூறல் செயல்முறை இடம்பெறுமெனவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் இலங்கை அமைக்கும் பொறுப்புக் கூறலுக்கான விசாரணைப் பொறிமுறையில் நம்பகத்தன்மை வாய்ந்தவையாக விளங்குவதற்கு, வெளிநாட்டு நீதிபதிகளின் பிரசன்னம் அவசியம் என ஐ. நா மனித உரிமைகள் சபைக்கான அமெரிக்க தூதுவர் கீத் ஹாப்பர் தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் செய்தியொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இந்த விடயத்தில் மாற்றம் ஏற்படாது எனவும் அமெரிக்க தூதுவர் கீத் ஹாப்பர் சுட்டிக்காட்டியுள்ளார். (த-வ)

## கல்லுடன்

தாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பூர் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் புவராசா தர்சன் (வயது 6) என்ற சிறுவன் நேற்று முன்தினம் மாலை 5.30 முதல் காணாமல் போயிருந்த நிலையில் அ வரைப் பெற்றோர் தேடி வந்துள்ளனர். இந்நிலையியல் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிறுவனின் நெஞ்சுப் பகுதியில் கல் ஒன்று பாதணியின் நூலினால் கட்டப்பட்டுக் கிணற்றுக்குள் வீசப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து நீதிவான் எம்.றிஸ்வான் முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காகத் திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-4)

## பதவிக் காலத்தை

ஆணைக்குழு தனது பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இவ்வாறானதொரு நிலையிலேயே, அதன் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டவுடன் யாழ்ப்பாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் விசாரணை அமர்வுகளை நடத்தவிருக்கிறோம். கிழக்கு மாகாணத்தில் விசாரணை அமர்வுகளை நடத்தும்போது திருகோணமலை மாவட்டத்தில் செயற்பட்டதாகக் கூறப்படும் இரகசிய முகாம் குறித்தும் விரிவான விசாரணைகளை நடத்துவதற்கும் எதிர்பார்க்கிறோம்.

குறித்த இரகசிய முகாம் எனக் கூறப்படும் முகாமுக்கு நேரில் சென்று அங்குள்ள அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவும், எமது விசாரணையாளர்களை அங்கு அழைத்து சென்று நிலைமைகளை ஆராயவும் திட்டமிட்டுள்ளோம். இந்த இரகசிய முகாம் தொடர்பில் முறைப்பாடு செய்தால் நாம் அங்கு செல்வது இலகுவாக இருக்கும். இல்லாவிடினும் நாங்கள் அந்த முகாமுக்குச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.

எமது ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நிறுத்துமாறு ஐ.நா உள்ளிட்ட அனைத்துலக அமைப்புக்கள் கூறியுள்ளதாக அறிகிறோம். ஆனால் ஆணைக் குழுவின் பதவிக்காலத்தை இன்னும் 12 மாதங்களினால் அரசு நீடிக்கும் பட்சத்தில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காணாமற்போனோர் பிரச்சினைகளுக்கு நாங்கள் நிச்சயம் தீர்வைப் பெற்றுக்கொடுப்போம்.

காணாமற்போனவர்கள், இறந்துவிட்டனரா அல்லது உயிரோடு இருக்கிறார்களா என்பதை எம்மால் கூறமுடியும். ஒருவேளை இந்த இரண்டு முடிவுகளுக்கும் வர முடியாவிடின் அது தொடர்பில் மேலதிகமாகச் செயற்படுவதற்கான தேவையையும் நாம் முன் வைக்கலாம்.

காணாமற்போனவர்கள் எங்கு வைத்து யாரால் அழைத்து செல்லப்பட்டனர் என்ற விவரங்களை நிச்சயம் நாங்கள் 12 மாதங்களில் காணாமற்போனோரின் உறவுகளுக்குப் பெற்றுக்கொடுப்போம். அத்துடன் கடத்தப்பட்டவர்கள் எங்கு வைத்துக் கடத்தப்பட்டார்கள், யாரால் கடத்தப்பட்டார்கள் என்ற விபரங்களைக் கூட எம்மால் 12 மாதங்களில் வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும் - என்று தெரிவித்துள்ளார். (த-5) (மற்றொரு செய்தி 11 ஆம் பக்கத்தில்)

## தீர்வு


நபர்கள் -'சமூக நிறுவனங்கள் - அமைப்புக்கள் என்பன ஆலோசனைகளை வழங்க முடியும் என்று அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் சார்பில் தீர்வுத் திட்டம் தயாரிப்பதற்காக குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு பலதரப்பினரது கருத்துக்களையும் கேட்டறியவுள்ளது.

தீர்வுத் திட்டம் தயாரிப்புக்கு ஆலோசனை வழங்கவுள்ளவர்கள், எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் தமது ஆலோசனைகளை இந்தக் குழுவுக்கு வழங்க முடியும். தேவைப்படுமிடத்து ஆலோசனைகளை முன்வைக்க விரும்புவர்களை நேரடியாக அழைத்துக் கருத்தறியவும் குறித்த குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பின்னர், இந்தக் குழுவினால் தயாரிக்கப்படும் தீர்வு யோசனை வடக்கு மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர், செயற்பாட்டுக் குழு மூலமாக அரசியலமைப்பு சபைக்கு சமர்பிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும், வடக்கு மாகாண சபையில் நேற்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கானா பாடகராக ஆனந்த்

எண்டர்டெயின்மெண்ட் மற்றும் இமேஜனரி மின்ஸ் தயாரித்துள்ள படம், "அட்டி". மா.கா.பா.ஆனந்த், ராம்கி, அஸ்மிதா, ராஜேந்திரன், ராம்ஸ், அருள்தாஸ், யோகி பாபு உட்பட பலர் இதில் நடித்துள்ளனர். ஒளிப்பதிவு, வெங்கடேஷ் அர்ஜுன். இசை, சுந்தர் சி. பாபு, விஜயபாஸ்கர் இயக்கியுள்ளனர்.

இதன் ஒரு பாடல் மற்றும் முன்னோட்ட வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. அப்போது விஜய பாஸ்கர் கூறியதாவது:-

சென்னையில்,காசிமேடு, ராயபுரம், ஐஸ்ஹவுஸ் பகுதிகளில் வசிக்கும் இளைஞர்களின் வாழ்க்கையையும், அவர்களின் பிரச்சினைகளையும் காமெடியுடன் சொல்லும் படம் இது. அரட்டையடிக்கும் இடத்தை "அட்டி" என்பார்கள். அதைத்தான் டைட்டிலாக வைத்துள்ளேன்.

கானா பாடகராகவும், அஜித்குமாரின் ரசிகராகவும் மா.கா.பா.ஆனந்த் வருகிறார். ராம்கிக்கு வித்தியாசமான வேடம். படத்தைப் பார்த்த சுந்தர் சி.பாபு, தனது பரிநிதா புரடெக்ஷன் சார்பில் வெளியீடு செய்ய முன் வந்துள்ளேன் என்று அவர் கூறினார்.



# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 4 | 7 | | 1 | |
| 3 | | | | | | 6 | | |
| | 4 | | | | 9 | | | |
| 7 | | 9 | | | | | | |
| 5 | | | 3 | | 6 | | | 7 |
| | | | | | | 1 | | 8 |
| | | | 1 | | | | 5 | |
| | | 5 | | | | | | 3 |
| | 8 | | 2 | 6 | | | | |


நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 2 | 6 | 7 | 4 | 5 | 9 | 1 |
| 7 | 9 | 1 | 5 | 8 | 2 | 6 | 3 | 4 |
| 4 | 5 | 6 | 1 | 3 | 9 | 8 | 7 | 2 |
| 2 | 4 | 3 | 7 | 1 | 8 | 9 | 6 | 5 |
| 5 | 8 | 7 | 2 | 9 | 6 | 1 | 4 | 3 |
| 1 | 6 | 9 | 4 | 5 | 3 | 2 | 8 | 7 |
| 9 | 1 | 8 | 3 | 2 | 7 | 4 | 5 | 6 |
| 6 | 7 | 5 | 9 | 4 | 1 | 3 | 2 | 8 |
| 3 | 2 | 4 | 8 | 6 | 5 | 7 | 1 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரேகோலத்தைஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** உடல் நலத்தில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் சிறு குளறுபடி வந்து பின்னர் சரியாகும். சேமிப்புப் பணம் செலவாகும். வெளியூர் பயணத் திட்டத்தில் மாறுதல் செய்வீர்கள்.

**இடபம்:** சிலர் உங்களை தமக்கு சாதகமாக செயற்பட விரும்புவர். தொழில், வியாபாரம் செழிக்க, கூடுதல் பணிபுரிவது அவசியம். தியானம், தெய்வ வழிபாட்டில் ஈடுபடலாம். பணியாளர்கள் வேலையில் கவனமாக இருப்பது நல்லது.

**மிதுனம்:** மனதில் இருந்த சஞ்சலம் வெகுவாகக் குறையும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, தேவையான பணிபுரிவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**கடகம்:** வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படும். தொழில், வியாபார வளர்ச்சி நிலை படிப்படியாக நிறைவேறும். எதிர்பார்த்த பணவரவு சீராகக் கிடைக்கும். அதிக பயன்தராத பொருள்களை விலைக்கு வாங்க வேண்டாம்.

**சிங்கம்:** குடும்பத்தினர் உதவிகரமாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணிகள் நிறைவேறும். வீடு, வாகன பராமரிப்பு பணி செய்வீர்கள். பணியாளர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும்.

**கன்னி:** எல்லா பணிகளும் சிறப்பாக அமைய அனுபவம் கைகொடுக்கும். தொழில், வியாபாரம் வளர அதிக நேரம் பணிபுரிவீர்கள். முக்கிய தேவைக்குக் கடன் பெறுவீர்கள். உடல் நிலையில் கவனமாக இருக்க வேண்டும்.

**துலாம்:** இன்றைய சம்பவங்களால், புதிய அனுபவம் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி பெருமளவு குறையும். மீதிப் பணம் கிடைக்கும். வழக்கு, விவகாரங்களில் சாதகமான தீர்வு கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகமும், செயல்களில் திறமையும் அதிகரிக்கும். புதிய நடைமுறைகளைப் புகுத்தி, தொழில், வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் பெறுவீர்கள். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.

**தனுசு:** நண்பர்களுக்கு உதவி செய்து அன்பை வளர்ப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். உற்பத்தி, விற்பனை அதிகமாகி, உபரி பணவரவை பெற்றுத்தரும். பொருள்களை கவனமுடன் பாதுகாக்கவும்.

**மகரம்:** சிலரது பேச்சு உங்கள் மனதுக்கு ஊக்கம் தரும். தொழில், வியாபாரத்தில் நிறைவேற்ற வேண்டிய முக்கிய பணி நிறைவேறும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**கும்பம்:** மனதில் புத்துணர்வு ஏற்படும். நிலுவைப் பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியர்பாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாகும். உபரி பணவரவால் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

**மீனம்:** மனதில் அன்பும், கருணையும் அதிகரிக்கும். இயலாதவர்களுக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். வெகு நாள் விரும்பிய பொருள் வாங்குவீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்வு நடக்கும்.



**இரண்டாம்துக்ளக்** @2amtt

அதுக்குத் தான் தன் மதத்தை பற்றியே படிச்சி கிணற்று தவளை மாதிரி இருக்கக் கூடாது. மாற்று மதங்களின் கருத்துக்களையும் படிக்க வேண்டும்.

வெளிச்சம்™ follows



**சுதா மீனு** @sudhameenu

வெற்றிபெற வேண்டும் என்று நினைத்து போராடாதே... தோல்வி அடையக் கூடாது என்று போராடு, உலகம் உன் கையில்...

## கணவனது நிலைமையை நினைச்சா...?

காலங்காத்தால மனைவி கணவனிடம் ஓடி வந்தாள்....!!!
கொஞ்சம் பயந்த மாதிரி இருந்தாள்....
கொஞ்சம் நியூஸ் பேப்பர் கொடுங்கள் என்று கேட்டாள்...??

**கணவன் மனைவியிடம்:**
நீ இன்னும் எவ்வளவு நாள் இப்படியே இருக்க போற..??
உலகம் எங்கிருந்து எங்கயோ போயாச்சு..
நீ இன்னும் நியூஸ் பேப்பர் கேட்கறே ...???
இந்தா என்னோட ரப் எடுத்துக்கோ .....!!!

மனைவியும் ரப் எடுத்துண்டு போய் ....
அதால சமையல் அறையில் இருந்த,
கரப்பான் பூச்சிய ஒரு அடி போட்டா ........!!
கணவன் நிலைமையை நினைச்சு
பாருங்கள் ...!!!

**நீதி :** மனைவி கிட்ட உங்க புத்திசாலித் தனத்தை காட்ட முயற்சிக் காதீங்க...!!!

படித்ததில் பிடித்தது






அம்மாவிடம் கேட்கும் கேள்விகள்...
அம்மா என் பேனா எங்க...
அம்மா என் டவல் எங்க...
அம்மா லஞ்ச் பாக்ஸ் ரெடியா...
அம்மா என் சாவி எங்க...
அப்பாவிடம் கேட்கும் கேள்வி.
அப்பா 'அம்மா' எங்க...
ஆமாவா?? இல்லையா ???

பேஸ் புக்கில் பிடித்தவை...

கணவன்: நீ சிரிச்சா பசியே எடுக்கமாட்டிகிது செல்லம்"

மனைவி: இப்படி சொல்லி நீங்க தப்பிக்க முடியாது இந்த உப்புமாவ நீங்க தான் சாப்பிடனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்கமறியலில்

நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

காணாமற் போகச் செய்யப்பட்ட ஊடகவியலாளர் பிரகித் எக்னெலிகொட தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அதன் பின்னர், நீதிமன் றத்தை விட்டு வெளியேறிய எக்னெலிகொடவின் மனைவியான சந்தியா எக்னெலிகொடவுக்கு நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஞானசாரதேரர் அச்சுறுத்தல் விடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இந்த விடயம் உடனடியாகவே, சட்டத்தரணிகளின் ஊடாக நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதன்போது, ஞானசார தேரரை உடனடியாகக் கைது செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதனால் அவர் வேறு வழியின்றி ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். இதன்போது அவரைக் கைதுசெய்த பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர். இந்நிலையில் அவரை எச்சரித்த நீதிமன்று அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

இதேவேளை, ஞானசார தேரரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டதையடுத்து நீதிமன்றத்துக்கு வந்திருந்த ஏனைய பிக்குமார் தம்மையும் விளக்கமறியலில் வைக்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சிறைச்சாலை வாகனம் நீதிமன்றத்தின் அருகில் வந்தபோது அதனைச் செல்லவிடாமல் வாகனத்தின் சில்லுக்குக் கீழ் படுத்த வண்ணம் பிக்குமார் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சிலர் நீதிமன்ற நுழைவாயில் ஊடாக அத்துமீறிப் பிரவேசிக்க முற்பட்ட வேளை பொலிஸார் அதனை தடுத்து நிறுத்தினர். (த-4)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், பல்கலை புதுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
பாடப்புத்தகங்கள், Video DVD, சான்றிதழ் முற்றிலும் இலவசம்!
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 30.01.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
30.01.2016 இற்குமுன் விண்ணப்பித்தல்வேண்டும். ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே!
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

### தவறி விட்டது

தொடர்பு: 077 865 3766

குலேந்திரன் யுகந்தன் ஆகிய எனது 882113140 V எனும் இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை, சாரதிஅனுமதிப்பத்திரம் (B95958) ATM காட் என்பனவற்றுடன் பேர்ஸ் சரசாலைக்கும் திருநெல்வேலி சந்திக்குமிடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும்

நியத்த ஜய
வெற்றி வாரம்: 431
திகதி: 26-01-2016
வர்ணம்: மஞ்சள்
23 29 55 56 X
எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ. 10,000,000/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு: 1919

லக்கின
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 26.01.2016
வெற்றி வாரம் 1934
வர்ணம் நீலம்
மீனம்
வெற்றி இலக்கங்கள்
12 20 27 60
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 4,561,060/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு: 1919

## தவறிவிட்டது

கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கி 25.01.2016 இரவு பயணித்த தனியார் பேருந்தில் பயணப் பொதி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ் கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்

**தொடர்பு: 077 306 3935**

## வேலைவாய்ப்பு

இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார் வேலை வாய்ப்புக்களை SMS மூலம் பெற
REG < இடைவெளி > JOBS என டைப் செய்து 77010 இற்கு SMS செய்யுங்கள்

**தொடர்பு: 076 767 7228**

## ST.JOHN'S COLLEGE, JAFFNA VACANCIES

**Graduates from recognized universities with teaching experience may apply.**

1. Geography - A/L
2. Physics - A/L
3. Accounting - A/L (English Medium)
4. Information and Communication Technology

**Please send your complete CV including the contact details of two non - related referees by post before 1st Feb 2016 to the address below. Shortlisted candidates will be called for an interview. Knowledge of IT and fluency in English will be an added qualification.**

The Principal
St.John's College
Jaffna.

(த/28918)
(1.15.18)

## RUSI TASTY FOOD PRODUCT (PVT) LTD

### மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கான முக்கிய அறிவித்தல்

வவுனியா பூந்தோட்டம் கைத்தொழில் பேட்டையில் 1996 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை எந்தத்தடையும் இல்லாமல் தொடர்ந்து இயங்கி ஜாம், கோடியல், பழப்பானம், ஊறுகாய் போன்ற உணவுப் பொருள்களை தயாரிக்கும் ஒரே ஒரு நிறுவனம் எமது நிறுவனம்.

எம் தயாரிப்புக்கள் RUSI என்ற பண்டக்குறியின் கீழ் மட்டுமே தயாரிக்கப்பட்டு நேரடியாக விநியோகிக்கப்படுகின்றது. எமது தயாரிப்புக்கள் வேறு பெயர்களிலோ அல்லது வேறு முகவர்கள் மூலமாகவோ விநியோகிக்கப்படுவதில்லை.

குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு எம்மால் மட்டுமே நேரடியாக விநியோகிக்கப்படுகின்றது.

தொடர்ந்தும் எம்மால் சிறந்த சேவையை செய்யும் எமக்கு கடந்த காலங்களில் போல் ஆதரவைத் தருவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
அலுவலகம் 024 222 1215
024 222 5153
கைப்பேசி:
077 614 3332
077 89 4381

நிர்வாகம்,
டேஸ்ரி பூட் புறடக்ஸ் நிறுவனம்,
பூந்தோட்டம் வவுனியா.

**அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொது மக்கள் யோசனைகள் குழு**

## பொது மக்களுக்கான அறிவிப்பு

### பொது மக்களுக்கான மாவட்ட அமர்வுகள்

இருபது உறுப்பினர் கொண்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைகள் குழுவொன்று உத்தேச அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை மக்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பில் மக்களிடமிருந்து வாய்மொழி மற்றும் எழுத்து மூலச் சமர்ப்பணங்களைப் பெறுவது குழுவின் பணியாகும். அதன் பின்னர், அந்தச் சமர்ப்பணங்கள் மீதான அறிக்கையொன்றையும் அதன் சிபார்சுகளையும் இக் குழு தயாரித்து அவற்றை அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான அமைச்சரவை உபகுழுவுக்குச் சமர்ப்பிக்கும்.

இந்த அமர்வுகளில் பொதுமக்கள் பங்குபற்றலாம். பொதுமக்கள் தங்கள் யோசனைகளை இந்தக் குழுவுக்குச் செய்வதற்கு அழைக்கப்படுகின்றனர். வாய்மூல யோசனைகளைச் செய்யும்போது, தமது யோசனைகளின் சாராம்சத்துடன் கூடிய எழுத்து மூலமான பிரதியையும் வழங்குவது விரும்பத்தக்கதாகும்.

மேற்படி குழுவானது கீழ்காணப்படும் இடத்திலும், நேரத்திலும், தினத்திலும் பொதுமக்களுக்கான அமர்வுகளை நடாத்தவுள்ளதென்பதை அறியத்தருகின்றது.

நேரம்: காலை 09.30 - மாலை 04.30

மேலதிக விபரங்களைப் பெற கீழ் வருவனவாயிலாகத் தொடர்பு கொள்ளவும்.

*தொலைபேசி: 0112437676*
*தொலைநகல்: 0112328780*
*மின்னஞ்சல்: constitutionalreforms@gmail.com*
*வலைத்தளம்: Yourconstitution.lk*

**தபால்:**
**தவிசாளர்**
**அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைகள் குழு**
**செயலகம்,**
**விசும்பாய, ஸ்ரேபிள்ஸ் வீதி,**
**கொழும்பு 02**

அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்கள் யோசனைகள் குழு, வாய்மூல சமர்ப்பணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக மாவட்ட மட்டத்தில் பொது மக்கள் சந்திப்புக்கள் கீழ் குறிப்பிடப்படும் திகதிகளில் நடைபெறும்.

| மாவட்டம் | திகதி |
|---|---|
| கம்பஹா | பெப்ரவரி 1 மற்றும் 2 |
| கண்டி | பெப்ரவரி 1 மற்றும் 2 |
| மாத்தளை | பெப்ரவரி 3 மற்றும் 10 |
| களுத்துறை | பெப்ரவரி 5 மற்றும் 6 |
| வவுனியா | பெப்ரவரி 5 மற்றும் 6 |
| காலி | பெப்ரவரி 8 மற்றும் 9 |
| கிளிநொச்சி | பெப்ரவரி 8 மற்றும் 9 |
| கேகாலை | பெப்ரவரி 8 மற்றும் 9 |
| மாத்தறை | பெப்ரவரி 10 மற்றும் 11 |
| மன்னார் | பெப்ரவரி 10 மற்றும் 11 |
| ஹம்பாந்தோட்டை | பெப்ரவரி 12 மற்றும் 13 |
| முல்லைத்தீவு | பெப்ரவரி 12 மற்றும் 13 |

| மாவட்டம் | திகதி |
|---|---|
| குருநாகல் | பெப்ரவரி 15 மற்றும் 16 |
| யாழ்ப்பாணம் | பெப்ரவரி 15 மற்றும் 16 |
| அநுராதபுரம் | பெப்ரவரி 17 மற்றும் 18 |
| புத்தளம் | பெப்ரவரி 17 மற்றும் 18 |
| நுவரேலிய | பெப்ரவரி 19 மற்றும் 20 |
| பொலனறுவை | பெப்ரவரி 19 மற்றும் 20 |
| பதுளை | பெப்ரவரி 23 மற்றும் 24 |
| திருகோணமலை | பெப்ரவரி 23 மற்றும் 24 |
| மொனறாகலை | பெப்ரவரி 25 மற்றும் 26 |
| மட்டக்களப்பு | பெப்ரவரி 25 மற்றும் 26 |
| இரத்தினபுரி | பெப்ரவரி 27 மற்றும் 29 |
| அம்பாறை | பெப்ரவரி 27 மற்றும் 29 |

ANCL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நில வெடிப்பு

தெரிவித்தனர்.நேற்றுக் காலை கிராம சேவை யாளரின் அனும தியுடன் தோட் டப் பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் போது அங்கு பெரிய குழிகள் ஏற்பட்டதுடன், நீர் அந் தக் குழிகள் ஊடாக நிலத்தின் கீழ் இறங்குவ தாகவும்விவசா யிகள் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை 6 மணியளவில் இருந்து காலை 9 மணிவரை தோட்டப் பயிர்களுக்கு நீர் பாய்ச் சியும் எந்தப் பயனும் இல்லாமற் போய்விட்டாக அவர்கள் மேலும் கூறினர்.

இதனால் இந்தப் பகுதியைச் சுற்றி 5ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட கரட்,வெங்காயம், மரவள்ளி என்பன அழிவடை யும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நீர் கீழ் இறங்கிப் பெரிய குழிகள் ஏற்படுமோ என்ற அச்சமும் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இப் பகுதியில் நிலவெடிப்பு ஏற்பட்டு நேற்றுடன் நான்கு நாள் கள் ஆகியும் உரிய அதிகாரிகள் எந்தவிதமான புவியியல் ரீதி யிலான ஆய்வுகளையும் மேற் கொள்ளவில்லை எனக் குறித்த வீட்டு உரிமையாளர் தர்மசேக ரம் லலிதா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

எங்களுக்கு இங்கு இருக்கவே பயமாகவே உள்ளது. ஒவ் வொரு நாளும் நிலத்தில் விரி சல் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. கடந்த சனிக்கிழ மையில் இருந்து சொல்லுகிறாா் கள் கொழும்பில் இருந்து உரிய அதிகாரிகள் வருவதாக. இன் னும் வந்தபாடில்லை. எங் களுக்கு காணிக்குரிய நட்டஈடு வேண்டாம். இந்த நிலவெடிப் புக்கு என்ன காரணம் என்று தெளிவுபடுத்துங்கள்.

நாங்கள் இந்தத் தோட்டக் காணியைப் பயன்படுத்த லாமா? இல்லையா எனக் கூறுங் கள். நேற்றும் மழை பெய்துள் ளது. ஈர நிலத்தில் நாங்கள் தோட் டத்தில் சென்று பயிர்களைப் பார்த்து வருகிறோம். ஈர நிலம் கீழ் இறங்கி விடுமோ என்று பயமாக உள்ளது.

கொழும்பில் இருந்து இங்கு எவரும் வரவும் இல்லை. ஆய்வு கள் மேற்கொள்ளப்படவும் இல்லை. எங்களுக்கு இதனால் ஏதும் நடந்துவிடுமோ என்ற பயம் கார ணமாக நேற்று அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்துள்ளோம்–என்றார். (த-107)


## மரண அறிவித்தல்கள்

### செபஸ்தியாம்பிள்ளை யேசுதாசன்
(குணம்)

பிறப்பு
1947
.
04
.
05



மறைவு
2016
.
01
.
25

குருநகரைப் பிறப்பிடமாகவும் மணியந்தோட்டம், உதயபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தியாம் பிள்ளை யேசுதாசன் 25.01.2016 திங்கட்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை வெலிச்சொர் தவமணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சகாயநாயகியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.01.2016) புதன்கிழமை பி.ப 3.00மணியளவில் உதயபுரம் செயஸ்ரி யார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

69, உதயபுரம்,
கொழும்புத்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### தம்பையா தம்பிராசா
(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்)



ஆனைப்பந்தியைப் பிறப்பிட மாகவும், உடுவில் கற்பகப்பிள் ளையார் கோயிலடியை (இணு வில்) வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தம்பிராசா அவர்கள் கடந்த 25.01.2016 திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான தம்பையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக்கணவரும் கேதாரகெளரி, கைலாயநாயகி (கொழும்பு), கதிர்காமநாதன், பத்மநாதன் (சுவிஸ்), பத்மகெளரி, சத்தியகெளரி (சுவிஸ்), ஞானகெளரி ஆகி யோரின் அன்புத்தந்தையும் பஞ்சாட்சரம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், தவஈஸ்வரி, சரஸ்வதி (சுவிஸ்), மகேந் திரம், சிவநேசன்(சுவிஸ்), ஞானசேகரம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் ஆஸ்பத்திரி முன் வீதி,
உடுவில் கிழக்கு,
கற்பகப் பிள்ளையார் கோயிலடி.

TP
077 3555238
0777 243436
077 9122 820

தகவல்:
மக்கள்,
மருமக்கள்.

## மரண அறிவித்தல்கள்

### சூசை அலெக்ஸாண்டர்

மண்ணில்
24
.
12
.
1929



விண்ணில்
21
.
01
.
2016

யாழ் சென்பற்றிக்ஸ் வீதியைப் பிறப்பிடமாகவும், மிருசுவிலை வசிப்பிடமாகவும் பிரான்ஸை வதிவடமாகவும் கொண்ட சூசை அலெக்ஸாண்டர் 21.01.2016 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.01.2016) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு (பிரான்ஸ் நேரம்) நல்லடக்கம் செய்யப்படும். இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று பிற்பகல் 7.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் செபவழிபாடு இடம்பெறும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.1, சென்பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்,

தகவல்:
பீ. பிறேமதாஸ்

France- 003 314 8712830, Jaffna- 077 910 3353

### கிருஸ்ணபிள்ளை சிவலிங்கம்



யாழ்.சுழிபுரம் மேற்கு, சுழிபுரத்தைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ண பிள்ளை சிவலிங்கம் 25.01.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ண பிள்ளை - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான கிருஷ்ணபிள்ளை - சிதம்பரம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், மயில்வாகனம், காலஞ்சென்ற சரஸ்வதிதேவி மற்றும் சொர்ப்பண லிங்கம், சாந்தகுண தேவி, காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் புவனேஸ் வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆனந்தசங்கர், கிருஸ்ணவதனி, கெளசல்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாடினி, அருட்குமார், இராசஜெயந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆகாஷ், ஆரணியா, அபினாஷ், யதுஷன், குகராஜ், தினேஷ்,மோகன்ராஜ், அபிநயா,மேய்ஹா, தர்சிஹா, அஸ்வின்,அஸ்மிஹா ஆகி யோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியை களுக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல்:
(68358)(11,17,18) குடும்பத்தினர்.

தொடர்பு: 021 205 1733

### ஆசீர்பாதம் இம்மனுவேல்
(சின்னமணி - பிணிதோஷங்களுக்கு நூல்கட்டுபவர்)



பிறப்பு
1925.09.29

இறப்பு
2016.01.26

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமா கவும் கொண்ட ஆசீர்பாதம் இம்மனுவேல் (சின்ன மணி) 26.01.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்பாதம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான அன்னம்மா, ஞானம்மா ஆகியோரின் பாசமிகு கணவரும் அன்புவா(சுவிஸ்), பத்திமா, காலஞ் சென்ற செல்லக்குமார் மற்றும் அன்னமலர், நேசராணி, விஜயா, குஞ்சு(சுவிஸ்), பவளம்(பெல்ஜியம்), அரசி (ஜேர்மன்), மனோ(மன்னார்), சுரேஸ்(கனடா), சுதா (பெல்ஜியம்), எட்மன் அன்ரனி(துபாலகம் - யாழ்ப்பா ணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2016) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியள வில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப் பட்டு புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் நாவாந்துறை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: 021 300 8811

### திருமதி சின்னம்மா இராசையா



தோற்றம்
27.03.1950

மறைவு
25.01.2016

கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா இராசையா 25.01.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - வள்ளியம்மை தம்பதியரின் அன்புமகளும், காலஞ் சென்றவர்களான வீரகத்தி - செல்லாச்சி தம் பதியரின் அன்புமருமகளும், இராசையாவின் அன்பு மனைவியும், பார்வதியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் அன்பு மைத்துனியும், Dr. தயாகரன், தவேந்திரன், தயாளினி, கவிதா ஆகியோரின் அன்புத் தாயும், Dr. பரனீதா, திரவியநாதன் ஆகியோரின் அன்பு மாமி யும், ஜெயக்குமார், ஜெயந்தினி ஆகியோ ரின் அன் புச் சிறியதாயும், யதுர்ஷா, அபிஷேக், சாகித்தியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2016) புதன்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 9.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராசப்பா வீடு,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

மகன் - தவேந்திரன்- 077 728 4536
(65912) (13.15.17.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையுடன்

தங்கியுள்ளது. இதனால் சார்க் நாடுகளுடன் உறவைத் தொடரும் முயற்சியில் இந்தியா ஈடுபடும். இந்த உறவு பிராந்திய ஒருங்கிணைப்பு மற்றும் வர்த்தக மேம்பாட்டுக்கு உதவும்.

இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்கா தெரிவித்தார்.

இந்தியாவின் 67 ஆவது குடியரசுத் தினத்தை முன்னிட்டு இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகங்களில் குடியரசு தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி இந்தியத் தூதுவர் வை.கே.சின்கா விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொழும்பிலுள்ள இந்தியர்களுக்கும், நட்பு நாடான இலங்கைத் தேசத்து மக்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி. கடந்த வருடம் இலங்கை- இந்திய உறவில் மாற்றம் ஏற்பட்டது. இலங்கையில் புதிய அரசு பதவியேற்ற பின்னர் 90 நாள்களில் 4 தடவைகள் இரு தரப்புச் சந்திப்புகளும் இடம்பெற்றள்ளன.

கடந்த வருடச் சந்திப்புகள் இந்த வருடச் சந்திப்புகளைத் தொடர உந்துதலாக அமையும். எமது வெளியுறவுத்துறைச் செயலாளர் இந்த மாதத்தின் ஆரம்பத்தில் சில பயனுள்ள சந்திப்புகளை மேற்கொண்டார். வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜின் சந்திப்பும் எதிர்பார்ப்பை தோற்றுவித்துள்ளது.

இரு தரப்பு உறவுகளைப் பலப்படுத்துவதற்கான முக்கிய காரணம் ஆழமான பொருளாதாரமும், வர்த்தக உறவுமாகும். உலகில் வளர்ந்து வரும் பொருளாதாரம் மூலம் இலங்கை நன்மை அடைந்து வருகிறது என நாம் நம்பு கிறோம்.

இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களின் பெறுமதி 2.6 பில்லியன் அமெரிக்க டொலர். கண்ணிவெடி, விவசாயம், கல்வி, பொதுச் சுகாதாரம் மற்றும் தொடர்பாடல் போன்ற திட்டங்களை இந்தியா, இலங்கையில் முன்னெடுக்கின்றது. தவிர 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் இதுவரை 44 ஆயிரம் வீடுகள் குறித்த திகதியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 4 வீடுகளைக் கட்டிக் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம். தொடர்ந்தும் அபிவிருத்தித் திட்டங்களில் எமது ஆதரவை நாம் இலங்கைக்கு வழங்குவோம் என்றுள்ளது. (த-4-ரி4)

## பிரகீத்

வந்த அரச சட்டவாளர் திலீப் பீரிஸ் நேற்றுக் காலை திடீரென அந்த வழக்கில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வழக்கு ஹோமகம நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, நீதிமன்றத்துக்கு வந்திருந்த பொதுபல சேனாவின் பொதுச் செயலர் ஞானசார தேரர் நடந்து கொண்ட முறை குறித்து, அரச சட்டவாளர் திலீப் பீரிசும், சட்டவாளர் உபுல் குமார பெருமவும் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தனர்.

இதையடுத்து, நீதிமன்ற அவமதிப்பு உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் ஞானசார தேரர் கைது செய்யப்பட்டிருந்தார். இந்தப் பின்னணியிலேயே, அரச சட்டவாளர் திலீப் பீரிஸ் நேற்றுக் காலை எக்னெலிகொட வழக்கில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்குத் தொடர்பாக அரச சட்டவாளர் திலீப் பீரிசுக்கும், இராணுவத்துக்கும் இடையில் கடந்த சில வாரங்களாகவே பனிப்போர் நீடித்து வந்தது.

விசாரணைக்குத் தேவையான ஆவணங்களை இராணுவம் தரவில்லை என்று அரசசட்டவாளர் திலீப் பீரிஸ் தொடர்ச்சியாகக் குற்றம்சாட்டி வந்தார். பிரகீத் எக்னெலிகொட வழக்கில், இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் குற்றம்சாட்டப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அரச சட்டவாளர் இந்த வழக்கில் இருந்து நீக்கப்பட்டுள்ளமை முக்கிய விடயமாக நோக்கப்படுகிறது. (த-5)

## கண்ணீர் அஞ்சலி

எமது வைத்தியசாலையில் சுகாதாரப்பணி உதவியாளராகக் கடமையாற்றிய

திருமதி

**திருஞானம் நிர்மலா**



கடந்த (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலமான செய்தியறிந்து மனவேதனை அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வைத்திய அதிகாரியும், உத்தியோகத்தரும், ஊழியர்களும்.
ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவு, ஏழாலை.

## நீங்கா நினைவில்

14 ஆம் ஆண்டு — 20 ஆம் ஆண்டு





மலர்வு 27.04.1938 — உதிர்வு 01.02.2002

**அமரர் வெ.வேலு**
(கந்தையா)
(ஓய்வு பெற்ற மின் கம்பி இணைப்பாளர்)
திதி: 27.01.2016

அன்னை மடியில் 21.02.1977 — அமைவன் அடியில் 13.06.1996

**செல்வன் வேலு சனகன்**
(முன்னாள் மாணவன்
தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள் இருவரினதும்
நினைவுகளோடு கலந்து வாழும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 25 . 08 . 1942 — மறைவு 28 . 12 . 2015

அமரர்
**வைத்தி நவரத்தினம்**

கடந்த 28.12.2015 சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வத்தின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (27.01.2016) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவற்காடு,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்
தயாகரன் - ஜெயந்தி
மகன், மருமகள்

## Our Heart With Your Love Grandpa



You never said you were leaving,
You never said goodbye.
You were gone before we knew it,
Only God knows why.

God chose you as his Angle,
For the purity of your loving heart.
Your lightened face makes us tingle,
With happiness which cannot fill any chart.


A million times we needed you,
A million times we cried.
If love alone could have saved you,
You never would have died.

Life goes on as always,
But things seem out of place.
Now we can't call on you,
Or see your smiling face.

We will never forget you,
And we will never be apart.
In all the special memories,
You will always be in our heart.

**Love from you grandchildren:**
**Dilan, Disshani, Darusha**

## மரண அறிவித்தல்
### லயன் செல்லர் துரைசிங்கம்



அரியாலை மேற்கைப்பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட லயன் செல்லர் துரைசிங்கம் (ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி - யாழ் கல்வித்திணைக்களம்) கடந்த 25.01.2016 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - அமிர்தம் தம்பதியினரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான தோமா - மேரி தம்பதியினரின் அன்பு மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் இந்திராவசந்தி (ஜேர்மனி), ராஜ்மோகன் (லண்டன்), சசிரேகாஆனந்தி (ஆசிரியை - யாழ்/சென்.ஜோன்ஸ் கல்லூரி), சாந்திமஞ்சுளா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், அனஸ்லி (ஜேர்மனி), அமி (லண்டன்) காலஞ்சென்ற சிற்சபேசன் மற்றும் பெனடிற் சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான திருமதி ரேபேகா தரும லிங்கம், பரிமளசிங்கம், ஜீவானந்தம், இரத்தினசிங்கம் மற்றும் சாம்தேவபாலசிங்கம் (இயக்குநர் - இலங்கை இல்லந்தோறும் நற்செய்தி) ஆகியோரின் அன்புச்சகோதரனும் செல்ற்ரன், மெட்லின், பேடினன்ட், டானியேல், சரோன், எஸ்தர், இம்மானுவேல், எபநேசர், ஷோபனா, பிரைன்டன், கல்பனா ஆகியோரின் அன்புப் பேரனும் கிஷோனா, விஷானா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (28.01.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக செம்மணி வீதியிலிருக்கும் பரி.யாக்கோபு ஆலய கல்லறைத் தோட்டத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

64, புவனேஸ்வரி அம்பாள் வீதி,
அரியாலை மேற்கு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் செரீனாவிடம் வீழ்ந்தார் செரபோவா

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் செரீனா வில்லியம்ஸ் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார். செரீனாவின் இந்த வெற்றியின் மூலம் செரபோவாவின் பயணம் காலிறுதியுடன் முடிவுக்கு வந்துள்ளது.

சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் மெல்போர்ண் நகரில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் நடப்பு சம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் ரஷ்யாவின் முன்னணி வீராங்கனையான செரபோவாவை எதிர்த்து மோதினார். இந்த ஆட்டம் மிகவும் போராட்டமாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், செரீனாவின் ஆட்டத்தின் முன்பு செரபோவாவின் ஆட்டம் எடுபடவில்லை. முதல் செற்றை 6:4 என்ற கணக்கில் கைப்பற்றிய செரீனா, தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி இரண்டாவது செற்றை 6:1 என்ற கணக்கில் கைப்பற்றினார். இதனால் மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் எளிதில் வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர்களில் செரபோவா தொடர்ந்து செரீனாவாலேயே வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார். கடந்த வருடம் இறுதி ஆட்டத்திலும், அதற்கு முந்தைய வருடம் அரையிறுதியிலும் செரீனாவிடம் வீழ்ந்த அவர், இந்த வருடமும் காலிறுதியுடன் வெளியேறியுள்ளார். (ம)

## யுனைற்ரெட் முகாமையாளராக ஜோஸ் மொரின்கோ விருப்பம்

மன்செஸ்டர் யுனைற்ரெட் கழக அணியின் முகாமையாளராகப் பதவியேற்பதற்கு விரும்புவதாக, செல்சி அணியின் முன்னாள் முகாமையாளரான ஜோஸ் மொரின்கோ தெரிவித்துள்ளார்.

செல்சி அணியின் முகாமையாளர் பதவியிலிருந்து கடந்தாண்டு டிசெம்பரில் நீக்கப்பட்ட மொரின்கோ, மன்செஸ்டர் யுனைற்ரெட் அணியின் முகாமையாளராக வருவதற்கான விருப்பத்தை வெளியிட்டு வந்தார். குறிப்பாக, தற்போதைய முகாமையாளரான லூயிஸ் வான் கால், ரசிகர்களிடத்தில் நம்பிக்கையை இழந்துள்ளதாகக் கருதப்படும் நிலையில், அப்பதவியிலிருந்து நீக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. இந்நிலையில் கருத்துத்



தெரிவித்துள்ள மொரின்கோவின் முகவர், யுனைற்ரெட் அணி முகாமைத்துவத்துடன், பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவ்வணிக்கு முகாமையாளராகினால், முதலாவது பருவகாலத்திலேயே, கிண்ணம் வெல்ல முடியுமென மொரின்கோ நம்புவதாகவும் தெரிவித்துள்ளார். (ம)

# ஒருவர் மட்டுமே டோனி பதினொருவரும் அல்ல

*டோனிக்கு ஆதரவாக மைக்கல் கிளார்க் கருத்து*




ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரை இழந்ததையடுத்து டோனியின் தலைமைத்துவத்தின் மீது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், தற்பொழுது இருக்கும் தலைவர்களில் சிறந்தவர் டோனி என்றும், வீரராகவும், தலைவராகவும் அவரால் தொடர்ந்து செயற்பட முடியும் என்றும் தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் கிளார்க்.

டோனி தொடர்பாக கிளார்க் தெரிவிக்கையில்; டோனியிடம் இன்னமும் நிறையத் திறமைகள் மீதமுள்ளன. அவர் விரும்பினால் தலைவராகத் தொடரலாம். ஏனெனில் அதற்கான உரிமையை அவர் வென்றெடுத்துள்ளார். அவர் தொடர்ந்து தலைமைத்துவத்தில் சிறந்து விளங்குவதாகவே நான் கருதுகிறேன். இந்திய அணி நீண்ட காலம் வெற்றிப்பாதையில் பயணிக்க அவரது பங்கு மிக அதிகம் என்றே நான் கருதுகிறேன்.

ஒவ்வொரு முறை அணி வெற்றி பெறாத போதும் தலைவர் எப்போதும் பொறுப்பாகிறார், அதனால்தான் அவர் நிச்சயம் தோல்விகளினால் ஏமாற்றமடைந்திருப்பார். அவர் தலைவராகவும் வீரராகவும் தொடர்ந்து பங்களிப்பு செய்ய திறமைகள் வைத்துள்ளவர் என்றே நான் நினைக்கிறேன். வென்றால் நாடு, தேசம் என்பார்கள். தோல்வியடைந்தால் தலைவர் என்பார்கள். அன்று தொடக்கம் இன்றுவரை இதுவே நடைபெறுகிறது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரை இழந்தமைக்கு இந்திய களத்தடுப்புத்தான் காரணம் டோனி ஒருவர் மட்டுமே. விளையாடும் பதினொருவரும் அல்ல. அவர் இலக்குக்காப்பாளர். எல்லைப் பகுதியில் நழுவவிடப்படும் பிடியெடுப்புக்கு அவர் எவ்விதத்தில் பொறுப்பேற்க முடியும். பந்து அந்தத் திசையில் வரும் என்பதை கணித்து செயற்படுபவர்தான் தலைவர். அதனை பிடியெடுப்பது களத்தடுப்பாளர்களின் பொறுப்பு – என்றார். (ம)

## நியூசிலாந்து – பாகிஸ்தான் மூன்றாவது ஆட்டம் நாளை

நியூசிலாந்து – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது. இதனால் நாளைய ஆட்டத்திலும் அந்த அணி வெற்றி பெற்றால் நியூசிலாந்தால் தொடரைக் கைப்பற்ற முடியும். ஆனால் பாகிஸ்தான் தொடரைக் கைப்பற்ற வேண்டுமாயின் ஏனைய இரு ஆட்டங்களிலும் வெற்றி பெற்றேயாக வேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. மொத்தத்தில் தொடரைக் கைப்பற்றும் முனைப்பில் நியூசிலாந்தும், தொடரில் தனது இருப்பைத் தக்க வைக்கும் முனைப்பில் பாகிஸ்தானும் களமிறங்குகின்றன. (ம)

## ஆஸி. ரென்னிஸ் தொடரில் ஆட்ட நிர்ணயச் சூதாட்டம்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில், கலப்பு இரட்டையர் ஆட்டமொன்றில், நிர்ணயச் சூதாட்டம் இடம்பெற்றதா என்பது குறித்துச் சந்தேகங்கள் எழுந்துள்ளன. முதல் சுற்று ஆட்டமொன்றில், ஸ்பெய்னைச் சேர்ந்த டேவிட் மரேரோ – லாரா இணையை எதிர்த்து செக் குடியரசைச் சேர்ந்த அன்ட்ரியா – லூகாஸ் இணை மோதிய ஆட்டமே சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.



இந்த ஆட்டத்தில் டேவிட் – லாரா இணை தோல்வியடையுமென, சூதாட்டக்காரர்களால் சூதாட்ட நிறுவனமொன்றில் ஆட்டத்துக்கு முதல்நாளில் திடீரென அதிகளவு பணம் முதலிடப்பட்டமையே, சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது. குறித்த ஆட்டத்தில் அந்த இணை 0:6, 3:6 என்ற செற் கணக்கில் படுதோல்வியடைந்திருந்தது. எனினும், நிர்ணயம் குறித்தான முயற்சிகள் குறித்துத் தங்களுக்குத் தெரியாது என, டேவிட் – லாரா இணை தெரிவித்துள்ளது. அத்துடன் டேவிட்டின் முழங்காலில் உபாதை காணப்பட்டதாகவும், அதனால், சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்த முடியாது போனதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# சகீர், வோர்ண் சவாலான பந்துவீச்சாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ள குமார் சங்கக்காரா

வேகப்பந்து வீச்சில் சகீர்கானும், சுழல் பந்துவீச்சில் சேன் வோர்ணும் தனக்கு மிகவும் சவாலைத் தந்த பந்துவீச்சாளர்கள் என்று குறிப்பிட்டுள்ளார் இலங்கையின் முன்னாள் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான குமார் சங்கக்காரா.

ஆஸ்திரேலியாவில் கழகங்களுக்கு இடையிலான ரி-20 தொடர் நடைபெற்றது. இதில் குமார் சங்கக்காராவும் ஓர் அணிக்காக விளையாடினார். தொடரில் கலந்துகொண்ட முன்னணி வீரர்களை ஒன்றிணைத்து நிகழ்வொன்றை நடத்தியது ஆஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை. இதில் சங்கக்காராவும் அழைக்கப்பட்டிருந்தார். நிகழ்வில் உரையாற்றுகையிலேயே சங்கா அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் தெரிவிக்கையில்: – மகேலவுடன் இணைப்பாட்டமாக ஓட்டங்களைக் குவித்ததை மறக்க முடியாது. அவர் ஓர் அற்புதமான நண்பர். ஆரம்பக் கட்டத்தில் ஒரு துடுப்பாட்ட வீரராக அணியில் தாக்குபிடிக்க மிகவும் பாடுபட்டேன். எனது இன்னிங்ஸை கட்டமைப்பதில் இந்தியா, ஆஸ்திரேலிய அணிகள் சவாலாக அமைந்தன. இதற்குக் காரணம் சகீர்கானும், சேன் வோர்ணும். இவர்கள் இருவரதும் பந்துவீச்சை எதிர்கொள்ள சிரமப்பட்டேன்.' என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 27

**ஜொலிஸ்ரார் வி.கழகத் தொடர்**

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் அணியை எதிர்த்து கே.கே.எஸ். அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து கே.எஸி.எஸி. அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடாத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்மாதர் அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் அணி மோதவுள்ளது.

**ஐக்கிய வி.கழகத் தொடர்**

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 65 ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் அணி மோதவுள்ளது. (ம-23)

## யாழ். இந்து மகளிர் அசத்தலான ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 27

ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவு ஆட்டமொன்றில் இராமநாதன் மகளிர் அணியை யாழ். இந்து மகளிர் அணி வீழ்த்தியுள்ளது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் அணி மோதிக் கொண்டது. இதில் யாழ். இந்து மகளிர் அணி 49:36 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## சென்.யூட், உதயசூரியன் இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 27

முல்லைத்தீவு கால்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் சென்.யூட், செம்மலை உதயசூரியன் அணிகள் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான இந்தத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு பிரதேச சபை மைதானத்தில் இடம்பெற்றன. முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் முல்லைத்தீவு சென்.யூட் அணியை எதிர்த்து செல்வபுரம் சந்திரன் அணி மோதிக் கொண்டது. இதில் முல்லைத்தீவு சென்.யூட் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. காலை 10 மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் செம்மலை உதயசூரியன் அணியை எதிர்த்து அளம்பில் இளந்தென்றல் அணி மோதிக்கொண்டது. இதில் செம்மலை உதயசூரியன் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)




## இந்தியா பதற்றமற்ற வெற்றி முதலாவது ரி-20 ஆட்டத்தில்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் முதலாவது ஆட்டத்தில் 37 ஓட்டங்களால் இந்தியா அபார வெற்றிபெற்று தொடரில் 1:0 என்று முன்னிலை வகிக்கிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. பவுண்டரியுடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் ரோகித். தவானின் தடுமாற்றம் நேற்றும் இருக்கத்தான் செய்தது. 5 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். 31ஓட்டங்களுடன் ரோகித் சர்மாவின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. கோக்லி, ரெய்னா இணை ஆஸ்திரேலியாவின் பந்துவீச்சுகளை சிதறடித்துக் கொண்டிருந்தது. ஒரு பந்துப்பரிமாற்றத்துக்கு ஒரு பவுண்டரி, இரு பந்துப்பரிமாற்றத்துக்கு ஒரு சிக்சர் என கோக்லி விளாசிக் கொண்டிருந்தார். ரெய்னாவின் ஆட்டத்தில் அவ்வளவு பெரிதான அதிரடி இல்லை. ஆனால் மறுமுனையில் அடித்தாடிக் கொண்டிருந்த கோக்லிக்கு பெருமளவான வாய்ப்புக்களை வழங்கிக்கொண்டிருந்தார். 32 பந்தில் அரைச்சதம் கடந்த கோக்லி,அரைச்சதத்தின்பின்னர் அதிரடியை இரட்டிப்பாக்கினார். 200 ஓட்டங்களை எட்டும் சராசரியில் சென்றுகொண்டிருந்தது. இறுதிப்பந்துப்பரிமாற்றத்தில் வீழ்ந்தார் ரெய்னா. நான்கு பந்துகள் மீதமிருக்க களமிறங்கிய டோனி, சிக்சர், பவுண்டரிகளை அடுத்தடுத்து விளாசினார். முடிவில் இந்தியா 188-3. கோக்லி இறுதிவரை ஆட்டமிழக்காது 90 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலியாவின் ஆரம்பம் இந்தியாவை மிரட்டும் படியாக அமைந்தது. நான்கே பந்துப்பரிமாற்றத்தில் 45 ஓட்டங்களை எட்டியது ஆஸி. வோர்ணரை வழியனுப்பி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் பும்ராஜ். அஸ்வினிடம் ஆட்டமிழந்தார் பின்ஞ். 21 ஓட்டங்களுடன் சிமித்தையும், இரண்டே ஓட்டங்களுடன் கெட்டையும் வெளியேற்றினார் ஜடேயா. பின்வரிசை வீரர்களும் சீரான இடைவெளியில் ஆட்டமிழக்க முடிவில் 151 ஓட்டங்களில் சுருண்டது ஆஸ்திரேலியா. ஆட்டநாயகனாக கோக்லி தெரிவானார். (ம)

## இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

முல்லைத்தீவு, ஜன. 27

**வித்தியானந்தக் கல்லூரி**

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது. குறித்தகல்லூரியின்விளையாட்டுமைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் க.சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில்,பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனும் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுபவருமாகிய மருத்துவர் எஸ்.சுதர்சன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவனும் வடமாகாண சபை உறுப்பினருமாகிய க.சிவநேசன், முல்லை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ரீ.ஜெயந்தன், ஞானம் பவுண்டேசன் நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் எம்.ஞானசேகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

யாழ்ப்பாணம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

நவரட்ணராஜா விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் ச.வேலழகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில்,பிரதம விருந்தினராக யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-102)

## பூநகரி கால்பந்தாட்ட தொடரின் முடிவுகள்

பூநகரி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில,கடந்த ஞாயிற்றுக்கிழமை முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் இரணைமாதா நகர் சென்.மேரிஸ் அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.ஜேம்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் இரணைமாதா நகர் சென்.மேரிஸ் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் முழங்காவில் விநாயகர் அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரணைமாதா நகர் சென்.மேரிஸ் அணியை எதிர்த்து கிராஞ்சி செந்தாரகை அணி மோதிக் கொண்ட மற்றொரு ஆட்டத்தில் இரணைமாதா நகர் சென்.மேரிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணியை எதிர்த்து வேரவில் கலைமகள் அணி மோதிக்கொண்ட பிறிதொரு ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை ஆட்டம் இழுபறிப்பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வேரவில் கலைமகள் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## ஐக்கிய வி.கழகத்தின் தொடரில் அரையிறுதிக்குச் சென்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜன. 27

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரில் நீர்வேலி ஐக்கிய அணியும், கச்சாய் வொலிகிங்ஸ் அணியும், அச்சுவேலி கலைமகள் அணியும், மட்டுவில் மோகனதாஸ் அணியும் அரையிறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெற்றுள்ளன.

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டங்களில், முதலாவது ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய அணியை எதிர்த்து கைதடி வளர்மதி அணி மோதியது. இதில் நீர்வேலி ஐக்கிய அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

கச்சாய் வொலிகிங்ஸ் அணிக்கும் நாயன்மார்கட்டு பாரதி அணிக்கும் இடையிலான இரண்டாவது காலிறுதியாட்டத்தில் கச்சாய் வொலிகிங்ஸ் அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

அச்சுவேலி கலைமகள் அணிக்கும் புத்தூர் தமிழ்மதி அணிக்கும் இடையிலான மூன்றாவது காலிறுதியாட்டத்தில் அச்சுவேலி கலைமகள் அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

மட்டுவில்மோகனதாஸ்அணிக்கும்சிறுப்பிட்டி கலையொலி அணிக்கும் இடையிலான நான்காவது காலிறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணி 2:0 என்றசெற்கணக்கில்வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோகோவிக், பெடரர் வெவ்வேறாக வெளியானது காலிறுதி விவரங்கள்



நடைபெற்றுவரும் ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதியில்மோதவுள்ள வீரர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன. பெடரர், ஜோகோவிக் இருவரும் வெவ்வேறு பிரிவுகளில் மோதவுள்ளனர்.

சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் மெல்பேர்ண் நகரில் நடைபெற்று வருகின்றது. இன்று நடைபெறவுள்ள இரண்டு காலிறுதி ஆட்டங்களில் முதலாவதில் சேர்பியாவின் ஜோகோவிக்கை எதிர்த்து ஜப்பானின் நிசிகோரி மோதவுள்ளார். இரண்டாவது காலிறுதியில் சுவிட்சர்லாந்தின் பெடரரை எதிர்த்து செக் குடியரசின் பெர்டிச் மோதவுள்ளார். நாளை இடம்பெறவுள்ள மற்றொரு காலிறுதியில் கனடாவின் ரோனிக்கை எதிர்த்து பிரான்ஸின் மான்பில்ஸ் மோதவுள்ளார். பிறிதொரு காலிறுதியில் இங்கிலாந்தின் முர்ரேயை எதிர்த்து ஸ்பெயினின் பெரர் மோதவுள்ளார். (ம)

# ரபாடாவின் அபாரமான வேகத்தில் சின்னாபின்னமானது இங்கிலாந்து



தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நேற்று முடிவுக்கு வந்த நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் ரபாடாவின் வேகப்பந்துவீச்சு கைகொடுக்க 280 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது தென்னாபிரிக்கா. 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:1 என்ற அடிப்படையில் இங்கிலாந்து கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 475 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக டிகொக் ஆட்டமிழக்காமல் 129 ஓட்டங்களையும், ஸ்ரீபன் குக் 115 ஓட்டங்களையும், அம்லா 109 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக ஸ்ரோக்ஸ் 4 இலக்குகளையும், புரோட், மொயின்அலி இருவரும் தலா இரு இலக்குகளையும், அன்டர்சன், வோக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக்களமிறங்கிய இங்கிலாந்து 342 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக ரூட் 76 ஓட்டங்களையும், அலிஸ்டர் குக் 76 ஓட்டங் களையும், மொயின் அலி 61 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக ரபாடா 7 இலக்குகளையும், மோர்கல் 2 இலக்குகளையும், டுமினி ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

133 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்கா 5 இலக்குகள் இழப்புக்கு 248 ஓட்டங்களைப்பெற்றிருந்தபொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக அம்லா 96 ஓட்டங்களையும், பவுமா ஆட்டமிழக்காமல் 78 ஓட்டங்களையும், டுமினி 29 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக அன்டர்சன் 3 இலக்குகளையும், புரோட், ஸ்ரோக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

முதல்இன்னிங்ஸில்முன்னிலை பெற்றது கைகொடுக்க இங்கிலாந்துக்கு இலக்காக 382 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. ஸ்ரீபன் குக் 5 ஓட்டங்களுடனும், கேல்ஸ் ஓர் ஓட்டத்துடனும், கொம்டன் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க தற்பொழுது இங்கிலாந்து 18-3. ரூட், ரெயிலர் ஆட்டத்தை சிறிது மாற்ற நினைத்தாலும் 20 ஓட்டங்களுக்கு மேல் அவர்களாலும் முடியவில்லை. ரபாடாவின் துல்லிய வேகத்தில் மீண்டும் சரிவு கண்டது இங்கிலாந்தின் துடுப்பாட்ட வரிசை. 101 ஓட்டங்களுடன் இங்கிலாந்தின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. முடிவில் 260 ஓட்டங்களால் ஆறுதல் வெற்றி பெற்றது தென்னாபிரிக்கா. 4 ஆட்டங்கள் கொண்ட தொடரை 2:1 எனக் கைப்பற்றியது இங்கிலாந்து. ஆட்டநாயகனாக ரபாடாவும், தொடராட்ட நாயகனாக ஸ்ரோக்ஸும் தெரிவானார்கள். (ம)

Vacancy English Language Lecturers Male/Female
(Full time) Basic Salary - 25,000/=
Interested Lecturers are requested to send your CV to
admin@elasjaffna.com
ELAS Sir.Pon Ramanathan Rd, Thirunelveli, Jaffna.
Contact No: 076 697 3040, 021 221 2410

500 மணித்தியாலத்தில் நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்
English Trainer Training Programme (Teacher Training)
மிகக் குறைந்த கட்டணத்தில்
New Batches Start on - 30.01.2016 சனி 9am (Weekend)
01.02.2016 திங்கள் 9am (Week days)
ELAS Sir Pon Ramanathan Rd,Thirunelvely, Jaffna.(பல்கலை எதிரில்)
Contact No: 076 697 3040, 021 221 2410

ஊடகவியல் (Media)
A/L Day Class
ஆசிரியர்: N. கஜிதரன்
(B.A (Hons) Spl.in.Media)
வாரத்தில் 5 நாள்களும்
பிரிவு I 7.00 - 9.00 am
பிரிவு II 9.00 - 11.00 am
Note: பாடம் மாறிக் கற்கும் மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் நடைபெறுகின்றன
கடந்த வருடம் பாடம் மாறி படித்த மாணவர்கள், உயர்தர பெறுபேறுகளோடு A சித்தியினை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.
பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.






(Consultant orthodontist)
(Consultant Facio Maxillary Surgeon)
மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)
388,
077 559 8006
151,
077 654 1731

## இல்ல மெய்வன்மைப் போட்டி

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் திருமதி எஸ். தேவராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவானந்த ராஜா, கௌரவ விருந்தினராக சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளர் திருமதி சுஜாதா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-422)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org